# கலை மலர்

## கோப்பாய்
## அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை.

மலர் 16 1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்ப் பயிற்சி மாலைகள்

இனிய தமிழில் செந்தமிழில்

ஆக்கப்பட்டவை

மாணவரது மொழிவளமும்

இலக்கிய நயமுஞ் சிறக்க உதவுபவை

கல்வி முறைப் புலமையாளரினதும்

மொழி வல்லாரினதும் பாராட்டுக்குகந்தவை

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையின்

அங்கீகாரம் பெற்றவை

*நூலாசிரியை:*

செல்வி க. சௌ. சந்தனநங்கை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*for* QUALITY PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA.  PHONE: 7067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் சகல விதமான சாய்ப்புச் சாமான்களும்
அலுமீனியப் பாத்திரங்களும் மொத்தமாகவும்
சில்றறையாகவும் கிடைக்கும்

வைத்திலிங்கம் அன் சன்ஸ்
45, கண்டி வீதி,
கிளிநொச்சி.

சாந்தி தியேட்டர்

வாருங்கள்

வந்து

பாருங்கள்

சாந்தி சினிமா
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்

வாழக் கல்மின்

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை

கோப்பாய்

மலர் 16 1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HOTEL PARADISE

யாழ் நகரில்
மக்கள் ஆதரவைப் பெற்ற ஸ்தாபனம்
"ஹோட்டல் பரடைஸ்"

**ஹோட்டல் பரடைஸ்**
91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வட மாகாணத்தில்

அச்சு வேலைகளுக்கு
சிறந்த இடம்

**விவேகானந்த அச்சகம்**
**புத்தகசாலை**

10-14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 517 தந்தி: பிறின்ரேஸ்

## YARL METAL SALES CENTRE

Whole salers and Retailers
with a guarantee for
fair prize

**YARL METAL SALES CENTRE**
6 & 30, Hospital Street,
JAFFNA.
Phone :- 7596

## மற்ரு பேணிச்சர்

நவீன வீட்டுத் தளபாட விற்பனையாளர்

சிறந்த தேக்கு முதிரைகளில்
கண்ணுடி மேசைகள், அலுமாரிகள்
ஸ்பிறிங் பதிக்கப்பட்ட தரமான குசன்
கதிரைகள் இவை எல்லாவற்றிற்கும்
யாழ்ப்பாணத்தில் சிறந்த ஸ்தாபனம்

"மற்ரு"
87, 137, கஸ்தூரியார் வீதி,
யாழ் நகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் ....



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இறைவணக்கம் ... ... ... | VII |
| 2. | கலைமலர்க் குழுவினர் ... ... ... | VIII |
| 3. | கலாசாலை விரிவுரையாளர் ... ... ... | IX |
| 4. | மலராசிரியர் உரை ... ... ... | XI |
| 5. | கலாசாலை கீதம் ... ... ... | XII |
| 6. | வித்தியாதிபதி ஆசியுரை ... ... ... | XIII |
| 7. | அதிபர் ஆசியுரை ... ... ... | XIV |
| 8. | அறிவும் வாழ்க்கை முறையும் ... ... ... | 1 |
| 9. | நமது நாடக மரபு ... ... ... | 4 |
| 10. | இருபதாம் நூற்றாண்டில் ... ... ... | 9 |
| 11. | பெண்ணுரிமையோடு பெண்மையுமே வாழ்க. ... ... | 13 |
| 12. | எமது நாட்டின் கல்விப் புரட்சி ... ... ... | 16 |
| 13. | நம் நாட்டு நடனங்கள் ... ... ... | 19 |
| 14. | டூயியின் கல்வி கருத்துக்கள் ... ... ... | 22 |
| 15. | இறைவன் எங்கே ... ... ... | 26 |
| 16. | நன்னூலார் கூறும் சொற்பாகுபாடும் இக்கால வழக்கும் ... | 27 |
| 17. | உழவனின் உற்றதுணை ... ... ... | 29 |
| 18. | இலங்கையில் கூட்டுறவு ... ... ... | 31 |
| 19. | இறைவன் எழில் ... ... ... | 36 |
| 20. | சர்வதேச மகளிர் ஆண்டு ... ... ... | 38 |
| 21. | பரிசில் பெறுவோர் ... ... ... | 41 |
| 22. | பொதுத் தேர்ச்சிச் சான்றிதழ் பெறுவோர் ... ... | 43 |
| 23. | கோவையிற் கோத்த புதிய முத்துக்கள் ... ... | 44 |
| 24. | கலாசாலை ஆளுமன்றம் ... ... ... | 55 |
| 25. | முத்தமிழ் மன்றம் ... ... ... | 56 |
| 26. | சமூகவியல் மன்றம் ... ... ... | 57 |
| 27. | English Literary Association ... ... ... | 58 |
| 28. | இந்து மன்றம் ... ... ... | 60 |
| 29. | கிறிஸ்தவ மன்ற அறிக்கை ... ... ... | 61 |
| 30. | நுண்கலை மன்றம் ... ... ... | 62 |
| 31. | உடற்பயிற்சி மன்றம் ... ... ... | 63 |
| 32. | மனையியல் மன்றம் ... ... ... | 64 |
| 33. | விவசாய மன்றம் ... ... ... | 65 |
| 34. | இராதா இல்லம் ... ... ... | 66 |
| 35. | சுவர்ணா இல்லம் ... ... ... | 67 |
| 36. | அருணா இல்லம் ... ... ... | 68 |
| 37. | கலாசாலை இருபத்தொன்பதாம் நல்லாண்டில் ... ... | 69 |
| 38. | இவ்வாண்டு இல்லப்போட்டிகளும் முடிபுகளும் ... ... | 71 |
| 39. | இவ்வாண்டு மனையறம் பூண்டோர் ... ... | 72 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Make your transport problems
ours By all means
Always on the move to service to you.
For fast and dependable transport service

*Contact:*
**RAJAKUMARI TRANSPORT SERVICE**
**83/2, Point Pedro Road.**
Telephone: 7565
Telegrams: Transport Jaffna

**THURAI**
All kinds of motor spares needed
by patrons are available
(R. G. Building)

யாழ்ப்பாணத்தில் மணிக்கூடு
திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்

**ரதி வாச் வேர்க்ஸ் அன்**
**ஸ்ரேர்சன்**

*Best Complements of*

**M/S. JAFFNA ELECTRICALS**

Electrical Contractors
and
Dealers in Electrical Goods

6, Stanley Road,
JAFFNA.

# M. G. M.
**றைக்கிளினர்**

சகல விதமான ஆடைகளும்
உரிய நேரத்தில்
றைக்கிளின் செய்து கொடுக்கப்படும்

**M. G. M. றைக்கிளினர்ஸ்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாகரக் கடவுள்

உடல் குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே மலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானேயவ் வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளிமை
கன்னெஞ்ச னுக்கெளிமையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

* * *

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடும்
நாட்டமே நாட்டத்துள் நிறைந்த
வானமே எனக்கு வந்துவந் தோங்கும்
மார்க்கமே மருளர்தாம் அறியா
மோனமே முதலே முத்திநல் வித்தே
முடிவில்லா இன்பமே செய்யுந்
தானமே தவமே நின்னைநான் நினைந்தேன்
தமியனேன் தனைமறப் பதற்கே

— தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்க் குழுவினர்

| | |
|---|---|
| காப்பாளர்: | திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி |
| ஆலோசகர்: | திரு. சி. குமாரசாமி |
| மலராசிரியர்: | திருமதி இந்திரவதனி, அரியரத்தினம் |
| செயலாளர்: | செல்வி கமலாதேவி நாகலிங்கம் |
| பொருளாளர்: | ,, கனகம்மா தம்பிப்பிள்ளை |
| செயற்குழுவினர் | திருமதி வடிவாம்பிகை கணேஷ் |
| | ,, புனிதராணி நவரத்தினம் |
| | ,, காமல் அருந்ததி யோகநாதன். |
| | செல்வி பேரின்ப ஜானகி செல்வத்துரை |
| | ,, சுசீலா, மகேசன் |
| | திருமதி சிவகாமன் திருச்செல்வம் |
| | ,, அன்ரன் மாணிக்கவாசகர் |
| | ,, புவனேஸ்வரி கருணாகரன் |
| | ,, சரஸ்வதி குலசிங்கம் |
| | ,, பாக்கியம் மகாலிங்கம் |
| | செல்வி செல்வராணி, வஸ்தியாம்பிள்ளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை விரிவுரையாளர்கள்

அதிபர் : திருமதி. இ. ஆனந்தக் குமாரசாமி M. A. M. Sc

விரிவுரையாளர்கள் :
திருமதி. சு. செல்லத்துரை B. A. Dip. Ed.
செல்வி. ச. சின்னப்பு M. Sc
திருமதி. ஜி. ஹூல் B. Sc. 1st Class Hons. (Lond)
திருமதி. மி சிவசுப்பிரதாஸ் B. A., F.R.G.S (Lond)
திருமதி. ம. திருச்சிற்றம்பலம் B. A
செல்வி ஜி. ஆர் செல்லப்பா 1st Class Eng. Trd. Certificate in primary Education (Cambridge)
செல்வி. த. முத்தையா B. Sc.
வித்துவான். சி. குமாரசாமி B. A., M. A. Q
திரு. இ துரைராசா B. Sc. (Cey.) Dip. Ed.
திரு. சோ. சந்திரசேகரம் B. Ed. Hons. (Cey.)
திருமதி. ஓ. செ. தர்மானந்தன், 1st. Class. Trd, Specialist in Home Science.
திருமதி. பா. சண்முகராஜா B. A
திருமதி லூ. லூ. யேக்கப், Art Teacher Certificate
திருமதி. டே. தருமராஜா P. T. I
திருமதி. பொ. பத்மநாதன், சங்கீதபூஷணம்

பகுதிநேர விரிவுரையாளர்கள்

சங் சகோதரி மேரி டானியெலா (ஞே. க.)
திரு. கே. வைத்தீஸ்வரன் (உடனலக்கல்வி)
திருமதி பரமேஸ்வரி வைத்தியலிங்கம் (விவசாயம்)
செல்வி. பத்மினி நமசிவாயம் (Dip. in Dancing) சங்கீத வித்துவான்
திரு. வி. கு. இராமலிங்கம், கட்புல செவிப்புலசாதன உதவியாளர், நூலகர்.

விடுதி மேற்பார்வையாளர்

செல்வி சத்திய விமலாதேவி, சின்னப்பு

எழுது வினைஞர்: செல்வி. இ. கணேசபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வள்ளுவர் நெறியில்
வையகம் வாழ்க'' — மில்க்வைற்




* மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு நீங்கள் அமோக ஆதரவு தந்தால் நாங்கள் நாட்டுக்கு நன்மை தரும் இலவச வெளியீடுகளைப் பரப்ப உதவியாக இருக்கும்.

* மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானவை.

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.

கிளை: 79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12

தொலைபேசி: 36063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர் உரை

பல கலைகளின் வண்ணக் களஞ்சியமாக நறுமணங்கமழ மலர்கின்றது கலைமலர்.

கற்றுணர்ந்த கலை வல்லுநர்களின் கருத்தோவியங்கள், உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைத் தூண்டும் கவிதைகள், கல்வி பற்றிய கருத்துக்கள், கோதையரின் ஆக்கங்கள் ஆதியன அன்பும் பண்பும் மிக்கோரின் ஆசியுடன் இம்மலரிலே பொலிகின்றன.

இம்மலர் நறுமணம் பரப்பப் பக்கபலமாக நின்று பல வழிகளிலும் ஊக்கிய அதிபர், நாடிய போதெல்லாம் நல்லுதவி தந்து வழிகாட்டிய ஆலோசகர், அறிவுயர் பேராசிரியர்கள், வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கள், அறிவு மணம் கமழும் கட்டுரை தந்துதவிய அறிஞர்கள், ஞானம்ஸ் புகைப் படத்துறையினர், விளம்பரங்கள் தந்துதவிய பெருந்தகையாளர்கள், ஒத்துழைப்பு நல்கிய கலைமலர்க் குழுவினர், உரிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தினர் அனைவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

வணக்கம்.

— திருமதி இந்திரவதனி அரியரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைக் கீதம்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரியர் கலாசாலை வாழ்க.

### அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரியர் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

1. அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம். (யாழ்)

2. ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம் (யாழ்)

3. தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம் மானம்
எண்டிசை புகழ வெங்கலாசாலை வாழ
இயன்ற நற்பணிகளைப் புரிவோம். (யாழ்)

4. அரியதெம் சேவை ஆண்டவன் சேவை
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
அறிவொளி யூட்டியே வாழ்க (யாழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாநிலக் கல்வி அதிபதி

# உயர் திரு. ஏ. எம். மஜீத் அவர்களின்

# ஆசியுரை

தமிழ் மாதர் குலத்தின் வரப்பிரசாதமான கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை ஆண்டுமலரான கலைமலர் என்ற சஞ்சிகைக்கு எனது ஆசியுரையை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண் பெண் என்ற இரு பாலாரின் இணைப்பே உலகத்தை இயக்குகிறது என்பதைச் சமய நூல்கள் மாத்திரமன்றி இலக்கிய நூல்களும் இந்நாட் சமுதாய வாழ்க்கையும் எடுத்துக் காட்டுகின்றன. அதனால், ஆண் சமுதாயம் மாத்திரம் கல்வியிலும் பண்பிலும் பயிற்றப்படுதல் ஒவ்வாது, ஒத்தோடும் பான்மைத்தாகாது என்பதையுணர்ந்த அறிஞர் பெண் சமுதாயமும் கல்வியிலும் பண்பிலும் வளரவேண்டுமெனப் பல்லாண்டுகளின் முன் உணர்ந்தனர். பண்டைக்காலப் புலவருள் ஔவையார் காக்கைபாடினியார் போன்றோர் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்நாட்டிலே' என்ற தத்துவத்தைத் தம் புலமைத் திறமையாற் காட்டிச் சென்றனர். அர்த்தநாரீஸ்வர தத்துவம் எல்லோர்க்கும் விழிப்புணர்ச்சியைத் தருவதொன்றாகும். சமயங்கள் பலபடினும் அவற்றின் தத்துவங்கள் ஒன்றாகும் என்பதைச் சிந்தனையாளர் சித்திரிப்பது போல் ஆண் பெண் தத்துவங்கள் மகத்துவங்கள் சமயத்திற்குச் சமயம், சாதிக்குச் சாதி, நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுவதில்லை எனத் துணிந்தனர்.

எனவே வீடுமலர, நாடு செழிக்க மாதர் குலம் விரைவில் முன்னேற வேண்டியது முக்கியமாகும். ஆண்மை ஆளுமை ஆண்களுக்கு மாத்திரமன்றிப் பெண்களுக்குமுண்டென்பதைப் பல நாட்டுப் பிரதமர்கள் நிரூபித்து விட்டனர். உத்தியோக நாட்டமற்ற பெண்பிள்ளைகள் வீட்டு நிர்வாகத்தில் திறனுடையவராய்க் கிராமமுன்னேற்றத்தில் பங்கு கொள்பவராய் பக்குவப்படுத்தல் ஆசிரியர் கடமையாகும் முக்கியமாக ஆசிரியைகளின் கடமையுமாகும். ஆசிரியைகள் கல்வியின் சார்பில் சிறந்தோராய் இருப்பினே மாணவிகள் மாதராய்ப் பரிணமிக்கமுடியும். இவ்வித இலட்சணங்கள் கொண்ட ஆசிரியைகளைத் தோற்றுவிக்கும் பயிற்சிக் கலாசாலைகளில் கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி முன்னின்றுழைப்பதை யான் பூரண மனதுடன் போற்றுகிறேன்.

புதிய கல்வித்திட்டத்திற்கமையப் பயிற்சியளிப்பதோடு, கலை கைப்பணி சங்கீத நாட்டிய நாடகங்களிலும், பேச்சு கட்டுரைப் போட்டிகளிலும் பங்கு கொண்டு கற்றோரையும் மற்றோரையும் இம் மகளிர் கல்லூரி தம்மாட்டீர்த்தமையை அறிந்து இறும்பூதெய்துகின்றேன்.

மலரட்டும் மாதருலகம்

வளரட்டும் மகளிர் ஆசிரிய கல்லூரி

வடமாநிலக் கல்வி அதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஆசியுரை

"பெண்ணிற் பெருந்தக்க யாளவு" என்ற குறளின் ஒலியும் "போற்றி தாய்" எனப் புகன்ற பாரதியின் கீதமும் ஒன்றிணையும் நாதமெனத் தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, தரணியெங்குமே கேட்பதை இந்த மகளிர் ஆண்டு வலியுறுத்துகின்றது. பெண்மையின் மென்மைக்குள் பொதிந்துள்ள சக்தி அன்று மட்டுமல்ல இன்றும் உணரப்படுகின்றது. என்பதை இவ்வாண்டுப் பிரகடனம் கூறுகின்றது. பெண்ணின் சேவையும் தேவையும் குடும்பத்தின் தனியுரிமையல்ல, சமூகத்தின் பல துறைகளுக்கும் அவை மிக இன்றியமையாதன.

இன்றைய வாழ்க்கையின் சகல பிரச்சினைகளுக்கும் அறிவின் பெருக்கமே திறவுகோலாக அமைந்துள்ளது எனச் சென்றாண்டு கருதினோம். ஆனால் அத்திறவுகோல் எங்கே யார் கையில் இருக்கவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பவர் மிகச்சிலரே. பெண்ணின் வளைக்கரமே இத்திறவுகோலைத் தாங்க வேண்டும். என்பதை உணர்ந்தவர்களும் மிகச் சிலரே. அன்பு, அம்கிசை, பொறுமை, தியாகம், செயற்றிறன் முதலிய பல்வேறு பண்புகளின் நிலைக்களனாகிய பெண்ணே சமூகத்தின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் ஆற்றல் மிகுந்தவள். பெண்மையின் நற்பண்புகளாகிய திறவுகோற் கோவையைத் தாங்கி எம் கோவை மகளிர் பயிற்சிபெற்று வெளியேறுகின்றனர். வாழ்க்கையின் எந்தப் புகமுடியாத நுழைவாயிலையும் திறக்கக் கூடிய சக்தி மிக்க திறவுகோல்களைப் பெற்றுச் செல்லும் கோவை மகளிர்க்கு என் உளம் கனிந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.


அவர்களின் திறமைகளைப் படம் பிடித்துக் காட்டும் கல்லூரி வெளியீடாகிய கலைமலர் இவ்வாண்டும் தனக் கேயுரிய சிறந்த பண்புகளுடன் மலர்கின்றது. அதற்கு நல்லாசி வழங்குவதில் நான் மகழ்ச்சியும் பெருமையுமடைகின்றேன்.

இ. ஆனந்தக்குமாரசாமி
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் வாழ்க்கை முறையும்

பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி

( தலைவர், யாழ் வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம் )

''அறிவு'' என்னும் சொல் பொதுவாக புத்தி, ஞானம், கல்வி என்பவற்றைக் குறிக்கும். தமிழிலக்கியங்களிலே இச் சொல் ஆன்மாவைக் குறிப்பதொன்றாகவும் உள்ளது. சுருங்கக் கூறின் புத்தியினால் பெறும் தூய ஞானத்தையே 'அறிவு' என்னும் சொல்லினாற் குறிக்கும் மரபொன்று இடைக்காலத்தில் எமது கல்வியுலகிலும் சிந்தனையுலகிலும் வளர்ந்துவிட்டது. ஆயினும் அறிவு என்னும் பதத்தின் கருத்து வளர்ச்சியை உற்று நோக்குமிடத்து, அது புத்தியை மட்டுமல்லாது பொறியுணர்வையும் அதாவது புலன்களினால் பெறும் உணர்வையும் குறிக்கிறது என்பது புலனாகும். அறிதல் என்பது அனுபவித்தலாகும். ''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்'' என்று குறள் கூறும் பொழுது அறிதல் புலனுணர்வையே குறிப்பதாயுள்ளது. அதுபோலவே அறிதல் என்பது செயல் முறையினாலும் பயிற்சியினாலும் தெரிந்துகொள்வதையும் குறிக்கும். அறிவு பயிற்சியினால் பெறப்படுவது என்பதையே

அளவு அறிந்தார் நெஞ்சத்து
அறம் போல நிற்கும்
களவு அறிந்தார் நெஞ்சில் கரவு.

என்னும் குறளில் (288) காண்கிறோம், 'களவு அறிந்தார்' என்பதற்குக் களவையே பயின்றவர் என்பது பொருளாம்.

ஔவையார் கூற்றும் இங்கு நினைவுகூரத்தக்கதே.

'' சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொருகல்வி மனப்பழக்கம்...''

அறிவைப் பற்றி இவ்வாறு நாம் சிந்திக்கும் பொழுது 'புலமை' என்னும் சொல்லும் நமது நினைவுக்கு வராமற் போகாது. 'புலமை' என்ற சொல்லும் கல்வி, ஞானம் ஆகியவற்றைக் குறிக்கும் சமயச் சார்புடைய தமிழிலக்கியங்களிலே 'புலமை' மெய்ஞ்ஞானத்தைக் குறிப்பதாயுள்ளது.

ஆயினும் 'புலமை' என்னும் சொல்லின் வரலாற்றை ஆராய்ந்தால், புலன் புலம் ஆகிய சொற்கள் தொடக்கத்திலே தூலமான பொருள்களைக் குறித்தமை தெளிவாகும். புலம் எனும் சொல் வயல் இடம், திக்கு, மேட்டு நிலம், உடலுறுப்பு முதலியவற்றையும் குறிப்பதைப் பழந் தமிழ் நூல்கள் வாயிலாக நாம் அறியக் கூடியதாக உள்ளது. ஆதி மனிதன் அனுபவத்தின் அடிப்படையிலே தனது அறிவை வளர்த்துக் கொண்டான். திக்கு, மேட்டுநிலம், இடம், வயல் என்பன அவனது தொழில்களோடு நெருங்கிய தொடர்புடையன. இச்செய்தி கூர்ந்து கவனிக்கத்தக்கது.

உழைப்பு உடல் சம்பந்தமானதாய் இருந்ததால் அதனடியாகப் பெற்ற அறிவையே ஆதி மனிதன் அதிகமாகப் பெற்றிருந்தான். எனவே 'புலம்' எனும் சொல் அறிவைக் குறித்தபோதும் இந்திரியங்களையும், இந்திரிய உணர்வையும் குறித்தமை மனங்கொள்ளத்தக்கது. தமிழில் மட்டுமன்றி உலகின் வேறுபல மொழிகளிலும் இத்தகைய ஒரு வளர்ச்சியை நாம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலே உடலுழைப் போருக்கும், ஆய்வறிவாளருக்கும் இடையே ஏற்றத்தாழ்வுகள் எழுந்தன. இவை சமுதாயத்தில் இருந்த பொருளாதார அமைப்பு வேறுபாடுகளின் சிந்தனை ரீதியிலான பிரதிபலிப்பேயாகும். உடலுழைப் பின்றி ஓய்வாக இருந்தோர் ''தூய' சிந்தனையில் ஈடுபட வாய்ப்புடையோராயும் நித்தம் உழைத்து அலுப்பவர்கள் சில் லறை வேலைகள் பார்ப்போராயும் கருதப்பட்டனர். ஓய்வு வாய்க்கப் பெற்றவர்களே சமுதாயத்திலே உயர்நிலையிலும் இருந்தமையால் அவர்கள் சிந்தனையே சிறப்புடையதாய்க் கணிக்கப் படலாயிற்று. இத்தகைய போக்கின் தருக்கரீதியான விளைவாகவும் முடிவாகவும் செயல் முறைகளிலிருந்து விடுபட்ட புத்தியைக்கொண்டு மாத்திரம் செயற்படுகிற கல்விமுறை செல்வாக்குப் பெற்றது.

தமிழர் சமுதாயத்திலே நிலமானிய அமைப்பு நிலவிய காலத்தில் ஏற்றத் தாழ்வுகள் உறுதிபெற்றன, நிலமானிய அமைப்புக்கு அரணுகச் சாதிமுறையும் வந்து சேரவே சமூக பொருளாதார ஏற் றத்தாழ்வுகள் நியதிகளாகக் கருதப்பட்டன. உழுவோர் உழுவித்துண்போர் என்னும் வழக்கு இவ்வேற்றத்தாழ்வு களைத் துலக்கிக் காட்டுவதாயுள்ளது. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளினுல் உழைப் போர் வெறும் உழைப்போராயும் ஓய்வாக இருப்போர் கலை, கல்வி, தத்துவம் முதலிய துறைகளிலே ஈடுபடுவோராயும் இருக்கும் ஒரு நிலை தோன்றியது. கொள்கைக்கும், நடைமுறைக்கும், கல்விக்கும், பயிற்சிக்கும் இடைவெளி ஏற்பட்டது. இத்தகைய இடைவெளி இன்றுவரை எமது சமுதாயத்தில் நிலவி வந்துள்ளது. இதன் பாரதூரமான விளைவுகளைப் பலரும் அறிவர்.

இன்று எமது நாட்டிலே கல்வித் துறையில் சிலபல மாற்றங்கள் கொள்கை யடிப்படையிலே கொண்டு வரப்படும் பொழுது, இவை இன்றைய அரசின் சமூக, அரசியல், பொருளாதார இலட்சியங்களின் பிரதிபலிப்பே என்பது கூறுமலே விளங்கும். நாட்டு முன்னேற்றம் சமுதாய, சமத்துவம், மக்களுக்குள் சம சந்தர்ப்பம், தொழில் வளர்ச்சி என்பன இன்றைய யுகத்தின் இன்றியமையா இலட்சியங்கள். இவற்றையெல்லாம் செயலுருவாக்கிக் காண்பதற்குக் கல்வி கருவியாக அமைதல் வேண்டும் சிறுவயதிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பு வரை கல்வி, வாழ்க்கையோடு தொடர்புடையதாக அமைதல் வேண்டும். என்பதே இன்றைய கல்வியாளரின் குறிக்கோளாகும்' தொழில் முன்னிலைக் கல்வியிலிருந்து தொழிற்சார்புடைய பல்கலைக்கழகப் பட்டங்கள்வரை கல்வி திட்டமிடப்பட்ட வகையில் நடைபெறுதல் தவிர்க்கமுடியாதது.

வகுப்பறைகளிலே மாத்திரம் நூல்களின் துணைகொண்டு படிக்கும் கல்வி ஒருதலைப்பட்சமானது. செயல் முறையோடு இணைந்த கல்வி வாய்க்கப்பெற்றால் ஒருவர் எங்கிருந்தாலும் தத்தம் சூழ்நிலைக்கேற்ப அறிவை விருத்தி செய்து கொள்ள வாய்ப்பு இருக்கும் அதோடு கருத்துக்களாகக் கற்றுக்கொண்டவற்றை வாழ்க்கைப்பிரச்சினைகளோடும் சமுதாயப் பிரச்சினைகளோடும் தொடர்புபடுத்தவும் கல்வி துணைசெய்தல் வேண்டும்.

கல்வித் துறையில் இம்மாற்றங்களை உண்டாக்குவது தனித்த ஒரு முயற்சியாகவும் இருக்கவியலாது. முந்திய சந்தர்ப்பங்களில் கல்வியமைப்பில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டபொழுது அவை பள்ளிக்கூடங்கள் சம்பந்தப்பட்டன என்றே கருதினுர்கள் பலர். ஆனுல் இன்றோ கல்விச் சீர்திருத்தமானது நாட்டின் பொதுவான வளர்ச்சித் திட்டத்தின் ஒரு கூறு என்பதும் அரசியல், பொருளாதார கலாச்சார மாற்றங்களிலிருந்து அதனை வேருகக் காணமுடியாதென்பதும் கூடுதலாக உணரப்பட்டு வருகிறது. இதுவே மிக முக்கியமான கலாசார மாற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகையிலும் இன்றைய புதிய கல்விக் கொள்கையை விளக்கலாம், கல்வியென்பது ஒருவரது உள்ளார்ந்த திறமைகளை வெளிப்படுத்தும் தூண்டு சக்தியாய் அமைதல் வேண்டுமென்பர். ஆனால் கடந்த பலகாலமாக நிலவிவந்திருக்கும் கல்வி முறையானது ஆரோக்கியமற்ற போட்டி மனப்பான்மையையும் ஆக்கபூர்வமான ஆற்றல்களையும் அமுக்கிவிடும் விரக்தி மனப்பான்மையையும் வளர்த்து வந்துள்ளது. இது கல்வியின் மறுதலிப்பு ஆகும். இந்நிலை உண்டானதற்கு அடிப்படைக் காரணம் தொழிலில் இருந்து விடுபட்ட கல்வியே யாகும். எனவேதான் இம்முறை விரைவாகவும் வேண்டியமுறையிலும் மாற்றியமைக்கப்படுதல் அத்தியாவசியமாகிறது:

உற்பத்திக்கான போராட்டத்தைப் போலவே கொள்கைக்கான போராட்டமும் வன்மையான வாதப்பிரதிவாதங்கட்கும் கடுமையான எதிர்ப்பு இயக்கங்களுக்கும் இடம் தருவது, ஆனால் இதில் நாம் வெற்றியடைந்தே ஆகவேண்டும்.

---

*நீங்கள் எப்பதவியிலிருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல இருக்கிற பதவியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம் பதவி உங்களுக்குப் பெருமை தருவதில்லை நீங்கள்தான் பதவியைப் பெருமைப்படுத்த வேண்டும்.*

பெட்ருர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாடக மரபு

**பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா**
(பீடாதிபதி, மானிடவியற்பீடம், யாழ் வளாகம், இலங்கை)

நாட்டுக் கூத்துக்கள் நம் முன்னோர் நமக்களித்த கலைச் செல்வம். மேனாட்டார் ஆதிக்கத்தின் போது, நாம் மேலைத் தேச நவீன முறைப்படியான நாடக மரபொன்றையும் பெற்றுள்ளோம். இன்று இது கூடுதலாகச் செல்வாக்குப் பெற்றுள்ளது எனினும் பழைய மரபு பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலே இன்னும் அழியாது அங்குமிங்குமாகப் பேணப்பட்டும், மாற்றப்பட்டும் வருகின்றது. நமது நவீன சமுதாயத்திலே இப்பழைய மரபுக்கு எத்தகைய இடமுண்டு? இம் மரபை எப்படி வளர்க்கலாம்? இத்தகைய கேள்விகள் இன்று கலைவளர்ச்சியில் ஈடுபடுவோர் மனதிலே எழுகின்றன.

நாடகம் என்பது நெடுங் காலமாக மனித சமுதாயத்தில் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ள ஒரு கலையாகும். இது ஆதி மனிதருடைய சமயக் கிரியைகள், வழிபாட்டுமுறை ஆகியவற்றிலிருந்தே தோன்றியது. தம்மைச் சூழ நல்ல சக்திகளும் தீயசக்திகளும் இருப்பதாக ஆதி மனிதர் நம்பினர். ஆகவே நன்மை செய்யும் தெய்வங்களுடைய அருளைப் பெறுவதற்கும் தீமை புரியும் பேய்களைச் சாந்தப்படுத்துவதற்கும் சில கிரியைகளை நடாத்தினர். இச் சிக்கலான கிரியைகளை நடத்தியபோது ஒரு முக்கிய நோக்கம் இருந்தது. ஒருவருக்கு அன்றாட வாழ்க்கையிலே ஏற்படும் அச்சங்களிலிருந்தும், உறுதியற்ற நிலையிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளும் நோக்கமே அது. அவ்வாறு விடுதலையடையக் கூடிய வகையிலே ஒருவரை உருக் கொள்ள வைப்பதற்காக மந்திரம் உச்சரிக்கப்பட்டு ஆட்டங்கள் நடத்தப்பட்டன. அதிலே பங்குபற்றியோர் இதன் விளைவாக உருக்கொண்டு ஒன்றில் தாம் சாந்தப்படுத்த விரும்பிய பேயாக அல்லது தமக்கு அருளைக் கொடுக்க வேண்டிய தெய்வமாக மாறி, அதன் குணங்களையும், போக்குகளையும் பின்பற்றி நடித்தனர். இவ்வாறு நடிப்பது, தம்மைப் பேயாக அல்லது தெய்வமாகக் கருதி நடப்பது. ஆகிய பண்புகள் நாடகக் கலைக்குரிய அடிப்படைப் பண்புகளாகத் தோற்றம் பெற்றன.

இப்படியாக ஆதிச் சமுதாயத்திலே சமயக் கிரியைகளுடன் ஆரம்பித்த பண்புகள் பின்னர் கூத்துக்களை உருவாகுவதற்கு உதவின. இந்நிலையிலிருந்து ஓரளவுக்கு வளர்ச்சி பெற்ற கட்டத்தையே தமிழ் நாட்டிலே சங்க காலத்தில் காணமுடிகின்றது. சங்க நூல்களில் வர்ணிக்கப்பட்டுள்ள குரவைக் கூத்துப் போன்றவை நாடகக் கலையின் வளர்ச்சியிலே ஒரு கட்டத்தைக் குறித்து நிற்கின்றன.

இலங்கையிலே வழங்கிவரும் நாட்டுக் கூத்துக்கள் பல்வகைப்படும். தமிழ்ப் பிரதேசங்களிலே வடமோடி, தென்மோடி, விலாசம், கூத்து என்று பலவகை வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் யாழ்ப்பாணத்திலே விலாசக்கூத்து பிரபல்யம் பெற்ற ஒரு கூத்து வடிவமாக இருந்து வருகின்றது. ஏனைய கூத்து வடிவங்கள் பழைய அமைப்பில் இல்லாது பெருமளவு மாற்றமடைத்தவையாய் இன்று காணப்படுகின்றன. குறிப்பாகக் கத்தோலிக்கர் மத்தியிலே இன்றும் பழைய நாட்டுக் கூத்துக்களாகப் பல கூத்துக்கள் நடிக்கப்பட்டு வந்தாலும் அவற்றின் வடிவம் மாறிவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு வெளியேதான் பழைய வடிவங்கள் பெரிதும் பேணப்பட்டுள்ளன என்று கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு நாட்டுக்கூத்து

மட்டக்களப்பில் நடிக்கப்படும் நாட்டுக் கூத்துக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று வடமோடி. மற்றது தென்மோடி. வடமோடி என்பது பெரும்பாலும் வடநாட்டுக் கதைகளைக் கொண்டதாகவும் போர் முடிபினைக் கொண்டதாகவும் இருக்கும். இதனால் வடமோடிக் கூத்துக்களிலே வடநாட்டுச் சாயலே கூடுதலாகக் காணப்படுகின்றது. இவற்றிலே தமிழ்நாட்டுக்கும் புறம்பான இசைமுறைகளும் கலந்திருக்கும். ஆடல்கள், தாளக்கட்டுகள், உடை என்பவற்றைப் பொறுத்தும் வடமோடிக் கூத்துக்களிலிருந்து வேறுபடும்.

தென்மோடிக் கூத்துக்கள் பொதுவாகக் காதற்சுவை உடையனவாய் இருக்கும். அத்துடன் இவை மங்களகரமான முடிபினைக் கொண்டவையாய்க் காணப்படும். இவற்றிலே பழைய இசை முறைப் படியே பாடல்கள் அமைந்திருக்கும் இவ்வாறாகத் தென்மோடியில் கூடுதலாகத் தென்னாட்டுச் சாயலே இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பு நாட்டுக் கூத்தின் அமைப்பு முறையைப் பொதுவாகப் பின்வருமாறு வர்ணிக்கலாம்.

இதற்கென அமைக்கப்பட்ட களரி எனப்படும் மேடையிலே கிரியைகள் சிலவற்றை நடத்திய பின், அண்ணாவியார் கடவுள் வணக்கம், அவையடக்கம் ஆகியவற்றைப் பாடிக் கூத்தினை ஆரம்பித்து வைப்பார்.

கட்டியகாரன் களரியிலே தோன்றக் கூத்தும் ஆரம்பமாகும். கட்டியகாரனுக்குப் பின்னர் கதையின் போக்கினுக்கு ஏற்ப நடிகர்கள் தனித்தனியாகவோ கூட்டமாகவோ வருவர். கூட்டமாக வருவதைக் கொலு என்பர். நடிகர் முதன் முதலாக வரும்போது திரைச்சீலை பிடிப்பர். திரையை நீக்கியபின், ஆட்டம் ஆரம்பமாகும். நடிகர் களரிக்கு வந்தவுடன் பாடப்படும் பாட்டு வரவுப் பாட்டு எனப்படும். வடமோடியிலே நடிகர் தன்னைத்தானே அறிமுகப்படுத்தி வைக்க, தென்மோடியில் அண்ணாவியார் நடிகரை அறிமுகப்படுத்துவார். மத்தளமும், தாளங்களும் ஒலிக்க அண்ணாவியார் தாளக் கட்டுக் கூற, நடிகர்கள் பல்வகை ஆட்டங்களை ஆடிப்பாடுவர்.

இந்த ஆட்டங்கள் பலவகைப்படும். முத்திரைப் பல்லவம், காலமேற்றுதல் ஆகிய சில ஆட்டங்கள் வடமோடிக்கு உரியவை. வடமோடியில் தித்தித்தா என்ற துரித ஆட்டம் இடம்பெற, தென்மோடியில் தெய்த்தானா என்ற துரித ஆட்டம் இடம்பெறும். இக் கூத்துக்களில் இடம்பெறும் வேறு ஆட்டங்களுள் உலா, பொடியடித் தாளம், வீசாணம், எட்டு, குத்தடித்தாளம், இரண்டடிச்சுருதி, நாலடி, குத்துமிதி, பாய்ச்சல் ஆகிய ஆண் பாத்திரங்களுக்குரிய ஆட்டங்கள் குறிப்பிடத் தக்கவை. ஒய்யாரம் தட்டடித் தாளம், தட்டிநிரைமாறல், அடந்தை குத்துநிலை என்ற ஆட்டங்கள் பெண்களுக்குரியவை.

தென்மோடியிலே, உடைகள் பாரங் குறைந்தவையாய் பட்டினாலும், மணியினாலும் செய்யப்பெற்று இருக்க, முடிகள் பூ முடிகளாக அமையும். வடமோடி உடைகள் பாரமானவை. அவற்றிலே முடிகளும் பாரமான பெரிய முடிகள்; நடிகர்கள் அணிகின்ற 'கர உடுப்பு' என்ற ஒரு வகை உடுப்பும் உண்டு. இடுப்பில் ஒடுக்கமாகவும் கீழே போகப் போக விரிந்து வட்டமானதாகக் கரப்புப் போன்று இருக்கும். இன்னொரு உடுப்பு 'மர உரி' எனப்படும்.

### மன்னார்

மன்னார்ப் பகுதியில் நடிக்கப்படும், நாட்டுக் கூத்துக்கள் வடபாங்கு, தென் பாங்கு என வகுக்கப்படுகின்றன. வடபாங்கு விருத்தத்தைக் காப்பாகக் கொள்ள, தென் பாங்கு வெண்பாவைக் காப்புக் கவியாகக் கொள்ளும். இரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கு மிடையிலே இசைமுறையிலே வேறு பாடுண்டு. நடிகர் ஒருவர் மேடையிலே வந்து தோன்றுதல் வரவு எனப்படும். அவர் வரும்போது பாடப்படும் அறிமுகப் பாட்டும் வரவு அல்லது வரவு கவி எனப் படும். வட பாங்கிலே பாத்திரம் பல முறை தோன்றினாலும் ஒரு வரவே பாடப் படும். ஆனால் தென்பாங்கில் ஒவ்வொரு வரவுக்கும் பாடப்படும். வடபாங்கிலே வரவுடன் ஆடல் தரு என்ற ஒரு பாட்டும் பாடப்படும். இவ்வாறாக வேறுபடும் வட பாங்கை யாழ்ப்பாணப் பாங்கு என்றும், தென்பாங்கை மாதோட்டப் பாங்கு என் றும் கூறுவர்.

இக் கூத்துக்களிலே சிந்து, கவி, வெண்பா, கலிப்பா, கழிநெடிலாசிரி யப்பா, விருத்தம், தாழிசை என்பன கலந்து வரும்.

மன்னாரில் ஒன்றுக்கு மேற்பட்ட இர வுகள் ஆடப்படும் கூத்தையே நாடகம் என்பர். ஓர் இரவு ஆடப்படும் ஒருவகைக் கூத்தை வாசாப்பு என்பர்.

நாடகமேடை களரி எனப்படும். நடி கர்கள் முன்னர் பயன்படுத்திய ஒருவகை உடை 'கல்லுடுப்பு' எனப்படும்.

## முல்லைத்தீவு

முல்லைத்தீவில் ஆடப்பட்டு வரும் கோவலன் கூத்து பல்வேறு இடங்களிலே பல்வேறு அண்ணாவியர்களால் இயக்கப் பட்டு வருகின்றது. இடத்திற்கிடம் வேறு பாடுகளும் இருக்கின்றன. இரவு முழுவ தும் நடிக்கப்படும் இக் கூத்து, கண்ணகி வழிபாட்டுடன் ஒன்றி நடாத்தப்படுகின் றது. கோயில் ஒன்றின் முன்பாக வட்ட வடிவமான மேடை அல்லது களரி அமைக் கப்பட்டு, அதிலே கூத்து நடக்க, மக்கள் அதைச் சுற்றிவர இருந்து பார்ப்பர். களரியிலே பாத்திரம் ஒன்று தோன்றி நடிக்கு முன், பாத்திரத்துக்கு முன் திரை பிடிக்கப்படும். களரியின் மத்தியிலே அண் ணாவியார் மத்தளம் அடித்து விருத்தப் பாட்டு மூலம் நடிகரை அறிமுகம் செய்து வைப்பார். பின்னர் கால்களிலே சதங்கை கட்டியவராய் நடிகர் ஆடிப்பாடுவார். இவர் பாடிய பாடல்களைப் பின்னணிப் பாடகர்களும் பாடுவார்கள். நடிகருடைய ஆட்டங்களுள் நாலடித் தாளம், எனப் படும் ஆட்டம் குறிப்பிடத் தக்கது

ஒவ்வொரு பாத்திரமும் அணியும் உடை, முடி ஆகியவற்றைக் கொண்டு பாத்திரத்தை அடையாளம் கண்டுகொள் வது இலகுவாக இருக்கின்றது. பாண்டிய மன்னன், மந்திரி போன்றவர்கள் வட்ட உடைகளையும், பருத்த முடிகளையும் அணி வர். இவ்வுடைகள் பாரமற்ற மரங்களி னாலே செய்யப்படுகின்றன.

## காமன் கூத்து

மலையகத்திலே, சிறப்பாக இந்தியத் தோட்டத் தொழிலாளர் அதிகமாக வாழும் இடங்களிலே, காமன் கூத்து எனப்படும், ஒரு கூத்து வகை ஆடப் படும். இக் கூத்து மன்மதனையும், ரதி யையும் நாயக நாயகியாகக் கொண்டு நடிக்கப்படுகின்றது.

வருடந்தோறும் நடிக்கப்படும் இக் கூத்து, குறிப்பாக மாசி மாதத்திலேதான் நடத்தப் படுகின்றது. இக் கூத்தினைப் பழக்கி நடத்துவோர் 'காமன் கூத்து வாத்தியார்' எனப்படுவர். மேளம், தப்ளா, ஆகிய வாத்தியக் கருவிகள் இதிலே பயன்படுத்தப்படும்.

காமன் கூத்து பத்தொன்பது நாட் களுக்குத் தொடர்ச்சியாக நடத்தப்படு கின்றது. முதல் நாள் சில சமயக்கிரியை கள் நடத்தப்பட்ட பின் சிவன், மன் மதன், ரதி ஆகிய பாத்திரங்களுக்கான நடிகர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பழக கப்படுவர். பின்னர் வீடுவீடாக அவர் கள் கூத்தாடிச் செல்வர். அப்பொழுது பெருந்தொகையான பாடல்கள் பாடப் படும். பதினாறும் நாள் இரவு பல வேடிக் கைகளும், நிகழ்ச்சிகளும் இடம்பெறும். விடியற்காலை மூன்று மணியளவில் சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானது அம்பெய்தல் நடைபெறும். ஈஸ்வரனது தவத்தைக் குலைத்த மன்மதனை அவர் கொன்றிட, கணவனை இழந்து ரதி புலம்பியவாறு சப்ரம் ஏறி வீடுவீடாக வெள்ளை உடை அணிந்து செல்வாள். பின்னர் சிவனுடன் வாதாடும் நிகழ்ச்சி நடைபெறும். இறுதி நாளில் மன்மதன் உயிர் பெற்று எழும் நிகழ்ச்சியுடன் கூத்து முடிவடையும்.

## சிங்கள நாடகம்

சிங்கள நாட்டுக் கூத்தாகிய 'நாடகமக்' கூத்தில் நடிகர் குழுத் தலைவனாகிய 'பொத்தே குருணன்ஸே' என்பவன் 'கறலிய' எனப்படும் மேடையிலே தோன்றி 'பூர்ண விரிதுவ' அல்லது 'பொத்தே கவிய' எனப்படும். இஷ்ட தேவ ஆராதனையைப் பாடி நாடகத்தைத் தொடக்கி வைப்பர். நாடகக் கதையைப் பற்றிய சுருக்கமான குறிப்பும் இதில் இடம் பெறும். அதன்பின் பாடப்படுவது 'தோடாயம' அல்லது தோனடயம் எனப்படும். மீண்டும் தேவர்களுடைய வரத்தை வேண்டுவதே இதன் நோக்கம்.

இதன் பின் பஹிபூதயா என்பவன் மேடைக்கு வருவான். இவனுக்குக் கோமாளி, கோணங்கி என்ற பல பெயர்கள் உள. இவனுக்குப் பின் 'செல்லன்லமா' அல்லது 'செல்லப்பிள்ளை' எனப்படுபவன் வருவான். அதன் பின் மேளவாத்தியக்காரரும் பாடகர்களும் வருவார்கள் இறுதியாக மன்னர், அமைச்சர்களுடனும் பரிவாரத்துடனும் வருவார். இந்நிலையில் நாடகம் தொடங்கும்.

ஒவ்வொரு நடிகரும் மேடைக்கு வருமுன் ஒவ்வொருவரையும் பொத்தே குரு அறிமுகப்படுத்திக் கவிபாடுவார். இது 'பொத்தே கவிய' அல்லது 'இன்னிசைய' எனப்படும்.

இற்றைக்கு இருநூறு அல்லது இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து இந்த நாட்டுக் கூத்து வடிவம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது எனக் கொள்ள இடமுண்டு. ஆந்திரப் பிரதேசத்தில் வீதி நாடகம் என்றும், தமிழ் நாட்டில் தெருக்கூத்து என்றும் பெயர்பெறும் கூத்து வகைகள் நாடகப் பாணி அடிப்படையிலே நமது நாட்டுக் கூத்துடன் தொடர்புடையவை. தமிழ் நாட்டுக்கு அப்பால் கர்நாடகத்துக்குச் சொந்தமான யக்ஷகான நாடகம், வங்க தேசத்து யாத்ரா நாடகம், குஜராத்தின் (BAVAI) பவய் நாடகம், மகாராஷ்ட்ராவின் தமாஷா இவை எல்லாம் அடிப்படையளவிலே ஒரே நாடகப் பாணியைக் கொண்டவையே.

இப்படியாக ஈழத்துத் தமிழ்ப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்ட நாட்டுக் கூத்தானது சிங்கள மக்கள் மத்தியிலும் பரவியது. இது சிறப்பாக கத்தோலிக்க மதத் தொடர்பாலேயே பரவியது. தமிழ்க் கத்தோலிக்கர் இயற்றி நடித்த கூத்துக்களாகிய எஸ்தாக்கியர் நாடகம், ஊசோன் பாலந்தை, என்றிக் எம்பரதோர், செனகப் பூ, போன்ற நாடகங்கள் சிங்களத்திலும் பெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டன. இம்முயற்சியிலே பிலிப்பு ஸிஞ்ஞோ என்பவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத் தக்கது. இப்படிச் சிங்களத்திலும் வளர்ந்த நாட்டுக் கூத்து 'நாடகம்' என்ற பெயரைப் பெற்றது. இதிலே பெருமளவு தமிழ்ச் செல்வாக்கைக் காணலாம். பேராசிரியர் சரத்சந்திராவின் மனமே, ஸிங்ஹபாகு ஆகிய நாடகங்கள் இந்த நாட்டுக்கூத்து வகையைச் சேர்ந்தவையே. இக் கூத்தின் இன்றைய நிலை என்ன? வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே சிறு சிறு ஊர்களிலே இக் கூத்துக்கள் பேணப்பட்டு வந்துள்ளன என்பது உண்மைதான். பத்தாண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியினால் இந்நாட்டுக் கூத்துக்கள் பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளன. இதனால் ஒரு வகை மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. எனினும் நமது நவீன சமுதாயத்திலே நாட்டுக் கூத்துக்களுக்கு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளிக்கும் அளவிற்கு இந்த மறுமலர்ச்சி ஏற்படவில்லை. அப்படி ஏற்படாதிருக்கும் வரை இம்மரபு அழியாதிருக்கும் என்று கூறவும் முடியாது. இம் மரபினை மாற்றாது பேணவேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். பலர் இதனை மாற்றி நவீனப்படுத்தவேண்டுமென்கின்றனர். நாட்டுக்கூத்திலே ஈடுபட்டு வந்தோர் கருத்து இத்தகையதாகவே பெரும்பாலும் அமைகின்றது.

நமது கலை வாழவேண்டுமாயின் அது வளரவேண்டும். வளராத கலை வாழாது இறக்கும். வெறும் தொல் கலையாகத் தொல் பொருட் காட்சிச் சாலைக்குரியதாகிவிடும். அந்த நிலை நாட்டுக் கூத்துக்கு ஏற்படக்கூடாது. அது மெருகூட்டப்பட்டு நவீன படிவத்தைப் பெறக்கூடியது. அதனை முறைப்படி செய்தால் இக் கலை தொடர்ந்து நமது சமுதாயத்தில் முக்கிய இடத்தைப் பெற்று வாழும்.

---

*எவர் தமக்கு மட்டுமே சமைத்துக் கொள்கிறார்களோ அவர்கள் பாவத்தை உண்கிறார்கள்.*

— கீதை

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றூண்டில் சிறுகதை வளர்ச்சி

திரு. ப. அரியரத்தினம் (பீ. ஏ. இலங்கை)

தமிழ்ச் சிறுகதை வரலாற்றைக் கால வளர்ச்சியின்படி நாம் மூன்று கால கட்டமாகப் பிரிக்கலாம். முதலாவது கட்டம் ஆயிரத்துத் தொளாயிரம் ஆண்டிலிருந்து ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டுவரையாகும். இக்காலம் சிறுகதையின் பரிசோதனைக் காலமெனலாம். இரண்டாவது கட்டம் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதிலிருந்து ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு வரையாகும். இக்காலம் சிறுகதை தனி ஒரு இலக்கிய வகையாக நிலை பெற்றுச் சில சாதனைகளைத் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய காலமாகும். மூன்ருவது கட்டம் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதிலிருந்து இற்றைவரையாகும். இக்காலம் சிறுகதை வளமாக வேகமாக வளர்ந்து வரும் ஒரு காலமாகும்.

19-ம் நூற்றூண்டில் தமிழருக்குக் கிடைத்த ஆங்கிலப் பயிற்சியே தமிழ்ச் சிறுகதை ஆக்க வரலாற்றின் முதல் துடிப்பாகும். ஆங்கில மொழியில் சிறப்பிடம் பெற்றுவந்த சிறுகதை இலக்கியத்தை நம் முன்னோர் அறிந்தபோது அந்த இலக்கிய வகையைத் தமிழிலும் உண்டாக்க வேண்டும் எனும் ஆர்வம் ஏற்பட்டது. இந்த மனவெழுச்சி இருபதாம் நூற்றூண்டில் ஒரு தெளிவான உருவம் பெற்றது. இந்த உருவத்தை அளித்த பெருமை வ. வே. சு. ஐயருக்கே (1881-1925) உரியது. ''மங்கையர்க்கரசியின் காதல் தமிழில் முதல் வந்த சிறுகதையாகும். 18-ம் நூற்றூண்டில் வீரமாமுனிவரது 'பரமார்த்த குருகதை', 19-ம் நூற்றூண்டில் ஈழத்தில் உதித்த 'கதா சிந்தாமணி' என்பனவும் சிறு கதைகளே. ஆயினும் இவ்விரு சிறுகதைகளும் புதிய இலக்கிய வகையை உருவாக்குகிறோம் எனும் உணர்வுடன் எழுதப்படவில்லை. வ. வே. சு. ஐயர் காலத்தில் அ. மாதவையா, இராமானுஜநாயுடு, சுப்பிரமணிய பாரதி ஆகியோர் சிறுகதை எழுதினுலும் வ. வே. சு. ஐயர் பெற்ற வெற்றியளவு இவர்கள் பெறவில்லை.

வ. வே. சு. ஐயர் கதைகள் உயர் தரத்தன. அவரது படைப்புகளிலே மனித மேதை, தெய்வீகம், துயரம், வீரம் என்பன இழையோடுகின்றன. அவர் மனம் இலட்சியத்தை உருவாக்குவதில் ஒன்றியது. ஆனுல் ''மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை, அவர் நாடும் வெற்றியை இலக்கியமாக உருவாக்குவதற்கு வெகு காலம் சென்றது'' எனப் புதுமைப்பித்தன் கூறுகிருர். இக்குறையைப் போக்கும் இலக்கிய வளர்ச்சி 1930 ல் ஏற்பட்டது. இவ்வெழுச்சியும் உடனடியாகப் பயன் அளிக்கவில்லை. கல்கி, எஸ். எஸ். வி. போன்ற சிலர் இயல்பும் இயல்பல்லாததும் கலந்த நெறியில் எழுதிச் சிறுகதையை நகைச்சுவைக்கும் பொழுது போக்குக்குமாகப் பயன்படுத்தினுர்கள். அவர்கள் அதை ஒரு பிரசாரக் கருவியாகக் கொண்டனர்.

இவர்களைத் தொடர்ந்தே தமிழ்ச் சிறுகதை புதிய இலக்கியத்திற்குரிய யதார்த்தத் தன்மையும் தனித்துவமும் பெற்றது. இவ்வகையில் புதுமைப் பித்தன், பி. எஸ். இராமையா, பிச்சமூர்த்தி போன்ருேர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தமது காலச் சமூகப் பிரச்சினைகளையும் பாத்திரங்களையும் யதார்த்த நோக்கில் அணுகிச் சிறுகதைகளை யாத்தனர். எனினும் ''புத்திலக்கியத் துறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை மனிதர்'' எனும் பெருமை புதுமைப்பித்தனுக்குக் கிடைத்தது போல் வேறு எவருக்கும் கிடைக்கவில்லை. ''வாழ்விற்குப் பொருள் கொடுப்பது கலை, சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பது'' எனப் புதுமைப் பித்தன் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்தன அவரது படைப்புகள்.

புதிய எழுத்தாளர்களது படைப்பு வேகமும், பத்திரிகைகளின் ஆதரவுமாகச் சேர்ந்து தமிழில் புதிய சிறுகதை ஆசிரியர்களை உருவாக்கின. அவர்களுள் சோமு, ஜானகிராமன், அழகிரிசாமி, அகிலன் போன்றோரும் ஈழத்தில் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோரும் சிறப்பானவர்கள். இவர்கள் சிறுகதையை வாழ்க்கை விமர்சனமாகப் பயன்படுத்தினர். ''என் கதைகளின் பொதுத் தன்மை நம்பிக்கை வரட்சியே'' என்கிறார் புதுமைப்பித்தன். எழுத்திற்கு எழுத்துப் பொங்கித் ததும்பும் யதார்த்தத் தன்மை — எதையும் நேர் நின்று பார்த்துக் கணித்துக் கணித்தபடியே யாருக்கும் எதற்கும் தயங்காமல் சொல்லி விடும் நேர்மை என்பன இவர்களது படைப்புக்களின் தனித்தன்மையாகும். சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் நின்று அலசி ஆராயும் ''கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்'' பலகாலமாகக் கட்டிக் காக்கப்பட்ட நம்பிக்கைக்கெதிராகக் குரலெழுப்பும் 'சாபவிமோசனம்' பத்தினித் தெய்வத்தையே மாற்றிச் சமுதாயத்தை இராட்டினம் சுழற்றும் 'பொன்னகரம்' தத்துவ விசாரணையில் இறங்கி அங்கு புதிரை ஏற்படுத்தும் 'காலனும் கிழவியும்' முதலான புதுமைப்பித்தனது கதைகள் ஒவ்வொன்றும் சிறுகதைக்கெனச் சொல்லப்பட்ட இலக்கணங்களை உடைத்து எறிந்து தமக்கெனத் தனி உருவம் அமைத்துப் படிப்படியாகப் புதுமை தருகின்றன,

காதல், குடும்ப வாழ்க்கை, அவற்றில் ஏற்படும் நிறைவேறாத ஏக்கம் எனும் பொருள்களையே பல்வேறு கோணங்களில் சிறுகதையில் எடுத்தாண்ட பெருமை கு. ப. இராசகோபாலனுக்குரியது. ''பண்ணைச் செங்கான்'' ''புரியும் கதை'' 'திரை' என்பன கருத்துக்கேற்ற புதுமை நவீனங்களாகும். சிறுகதையின் உத்தி, உருவம் ஆகியவற்றில் இவரும் பல சோதனைகளைச் செய்தார். 'விடியுமா' எனும் இவரது சிறுகதை ''சஸ்பென்ஸ்'' எனும் ஒரே உத்தியைக் கொண்டு சிறப்புறத் தக்ரூபமாக அமைந்துள்ளது. 'சஸ்பென்ஸ்' கதைகளைப் பிற்காலத்தில் புனைந்தவர்கட்கு ''விடியுமா'' கதையே முன்னோடியாக அமைந்தது.

சமுதாய மாற்றத்தால் இலக்கியமும் நேரடியாகப் பாதிக்கப்படுகிறது என்பதற்குத் தமிழ்ச் சிறுகதை வரலாறு ஒரு சான்றாகும். ஒரு வகையான போலித் தன்மை நமது வாழ்வின் எல்லா அம்சங்களையும் அழித்துவிட்டதால் வாழ்வின் அடிப்படை நோக்கமே அர்த்தமற்றதாகி விட்டது. மக்கட் சமுதாயம், அதன் உண்மையான நோக்கம், அதனை மூடியுள்ள போலித் தன்மை என்பன கு. ப. இராசகோபாலன், பி. எஸ். இராமையா முதலியவர்களின் கதைகளில் மேலோட்டமாக உள்ளது. அறிவியல் மேதை இராசகோபாலாச்சாரி, அறிஞர் அண்ணாத்துரை ஆகியோரது படைப்புக்கள் அரசியல் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. ''புதுமைப் பித்தனிடமிருந்த மனவுணர்ச்சிகளை மடக்கிக்கொண்டுவரும் சக்தி மற்றவர்களிடம் குறைவாகவே இருந்தது'' எனச் சிறுகதை விமர்சகர் சிதம்பர இரகுநாதன் கூறுவது ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

சிறுகதை வரலாற்றின் இரண்டாவது காலகட்டம் ஆரம்பித்தபோது சமுதாயம் பரிசோதனை நெறிக்குட்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் ஏகப்பிரதிநிதியாக விளங்கும் சிறு கதையாசிரியர் விந்தன் அல்லது கோவிந்தன் ஆவர், இவர் அங்கதக் குறிப்போடும், அவலம் நிறைந்த நகைச்சுவையோடும் கதைகளை எழுதினர். ''ஆபிச அப்பியாசப்'' 'சந்தோஷ முடிபு', 'செந்தமிழ் நாட்டினிலே' என்பன இவரது படைப்புகளாகும். இதே காலம் மேம்போக்கான ஒரு இலக்கியச் சுவை நிகழ்ச்சியும் மக்களிடம் பெருகியிருந்தது. பிரச்சினைகளின் ஆணிவேரை அணுகாமல் உள்ளதை உள்ளபடியும் சிலவிடங்களில் சற்று வியப்பாகவும் கருதுவதாய் இவ்வுணர்ச்சி அமைந்திருந்தது. இவ்வகையில் தனது நுண்ணிய நோக்காலும் விரிந்த அறிவாலும் எளிய இனிய நடையாலும் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுக்கொள்கிறார். அகிலன் ஆண்பெண் உறவில் ஒரு நவீனச் சுவையையும், அனுபவ இன்பத்தையும் கதைகளில் உண்டாக்கினர். இவரது கதைகளை அநேக விமர்சகர்கள் காதல் கதை என்பர். 'கோவில் விளக்கு' 'மனிதர்கள்', 'பூச்சாண்டி' முதலியன காதல எல்லைக்கு வெளியே படர்ந்த கதைகளாகும்.

சிறுகதை வடிவில் பிரச்சார கதைகள் தோன்றுவதற்குச் சற்று முன்பின்னான காலத்தில் சுயமரியாதை இயக்கம் திராவிடமுன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் ஆதிக்கமும் சிறுகதையில் பிரதிபலித்தது. ஸி. என். அண்ணாத்துரை, டி. கே. சீனிவாசகம், மு. கருணாநிதி ஆகியோர் தமது சொந்தக் கருத்துக்களைச் சிறுகதையில் புகுத்தினர். அண்ணாத்துரையின் 'சுடுமூஞ்சி', 'உண்ணாவிரதம்' 'ஒரு தண்டனை' என்பன நினைவில் நீங்காதவை.

1950-ம் ஆண்டளவில் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மற்றொரு அலை எழுந்தது. நாடு சுதந்திரம் பெற்றுப் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பின்னேற்றச் சக்திகள் முன்னேற்றத்திற்குத் தடைபோட்டன. இக்காலத் தமிழகப் பத்திரிகைகளைப் புரட்டினுல் சமுதாயச் சீர்திருத்தங்கள், குடும்பக் கட்டுப்பாடு, பெண்கள் உத்தியோகம் பார்ப்பது என்பனவற்றைக் கிண்டல் செய்தும், கண்டித்தும் கதைகள் காணப்பட்டன. இந்தச் சமுதாய மோதல்களைத் தத்தம் போக்கில் ஆழ்ந்த விமர்சனம் செய்பவர்களாக ஜெயகாந்தன், பார்த்தசாரதி, லட்சுமி சுப்பிரமணியன், முதலானோரும் ஈழத்தின் அ, இராசரத்தினம், டொமினிக் ஜீவா, கே. டானியல், எஸ். பொன்னுத்துரை, செ. கணேசலிங்கம், வீரகேசரி வாசன் ஆகியோரும் விளங்குகின்றனர். மனிதனைச் சமுதாய உறுப்பாகப் பார்த்தவர்கள் தனி மனித முனைப்பு, மனித சுதந்திரம் முதலியவற்றிற்கு முதன்மையளித்து மனிதனைச் சமூகத்திலிருந்து பிரித்துவருகிறார்கள். இந்தப் பிரிவிலிருந்து தப்பிய ஒருவர் ஈழத்துப் பொன்னுத்துரையே. ஜெயகாந்தனின் ''யுகசந்தி'' ''புதிய வார்ப்புக்கள்'', ''யாருக்காக அழுதான்'' முதலிய கதைகளில் கிடைத்த புதிய சித்திரம் அவரது பிற்காலக் கதைகளில் கிடைக்கவில்லை. அவரது மனித பாத்திரங்கள் பிரச்சினைச் சின்னங்களாக விளங்கின. தற்காலக் கதைகளின் சமூக நெறிப் பிறழ்வு காரணமாகத் தனி மனித வாழ்வின் அவலமே முக்கியமாகச் சித்திரிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் புதிய முகங்கள் பல சிறுகதைச் சோலையில் நுழைந்துள்ளன. 'காலை முதல்' எழுதிய கிருஷ்ணன் நம்பி, 'கதவு' எழுதிய இராஜநாராயணன், ஆ. மாதவன், ஈழத்திலே கே. வி. நடராசன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், கே. எஸ். ஆனந்தன், ந. பாலேஸ்வரி, சொக்கன் ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். கே. வி. நடராசனின் யாழ்ப்பாணத்துக் கதைகள்' கொழும்பில் 'விடிவு' எனும் கதை ஒரு முதுமாதின் உணர்வோட்டமாக விரிந்து தற்காலச் சமுதாயச் சிந்தனை, செயல்முறை ஆகியவற்றின் அருமையான விமர்சனமாக உளது, சிறுகதையை விமர்சனமாகக் கருதி அதன் மூலம் சிறுகதையை வளம்படுத்துபவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாக கலாநிதிகள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரும் செ. கணேசலிங்கனும், கனக செந்திநாதனும் ஈழத்தில் விளங்குகிறார்கள்.

சமுதாய எழுச்சி வீழ்ச்சிகளைப் போலவே இலக்கிய வகையிலும் உயர்ந்த தாழ்ந்த காலங்கள் உண்டு. தமிழ்ச் சிறுகதையின் 75 ஆண்டு வரலாற்றில் அதன் இரண்டாம் கட்டம் தலையோங்கி நிற்கின்றது. கடந்த இருபது ஆண்டு காலமாக சிறுகதை புதிய புதிய வழிகளில் கொடி வீசிப் படர்ந்து விரிந்து செல்கின்றது: அந்தப் பெரும் பரப்பிலே உத்தியாலும் உருவத்தாலும் வெவ்வேறு தன்மை காட்டும் சிறுகதை மலர்கள் பல அங்கங்கே பூத்துக்குலுங்குவதையும் பார்க்கிறோம். சிறுகதைகள் மனித வாழ்வை நெறிப்படுத்தும் கருவூலமாக எழுத்தாளர்களால் கருதப்படும்வரை அவையும் மனித உள்ளங்களில் அழியா வரம் பெறும் என்பது இலக்கிய விமர்சகர்களது முடிபாகும். அம்முடிவை யாமும் ஏற்போமாக!

---

ஏந்த ஒரு வேலையை மேற்கொண்டாலும் அதில் ஒரு முகமாக ஈடுபடு அது மட்டும் போதாது. உன் உயிரே அதைப் பொறுத்திருப்பது போல நினைத்துக் கொண்டு ஆர்வத்துடன் செய்.

— யூஜின்கிரேன்

---

# பெண்ணுரிமையோடு பெண்மையுமே வாழ்க

"அம்பி"

அன்றொருநாள் நெஞ்சம் ஆகாய வீதியிலே
சென்று தவழ்ந்து தேன்தமிழில் ஆடுகையில்

பெண்கள் கடைக்கண் பணிப்பில் பெருகிவரும்
எண்ணம் செயல்கள் எழுதா அருங்கவிகள்

எல்லாம் மனதில் எழுந்து சுமையாகி
தொல்லை தரும் வேளை .... தோன்றி நின்றாள் என்முன்

ஒருத்தி அவள்தன் உணர்வைக் கடைக்கண்
இருத்திக் கதைசொன்னாள், இதயத் துடிப்புடனே........

"பெண்கள் தம் ஆண்டென்று பிரகடனம் செய்துவிட்டோம்
தன்னலத்தை விட்டுத் தமிழ் செய்யும் என்னுணர்வை!
என்னுணர்வைக் காணும் இதயம் நுமக்குண்டேல்
தன்னிறைவு பெற்றுத் தமிழ் செய்யும் என்னுணர்வை"

என்றாள். எனையோர் ஏவற் கருவியென
நின்றாள், நிமிர்ந்தாள்.......நிலன் நோக்காச் சுந்தரியாள்.

சுந்தரியாள் நெஞ்சின் சுவையுணர்ந்த வேளையிலும்
அந்த அவள் செய்கை அகத்தை அசைக்கவில்லை
ஏனென்றால்,
குழலினமும் யாழும் குயிலும் குரல் தாழ்த்த
மழலை பொழியும் மகவை நான் எண்ணுகிறேன்.
வாழப் பிறந்த வழித்தோன்றல் தம்வழியை
மீள ஒரு பார்வை பார்த்து மிரளுகிறேன்.

அழுங்குழவி யோடவனை அள்ளி அணைக்கும்
தழும்பில் உளத்தாளில் தன்னிறைவு காணுகிறேன்.

பெய்யென்று சொல்லுகையில் பெய்யும் மழையொத்த
தெய்வமகள் பணியில் தித்திப்புக் காணுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாய்க் கவர்ந்தெனது பக்கத் தமர்ந்து
கணையாய் மெய் யன்பைக் கடைக்கண்ணால் ஏவிவிடின்

அன்பே துணையாய் அடிமைப்படும் இயல்பில்
இன்பம் சுவைக்கும் இதயம் எனக்குண்டு

அன்பின் பிணிப்பில் ஆண்பெண் உறவமைத்து
இன்ப நினைவில் இயல்பாய்ச் செயல் புரிந்தால்

காதற் கடைக்கண் பணிப்பும் கடமையென
நீதி வழங்கும் நெஞ்சம் எனக்குண்டு.

* * *

அந்தர உலகில் நாளும் அறிவியல் வளர்ந்து வேகம்
உந்திமுன் செலுத்தல் உண்மை உலகமே மாறும் கோலம்
உந்திமுன் செல்லும் வேளை உறவிலே ஆண்பெண் சாரார்
தந்தனித் தன்மை பேணத் தவறினால் விபத்தே ஆமாம்!

விபத்துகள் மலிந்து மக்கள் வீடெலாம் துன்பம் கௌவி
உவத்தலில் ஆண் - பெண் கோடி உயிர்த்துணை அறுத்து வாழ்ந்து

தவித்திடும் நிலைக்குள்ளாக்கும் சால்புடைப் பணிப்புக் கென்றால்
கவித்துணை கிடைக்காதம்மா கவித்துணை கிடைக்கா தென்பேன்

பெண்மையைத் தேடும் ஆண்மை பெற்றதில் அமைதி காணும்

வண்மையும் வளமும் காணும் வாழ்விலோர் சுவையுங் காணும்

ஒண்மையும் உயிருமாகும் உறவிலே ஒன்றி நிற்கும்
தண்மையில் கடைக்கண் ஏவல் தகுதிருப் பணியுமாகும்.

சாந்தகுணம் உருவெடுத்தால் சால்புகளாம் பெண்மை
சஞ்சலங்கள் தீர்த்தமைதி சேர்த்தணைக்கும் பெண்மை
பாய்ந்துமுலைப் பாலினைப்போல் பருவமறிந் தூறிப்
பயன்கருதாப் பணிபுரியும் பண்புளமே பெண்மை
காந்தமென ஈர்த்துளத்தில் கதிர்பரப்பும் பெண்மை
காதலொளிர் கடைவிழியால் கணைதொடுக்கு மென்றால்
ஓய்ந்தறியா உலகினைப்போல் உளம் சுழன்று வந்தே
உணர்விசையால் பணிபுரியும் உளமுடையேன் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமே பெண்மை என்றும் உயிர்கொடுக்கும் வண்மை
உள்ளுணர்வும் உள்ளொளியும் உயிர்த்திருக்கும் திண்மை
சொன்ன குணப் படைகளெல்லாம் சுவைபடவே சேர்ந்தால்
சூழுலகில் வாழ்வதற்குச் சுதந்திரமா இல்லை
பெண்ணினத்தைப் பூட்டிவைக்கும் பேதைமொழி வெல்வேன்
பேரிகைகள் கொட்டியதைப் பெயர்த்தெறிந்து வெல்வேன்
தண்ணமுதப் பெண்ணுடனே வாழ்வதற்கும் அன்னூர்
சந்ததியே சுதந்திரமாய் வாழ்வதற்கும் செய்வேன்.

* * *

பெண்ணுரிமை வேண்டும் அவள் பெற்றுரிமை எல்லாம்
மண்ணுலகை ஆளுகிற மாட்சிமையும் வேண்டும்
மண்ணுலகில் ஆணினத்தை ஆளுகிற போதும்
கண்ணெனத்தன் காதலினல் களம் அமைத்தல் பெண்மை

காதலினல் களம் அமைத்தால் கடைவிழியின் பணிப்பே
காலமெலாம் ஆட்சிசெய்யும் கடமையுணர் வோங்கும்
ஆதலினல் அன்புளத்தால் ஆணையிடும் பெண்கள்
அடிபணியும் ஆண்குலமும் ஆட்சி செய்யும் பெண்மை

* * *

நெஞ்சின் மொழியை நெடுநேரம் கேட்ட அவள்
கொஞ்சம் நிலன்நோக்கிக் குனிந்தாள் தலையசைத்தாள்
நோக்குங்கால் நிலன்நோக்கி நோக்காக்கால் தான்நோக்கும்
போக்குரைத்த வான் மறையின் பொருளங்கே நான் கண்டேன்

வாக்குப் பிழைக்காத வள்ளுவனூர் வலுவூட்ட
பாக்கள் புனைந்தேன்பெண் பணிப்பில்நான் அப்பாலே

பெண்கள்தம் ஆண்டென்று பிரகடனம் செய்துவிட்டார்
தன்னலத்தை விட்டுத் தமிழ் செய்தேன் என்னுணர்வை
என்னுணர்வைக் காணும் இதயம் நுமக்குண்டேல்
பெண்ணுரிமையோடு பெண்மையுமே வாழுமன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டின் கல்விப் புரட்சி

செல்வி மாலினிதேவி செல்வநாயகம் (II ம் வருடம்)

கைத்தொழில் புரட்சி, விவசாயப் புரட்சி என்றெல்லாம் பழைய வரலாறுகள் வானளாவப் புகழுகின்றன. இன்றோ நாம் விஞ்ஞானப் புரட்சியால் பல விந்தைகளை நாளொரு வண்ணம் கண்டு கொண்டிருக்கின்றோம். ஆனால் கீழைத் தேசங்களில் இவ்வெல்லாப் புரட்சிகளிலும் மேலாகக் கல்விப் புரட்சியொன்று இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட புரட்சிகளைப் போலல்லாவிடினும் கூட இன்னுமொரு கால் நூற்றாண்டுக்குப் பின் கீழைத்தேச மக்கள் காணக் கூடிய ஒரு பெரும் புரட்சி கல்வியுலகில் இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க நாட்டிலுள்ள சிறுவர்கள் தமது கல்வியின் பெரும் பகுதியை வீட்டிலிருந்தவாறு 'ரெலிவிஷன்' மூலம் கற்கிறார்கள். இது அமெரிக்க நாட்டில் மட்டுமல்ல அறிவுத் துறையில் விஞ்ஞானத் துறையில் வளர்ச்சிபெற்றுள்ள நாடுகள் அனைத்திலும் இடம்பெறுகிறது. கல்வி, கல்விமுறை இலகுவாக்கப்பட்ட முறைகளாகும். இவற்றிலிருந்து நாம் அறிவது யாதெனில் பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலும் கூட ஏட்டுப் படிப்பை விட அறிமுறை, செய்முறைக் கல்வி பெரும் பயனளிக்கும் என்பதைக் கல்வியாளர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதாகும்:

இதனடிப்படையில் எமது இலங்கையில் எமக்குச் சற்றுப் பிந்தியே பாரத நாட்டிலும் கல்வித்துறையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்துள்ளார்கள். இற்றைக்கு நாலாண்டுகளுக்கு முன் இருந்த கல்வித் திட்டத்திற்கும் இன்றுள்ள கல்வித் திட்டத்திற்கும் உள்ள வேற்றுமை "மலையும் மடுவும்" போல் என்பார்களே. அதுபோல் அமைந்துள்ளது. இன்றாவது நமது கல்வி முறையானது சிறப்பு மிக்கதோர் சீர்திருத்தம் பெற்றுள்ளதென்பதை நாம் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் பலாபலனை உயர்ச்சியை நாம் பூரணமாகக் காணச் சில பல வருடங்கள் எடுத்தாலும் கூட எமது அவதானத்திலிருந்து புத்தம்புதியதொரு புரட்சி நிலை எமது கல்வியுலகில் இலங்கையில் தோன்றியிருக்கிறதென்றால் மிகையாகாது.


இற்றைவரை காலமும் மாணவர் வகுப்பறையில் நான்கு சுவர்களுக்கு மத்தியிலிருந்து ஆசிரியர் சொல்வதையே அறிந்தனர். கற்றலுக்கும் குழந்தைகளின் அனுபவத்திற்குமிடையே தொடர்பு இருக்கவில்லை. பாடக்கல்வியால் தன்வயமாக்கப் பெறாத கல்வி மாணவனின் வாழ்க்கைக்கு எள்ளளவும் பயன்படுவதில்லை என்பதை உணர்ந்த தற்காலக் கல்வி நிபுணர்கள் புதிய பல அம்சங்களைப் புகுத்திக் கல்வியைக் கவர்ச்சியுள்ளதாக்கி, மாணவனுக்குப் பயன்படத்தக்க வகையில் அமைத்திருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும். "மாணவன் சூழ்நிலையுடன் பொருத்தப்பாடுடையவனாக வாழக் கற்றலுக்கும் அனுபவத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்" என அன்றைய உளவியல் அறிஞர் கூறியமையை இன்றைய எமது கல்வி முறையில் காணக்கூடியதாக உள்ளது. மாணவன் காட்சி கேள்வி செயலில் ஈடுபடுத்தும்போது அவன் பெறும் அனுபவம், அறிவு, ஆனந்தம், திருப்தி என்பவற்றுக் கிணையாக நாம் வேறெந்தக் கல்விமுறையையும் கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்வி முறையானது பிள்ளையை மத்தியாகக் கொண்ட கல்வி முறையாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன் பெற்றோரை மத்தியாகக் கொண்ட கல்வி முறையே இடம் பெற்றிருந்தது. இதைச் சிறிது விளக்கின் பிள்ளையின் தனியான வேறுபாடுகளுக்கேற்ப அவர்களின் ஆற்றல்களை அறியாது பெற்றோர் தாம் விரும்பிய துறைக்குப் பிள்ளைகளைக் கற்குமாறு நிர்ப்பந்தித்தார்கள். இதன்முடிவு வெற்றி ஒருசிலருக்கு. தோல்வியோ பெரும்பான்மையினருக்கு. 1972 க்கு முன் உள்ள கல்வியானது எத்தகைய விளைவை ஏற்படுத்தி யிருந்தது என்பதற்கு ஒரு விளக்கம் கூறின் அது பின்வரும் படத்தை ஒத்திருக்கலாம்,

கல்வித் திட்டம் 1972 வரை





இத்தகைய விளைவு ஏற்பட்டமைக்கும், காரணங்கள் இல்லாமலில்லை. 1948 வரை அந்நியர் ஆதிக்கமே இருந்துவந்தது. அவர்களுக்கு அவர்களின் தேவைகளே பிரதானமாக இருந்தன. எனவே கல்வியிலும் தங்கள் நலன் கருதிய தேவைகளே புகுத்தப்பட்டன. 1948 ல் நாம் சுதந்திரம் பெற்றாலும் கூட அந்நிய மோகத்தில் திளைத்து ஊறியிருந்த நம்மவர்கள் திடீரென மனப்பான்மையை மாற்றிக்கொள்வார்களா? இல்லை படிப்படியெ நாம் பெற்ற மாற்றம் நம்நாட்டுக்குத் தேவையான மாற்றம் என்பவற்றிற்குப் பிள்ளைகளைப் பெற்றோரைக் காலப் போக்கிலேயே கொண்டுவரமுடிந்தது.

இதுகாலவரை வாய்ப்பிழந்த பெற்றோரும் பிள்ளைகளும் தம்மைத்தாமே நொந்து கொண்டார்களே தவிரக் கல்வியிற் காணப்பட்ட குறைபாட்டை உணர்ந்துகொள்ளவில்லை. ஆட்சியாளரும் சுதந்திரம் பெற்றபின் நாட்டின் தேவைக்கேற்றதோர் கல்வி நிலையை உடனடியாகப் புகுத்த முற்படவில்லை. முடியாததாயும் இருந்தது. எனவே தான் ''உடை நலங்கா அரசாங்க உத்தியோகத்தை விரும்புவோர் தொகை அதிகரித்தது, நாட்டில் பொருளாதார நெருக்கடியும் ஏற்படலாயிற்று.

1975 ம் ஆண்டு இடம் பெறப்போகும் கல்விமாற்றத்தின் பயனைப் பின்வரும் படம் விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனவே புதிய கல்வித் திட்டமானது பூரண வெற்றியடையும் போது நாட்டின் தேவையும் நிச்சயம் பூரணத்துவமடையும். கல்வியால் விரக்தியுற்றோர் எவரையும் காணமுடியாது. இத்திட்டத்தை முன்னேறிய மேல்நாடுகள் பரீட்சித்துப் பூரண வெற்றியும் கண்டுள்ளன. அந்நாடுகளில் பாமரர் முதல் படிப்பாளி வரை யார் யார் எத்துறைக்குப் பொருத்தமானவர்கள் என்பதைப் பாடசாலையை விட்டு வெளியேறும் போதே ஒவ்வொருவரும் நிச்சயித்துக்கொண்டு வெளியேறுகிறார்கள். "விரலுக்கேற்ற வீக்கம்" என்பதை அவர்கள் உணர்ந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. நாம் தற்போதும் அறிந்துகொள்ளத் தயங்கிக்கொண்டிருக்கிறோம்.

இன்றைய எமது கல்வித்திட்டமானது அரசாங்கத்தின் பரிபூரணமான செயற்றிட்டங்களுடன் செயற்படுமாயின் எம் நாட்டு இளைஞர் சமுதாயம் புத்தம் புதியதொரு உலகைச் சமைப்பார்கள் என்பது திண்ணம். இதற்கு ஆசிரியரினதும், பெற்றோரினதும், பிள்ளைகளினதும் பூரண ஒத்துழைப்பு மிக மிக அவசியமானதாகும். நாடும் நம் சமூகமும் நலனுற அமைய வழிகாட்டக்கூடியது நமது புதிய கல்வித் திட்டமே.

---

*செயலை விதையுங்கள் பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள் குணம் உருவாகும். குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உருவாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டு நடனங்கள்

உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் ஏதோ வொரு தாளத்திற்கேற்ப அசைந்தாடுகிறது, நாம் கூட இந்த இயக்கத்தோடு இயைந்தே காரியங்களைச் செய்கிறோம். மனித உள்ளமும் உடலும் அற்புதமான கருவிகள். மனம் சிந்தனையாளராகவும் உடல் செயலாளராகவும் இருக்கிறது. நாட்டியத்தில் இந்தவுணர்வு வலுப்பெறுகிறது. எத்தனையோ விதமான நாட்டியங்களை நாம் இன்று காண்கிறோம். முதலில் நாட்டு நடனங்களைப்பற்றி அறிந்து கொள்வோம்.

பரதநாட்டியம்:- பழமையான பண்பாடு மாறாமல் பல நூற்றாண்டுகளாக தென்னிந்தியாவில் பரதநாட்டியம் தொடர்ந்து இருந்துவருகிறது. இந்நாட்டியத்தைப்பற்றிய முதனூலை எழுதியவர் மகரிஷியான பரத முனிவர் இந்நாட்டியத்துக்கு அடிப்படையானவை பாவம், ராகம், தாளம் என்பன. இவற்றின் முதல் எழுத்திலே பரதநாட்டியம் என அழைக்கப்படுதல் பொருத்தமானதாகும், இந்நாட்டியத்தின் ஆதி தெய்வம் நடராஜமூர்த்தி; இவரது நாட்டியத் திருவுருவம் எத்தனையோ நூற்றாண்டுகளாக நம் நாட்டில் இருந்துவருகிறது. இந்நாட்டியம் நாம் இறைவனுக்குச் செலுத்தும் ஒருவகைக் காணிக்கை என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்காக நாட்டியாரம்பத்திலும் முடிவிலும் அஞ்சலி செய்ய வேண்டும். இந்நாட்டியத்தில் மூன்று அம்சங்கள் இடம் பெறுகின்றன. அவை நாட்டியம், நிருத்தம், நிருத்தியமெனப்படும். நிருத்தம் தாளக்கட்டுப்பாட்டுக்கமையக் கருத்தைப் புலப்படுத்தாது. நிருத்தியத்தில் கீதம் அபிநயம் பாவம் இவைகளைக் கொண்டு தாளக்கட்டு விடாமல் ஆட வேண்டியது. [பாட்டின் பொருளைக் கை முத்திரைகளினாலும் பாவங்களைக் கண்களினாலும் தாளங்களைப் பாதங்களினாலும் தட்டி ஆடுவர் இதனையே கம்பர்

"கைவழி நயனஞ் செல்லக்
கண் வழி மனமுஞ் செல்ல
ஐய நுண் இடையர் ஆடும்
ஆடக அரங்கு" என்கிறார்

கதகளி:- இது இந்தியாவின் கேரள மாநிலத்தில் ஆரம்பித்தது வட இந்தியாவில் கோயில்களில் கதை சொல்பவர்களைக் கதாகார் என்பர். அவர்களில் பலர் பாடியும் சிலர் அபிநயத்தும் நடனமாடியும் கதைகளைக் கூறுவர். இதிலிருந்துதான் கதக்நாட்டியம் எனும் பெயர் வந்தது. இதில் புகழ் பெற்றவர் கோட்டத்துத் தம்பிரான் எனப்படுவர். இவரது கதையில்லாவிடின் ஆட்டம் சிறப்புப் பெறுவதில்லை. இந்நாட்டியத்தின் மூலம் அவர்கள் நட்வாரா என்றழைக்கும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைப் பற்றியே ஆடுவர் இந்நடனத்துக்குரிய வரம்பாலான கதைகள் மகாபாரதம் இராமாயணம் போன்ற இதிகாசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்நாட்டியத்தின் உட்பிரிவாக நிருத்தம் நிருத்தியம் நாட்டியம் என்பன அடங்கியுள்ளன. இதன் ஒப்பனை தனித்தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் தக்கபடி வெவ்வேறு விதமான அலங்காரஞ் செய்யப்படுகின்றது. வீரம் பொருந்திய லட்சுமணன் அர்ச்சுனன் போன்ற பாத்திரங்களுக்கு முகத்திற்குப் பச்சை நிறம் பூசுவார்கள், இராவணன் போன்ற பயங்கரமான பாத்திரங்களுக்கு சிவப்பு நிறம் பூசுவர். மோசமான பாத்திரங்களுக்கு பயங்கரமாக ஒப்பனை செய்வர். கதாநாயகிகள் அறிஞர்கள் போன்றவர்களை மினுக்கு வேஷக்காரர்கள் என்பர். நவரசங்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படும். நிருத்தம் முக்கிய இடம் பெறும், தாண்டவமே முக்கியமானது. இதற்கெனத் தலையலங்காரம் முக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம் தனியேயுண்டு இதில் நான்கு விதமான தலையசைவுகளும், எட்டுவித முகபாவங்களும் முப்பத்தாறுவித பார் வைகளும், ஆறுவித வாயசைவுகளும், ஒன் பதுவித கழுத்தசைவுகளும் இடம்பெறும். இந்நாட்டிய பாவங்களை ராஜஸ்தான் ஓவி யம், பலஹாரி ஓவியம் என்றழைக்கப்ப டும் வண்ணச் சித்திரங்களில் காணலாம்.

கண்டிய நடனம்:- கண்டி மாவட்டத் திலும் அதற்கடுத்துள்ள ஊர்களிலும் பாரதப் பண்பாடு பழக்க வழக்கங்களுக் கேற்பப் பயிலப்படும் நடனமே கண்டி நடனமாகும் இலங்கையில் தேசிய உணர்ச்சி வளர்ந்தபின் மறைந்த கலைகள் யாவும் மறுமலர்ச்சி பெற்று மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டன. இவைதான் பிறந்த இடத் திலேயே உறங்கிக் கிடந்தமையால் அந்நியப் பண்பாடுகள் கலப்புறாமல் தன் தூய்மை கெடாமல் பாதுகாக்கப் பட்டுள் ளன. இந்நடனத்தில் காணப்படும் அட வுச் சந்தங்களும் விரிவான தாளலயங்க ளும் கலையுலகத்தின் உள்ளத்தைக் கவர்ந் தவை. இந் நடனத்தில் நான்கு வகை யுண்டு. அவை வெஸ் நையாண்டி உடுக்கி பந்தேசி எனப்படும். மக்கள் நலத்திற்காகக் கொஹொம்பா தெய்வத்தை வேண்டியாடுவது வெஸ் நடனம் சிவ பெருமானின் ஊர்த்துவத் தாண்டவத் துக்கு இதை ஒப்பிடுவதுண்டு. இந் நட னத்தில் சமயம் சமூகவாழ்வு இவற்றின் அடிப்படைத் தத்துவத்தின் நெருங்கிய இணைப்பைக் காணலாம். இதனை யாடுப வர் முப்பத்திநாலு வகை அணிகலனை அணிந்திருப்பர் நையாண்டி நடனம் மிகவும் பகட்டானது. இந் நடனம் மிக வும் கவர்ச்சியானது. சிங்கள மன்னர்க ளின் ஆதரவைப் பெற்றிருந்தது உடுக்கை வைத்தாடுவது உடுக்கி நடனம், பந்தேசி நடனம் கஞ்சிராவைப் போன்ற சிறு பறைகளை முழக்கியாடுவது. இந் நடனம் ஆடும்போது பந்தேறு வகைகளைக் கை விட்டுக் கைகளில் மாற்றுவது லாவகமான காட்சியாகும். இந் நடனத்தில் 18 வகை யுண்டு ஒவ்வொன்றும் ஒரு சிறந்த கருத்தை உள்ளிட்டது தனித்து நின்று ஆடப்படுவது இவற்றுக்கு வண்ணமைக் கூத்துக்கள் என்று பெயர் அநேகமாக எல்லாம் கதிர்காமக் கடவுளின் பெருமை களைக் குறித்து ஆடப்பெறுவது.

குச்சுப்புடி:- பாகவத கோவையை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது தான் இந்நடனம். இதனைச் சமனிலை நட னம் என்றும் அழைப்பர். மகாராஷ்டிர மன்னர்கள் காலத்தில் பாகவதமேளர் சித்தேந்திரயோகி என்பவர் இக்கலைக்குப் புத்துயிர் அளித்தார். விஜயவாடாவிலி ருந்து சுமார் 40 மைல் தொலைவிலுள்ள குச்சுப்புடி எனுங் கிராமத்துச்கு சித்தேந் திரயோகி வந்து சேர்ந்தார். அங்கு குடியி ருந்த 300 பிராமணக் குடும்பங்களுக்கு இக் கலையைக் கற்றுக் கொடுத்தார். குச்சுப் புடி கிராமத்தவர்கள் இதில் தேர்ச்சி யடைந்து இதனையே தொழிலாகக் கொண்டு வளர்த்துப் பரவச் செய்ததனா லேயே இதற்குக் குச்சுப்புடி என்ற பெயர் வந்தது. சிங்கார ரசத்திற்கும் சஞ்சாரி பாவத்திற்கும் முக்கிய இடமுண்டு. பாத் திரங்களின் இலட்சணங்களை விளக்கமாக எடுத்துக் காட்டும் வகையில் இந்நாட்டியம் அமைந்துள்ளது. பாத்திரங்களுக்குத் தக்க படி நடையில் வேறுபாடு உண்டு. நிருத்த ஹஸ்தம் 38 முத்திரைகளும் அபிநயமும் பரதநாட்டியத்திற்கும் குச்சுப்பிடிக்கும் பொதுவானவை. கைகளில் விளக்கு ஏந் தியும் தட்டத்தில் நின்று கொண்டும், தலையில் செம்பு வைத்தும் ஆடுவது இந் நாட்டிய வகையைச் சேர்ந்ததே. இந் நடனம் ஆடும்போது புலன்களையடக்கி மனதை ஒருநிலைப்படுத்திப் புலனடக்கத் துடனும் மனக்கட்டுப்பாட்டுடனும் ஆடினா லன்றி இந் நடனத்தைச் சிறப்பாக ஆட முடியாது

## கிராமிய நடனங்கள்

குறவஞ்சி:- இந்நடனத்தில் பக்திக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. இது தமிழ் நாட்டில் பிரபல்யம் பெற்றிருந்த நடன நாடகம் நாடகத்தில் வரும் கதாநாயகியின் மனக்கவலையை எடுத்துக்கூறிக் குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அதற்கு மாற்று மருந்து சொல்லக்கூடிய குறத்தியின் ஆட்டமே குறவஞ்சியாகும். குறவஞ்சியில் கதாநாயகன் பொதுவாக எக்கோயிலில் நடைபெறுகின்றதோ அக்கோயிலின் தெய்வந்தான். குறவஞ்சிக் கதைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியான அமைப்புக் கொண்டவை. 18-ம் நூற்றுண்டில் திரிகூட ராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி பிரபல்யமானது

**சதிர்:-** சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை பிரபல்யமான நடனம். ஒருவர் அல்லது இருவர் ஆடும் நடனம் ஆலயங்களிலும் அரண்மனைகளிலும் பொதுவாக எல்லா மண்டபங்களிலும் நடைபெற்றது. பக்திக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது. சதிர் இல்லாவிடில் விழா பூரணமடையவில்லையென்று சொல்லுமளவிற்குப் பிரபலமாகி இருந்தது. அக்காலத்தில் ஆலயத் தொண்டுக்கெனத் தங்களை அர்ப்பணித்திருந்த தேவதாசிகளால் இது அழகுற ஆடப்பட்டது. பாரதத்தின் தூய்மை கெடாது பாதுகாத்த பெருமை தேவதாசிகளைச் சேரும். பரதத்தின் இரு உட்பிரிவாகிய நிருத்தம் நிருத்தியம் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து கலவை பெற்றுத் திரிபுற்று உருவாகியதுதான் சதிர்.

**கும்மி கோலாட்டம்:-** இவை பெரும்பாலும் பெண்களுக்குரியவை கும்மியடிக்கும்போது பாடிக்கொண்டும் கைகளால் தாளந் தட்டிக்கொண்டும் வருவர். பாடல்களும் அவற்றிற்கான தாளங்களும் எளிமையாக இருப்பினும் அதில் அமையும் நிலை நடைகளும் உடல் நெளிவுகளும் இயற்கையெழில் நிரம்பியிருக்கும் பார்வதி சோபனம் ருக்மணி திருமணம் இயற்கை வர்ணனை வாழ்க்கைச் சித்திரம் வேதாந்தக் கருத்துக்கள் முதலியவற்றைப் பற்றிப் பாடல்கள் பாடப்படும். கோலாட்டத்தைத் தாளத்தைக் கைகளால் தட்டுவதற்குப் பதிலாகச் சில வர்ணக் குச்சிகளால் தட்டியபடி ஆடுவர். இவைகளை வசந்த கால விளையாட்டு என்று கூறுவர். கோபிகாகீதம், இராசக்கிரீடை முதலிய பாடல்களும் பாடப்படும். இவற்றில் பின்கோலாட்டம் என்று ஒரு வகையுண்டு பல்லக்கின் கொம்பு முனையில் பல நிற நாடாக்களைத் தொங்கவிட்டு அவைகளின் நுனிகளைக் கோலாட்டக் குச்சிகளில் பொருத்திச் சுற்றி ஆடுவர் அப்போது பல நிற நாடாக்கள் பின்னல்போல் இழைவதும் பின் அவிழ்வதும் பார்க்க இரம்மியமாக இருக்கும். பலர் சுற்றி ஆடும்போது அமையும் நடனச் சித்திரங்கள் பலவகைப்பட்டனவாய் எழில் மிக்கதாயிருக்கும் பரதநாட்டிய அடவுவகைகளை அறிந்தவர்களுக்கு இந்நடனங்களில் அமைந்த தட்டடவு, மெட்டடவு, நாட்டடவு, குதித்தடவு முதலிய கால் வேலைப்பாடுகளும் சிகரம் போன்ற ஹஸ்த வகைகளும் உடல் நெளிவுகளும் கை கால் அசைவுகளும் எளிய ஆடையில் லாவகமாயிருப்பது தெளிவாகும்.

**காவடி நடனம்:-** இது கிராமத்தில் திருவிழாக் காலங்களில் ஆடப்படும் நடனம். பக்திக்கே முதலிடமுண்டு இறைவன் சந்நிதியில் காவடி எடுப்பது என நேர்ந்து கொள்பவர்கள் இந்நடனத்தை ஆடிவந்தனர் தலையில் அல்லது தோளில் காவடி சுமந்து கொண்டு. பாடலின் தாளத்திற்கேற்ப அடவுச்சந்தங்கள் அமைந்திருக்கும் பாடல்கள். கிராமியப் பண்பாட்டிற்கேற்றவாறு எளிமையான சொற்களில் காவடி எடுக்கும் கடவுளின் துதி பாடுவதாக அமைந்திருக்கும். அநேகமாக பெண்கள் தலையில் செம்பு வேப்பிலை முதலியவற்றை வைத்து மனதை ஒருநிலைப்படுத்திக் கடவுளோடு ஒன்றித்துப் பக்தியுடன் ஆடுவர்.

**கரகம்:-** இது கிராமங்களில் திருவிழாக்காலங்களில் பக்தியுடன் ஆடப்படும் நடனமாகும். பெண்களே ஆடும் நடனம் எனலாம் ஆண்களும் பெண்வேடமணிந்து ஆடுவர். தலையில் பல செம்புகளை வைத்து வேப்பிலைகளையும் செருகி ஆடுவர். கரகத்தைக் கைகளால் பிடிக்காமல் சமநிலையில் ஆடுவர் புலனை அடக்கிக் கடவுளுடன் ஒன்றித்து ஆடுவர் பாடல்கள் துதிப்பாடல்களாக அமைந்திருக்கும். பாடலுக்கேற்றவாறு அசைந்து அசைந்து தாளத்துடன் ஆடுவர்.

திருமதி பாமா யோகநாதன்
2-ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டூயியின் கல்விக் கருத்துக்கள்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அமெரிக்கக் கல்விச் சிந்தனையாளர் ஜோன் டூயி ஆவர். இவர் கல்விக்குப் பல இலட்சியங்களையும் முறைகளையும் அளித்து மாபெரும் கல்வி இயக்கத்தையே படைத்த பெருமைக்குரியவராவர் பிளேட்டோவின் கல்விக்கொள்கை இலட்சியவாதத்தின் பாற்பட்டது பிளேட்டோவின் பின்னர் வந்த ரூசோவின் கல்விக்கொள்கை இயற்கை வாதத்தை சேர்ந்தது ஆனால் கல்வியை அறிவுமைய நிலையிலோ அல்லது தனியே மாணவமைய நிலையிலோ நிலை நிறுத்தாமல் சமுதாயத்தை மையமாகக் கொண்டு அமைக்கவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டவர் டூயியாவர். ஹேபெட், புரோபல், போன்றோர் உளவியலடிப்படையில் கல்விக்கு விளக்கம் கொடுத்தனர். டூயி கல்வி முறை, தத்துவம், கல்வி உளவியல் மூன்றினையும் ஒன்றிணைத்து விளக்கம் கொடுத்தார்..

கல்வியின் முதற்பணி வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல் என்ற கருத்தை மாற்றி 'வாழ்க்கையே கல்வி' என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைத்தவர் டூயி. டூயியின் கல்விக் கருத்துக்களை அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் அறியக்கூடியதாக இருக்கின்றன "பாடசாலையும் சமூகமும்" "குழந்தையும் பாட ஏற்பாடும்" "சனநாயகமும் கல்வியும்" "அனுபவமும் கல்வியும்" ஆகிய நூல்கள் கல்விக் கொள்கை பற்றிக் கூறுகின்றன இவர் சிக்காக்கோவில் நடாத்திய ஆய்வு கூடப் பாடசாலையில் நடாத்திய ஆராய்ச்சியின் பின்னரே இந்நூல்களை எழுதியுள்ளார்.

நடைமுறையில் எது பயன்தரத்தக்கதோ அதுவே சிறந்தது என்பது அவர் கருத்து. இறுதி இலக்கில் அவர் நம்பிக்கை கொள்ளவில்லை கருத்தியல் வாதம் மெய்மைவாதம், இயற்கைவாதம் எல்லாம் விஞ்ஞான அறிவியல் கைத்தொழில் உலகிற்கு ஒவ்வாதது என்றும் பயன்தராதன என்றும் கூறிச் செய்முறைத் தத்துவத்தை அளித்தார். கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது. கல்விக்கு இறுதி இலக்கு என்று ஒன்றில்லை என்றார் டூயியினுடைய கருவிவாதம் பயன்வழி வாதத்திலிருந்து பிறந்ததேயாகும். சிந்தனை என்பது ஒரு கருவியாகும் என்றும் உண்மை என்பது நாம் அடைய விரும்பும் இலக்குகளை அடைவதற்கு நமது கருத்துக்கள் எந்த அளவிற்குப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றன என்பதனைச் சார்ந்ததாகும் என்றும் இவர் கருதினார் கல்வி விழுமியங்கள் அவற்றின் உபயோகத்தின் அடிப்படையில் ஒருவனின் தேவையுடன் அமைந்துள்ளனவாகும். கல்வியிலும் இறுதி முடிவைக் கவனியாது கருத்திற் கொள்ளாது கல்வியை வழங்கும் வழிவகைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வழிமுறைகளில் அல்லது கருவிகளில் கவனம் செலுத்துவதனால் அவரது வாதம் கருவி வாதம் என்று அழைக்கப்பட்டது.

இவருடைய கல்விக் கருத்துக்களில் சாள்ஸ் டார்வினுடைய கூர்ப்புக்கொள்கையின் தாக்கத்தைக் காணலாம். கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் கல்வியை வளர்ச்சி என்றும் வளர்ச்சி கூர்ப்படைந்து முன்னேற்றமடைகின்றது என்றும் கூறுகின்றார்.

டூயி மரபு முறைக் கல்வியை எதிர்த்தார். இவரின் கல்விக் கருத்துக்களில் மரபுமுறையான கல்விமுறை எதுவித பயனையும் தராதெனக் கூறினார். மரபு முறைக்கல்வி உளவளர்ச்சி நோக்கமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைத் துன்புறுத்துவதற்கானதொன்று. இம்முறைகள் இக்காலத்தில் நமக்குத் தேவையான பயன் அளிக்கா எனவே அவை மாற்றப்படல் வேண்டும் கல்வியும் வாழ்க்கையும் இருவேறு பொருட்களல்ல. இரு சொற்களால் குறிக்கப்பட்ட ஒரு பொருள். பள்ளிக்கூடம் என்பது மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கவேண்டும். மரபுமுறை ஒழிந்தாற்றான் வாழ்வதற்காய கல்வி ஏற்படுத்தலாம் என்றார். சமூகம் தொடர்ந்து வாழ்வதற்குக் கல்வி இன்றியமையாதது. கல்வி பயிலுவோர் சிறந்த சமுதாய அனுபவங்களைப் பெறுவதன் மூலம் சிறந்த கல்வியைப் பெறலாமென்றார். பாரம்பரியமான கருத்துக்கள் பயனற்றவை. நாளாந்த வாழ்க்கையில் ஏற்படுகின்ற மனிதத் தொடர்புகள் சிறந்த கற்றல் நிலைகளையும் அனுபவங்களையும் வழங்குவன என்றார். எனவே கல்வி என்பது வாழ்க்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டெழுவதாகும். கல்வியானது அனுபவங்களை அனுபவங்களுக்கூடாகக் கற்பதாயிருத்தல் வேண்டும் என்று டூயி கூறுவர். கல்வி கற்கும் பொழுதே பிள்ளை வாழ்கின்றது வாழ்க்கையின் ஒரு பகுதியே கல்வி. கல்வி வாழ்க்கை அனுபவங்களாக அமைய வேண்டுமென்கிறார். பிள்ளைகள் பொருளறிவினைப் பெற்றால் மட்டும் போதாது. கல்வி அனுபவம் சமூக அனுபவம் இரண்டும் சேர்ந்த சமூக அறிவைப் பெறுவதே உண்மை அறிவு. அதிகார தோரணையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது கல்வியைக் களைந்தெறிந்து அனுபவக் கல்விக்கு வித்திட்டார். எத்தகைய அறிவும் அனுபவத்தின் பயனே என்றார் டூயி

சமுதாயத்தைத் தொடர்பு படுத்திக் கல்விபற்றிய கருத்துக்களை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து வெளியிட்டவர் டூயியாகும் இவருடையகருத்தின்படி கல்விக்கு ஓர் ஆக்கபூர்வமான பணியுண்டு. திட்டமிடப்பட்ட முறையில் சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணியையும் கல்வி மேற்கொள்ள வேண்டுமென்பது இவரது கருத்தாகும் தனிமனித ஆற்றலையோ அல்லது சமுதாய ஆற்றலையோ வளர்ப்பது மட்டும் தான் கல்வியின் இலக்கு அல்ல. நடைமுறையிலிருக்கின்ற சமூக அமைப்பை விமர்சிப்பதற்கும் அச்சமூக அமைப்பை அவர்கள் புனர்நிர்மாணம் செய்வதற்கும் வழி செய்யும் முறையில் கல்வியின் இலக்கு அமைய வேண்டும் என்கிறார். சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளைக் கல்வியின் மூலம் சீர்திருத்தலாம் என டூயி நம்பினார். மனிதன் தன் ஆற்றல்களை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் இருக்கவேண்டும் சிறந்த சமூகத்தில் மனிதன் வளர்ச்சியடைய வேண்டும். கல்வி என்பது சமுதாயம் அழியாமல் காக்க வேண்டிய ஒரு கருவியாகும். சமுதாய அனுபவங்கள் கல்விமூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு எல்லோரும் பங்கு பெறும் அனுபவங்களாக இருக்கவேண்டும் கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்றார். ஒரு சமூகம் தன்னை வாழவைப்பதற்கோ அல்லது வளர்த்துக் கொள்வதற்கோ மட்டுமன்றித் தன்னை அழிவிலிருந்து காத்துக் கொள்வதற்குமே கல்வி மிக இன்றியமையாததாகிறது. எனவே டூயி குழந்தைகளே கல்வியின் மையமென்று கூறும் அதே வேளையில் சமுதாய மையக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

குழந்தைகளைச் சமூக வாழ்க்கைக்கு அறிமுகப் படுத்துவதாகப் பள்ளிக்கல்வி அமைய வேண்டுமாயின் சமூக வாழ்க்கையைச் சிறந்த முறையில் பிரதிபலிப்பதாக பாடசாலை அமைய வேண்டும் என்பது அவர் கருத்து. பாடசாலை சமூகத்தின் மாதிரிச் சிறு உருவம் என்றார்: பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்திற்குமிடையில் உணர்வுத் தொடர்பு இருக்க வேண்டும். பிள்ளைகள் இயற்கையான பணிகளைப் புரியும், வளர்ச்சியைப் பெறும் இடமாகப் பாடசாலை அமைய வேண்டும். இயற்கைப் பணிகள் பிள்ளைகளின் வாழ்வில் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலே அவர்கள் சமூகநிலைகளை உணரும் எதிர் நோக்கும் சக்தியைப் பெறுவார்கள். எனவே பிள்ளைகள் ஆக்கப்பணிகளில் ஈடுபடவும், தாங்கள் சக்தியும் வல்லமையும் உடையவர்கள் என்னும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் கூடிய இடமாகப் பள்ளி இருக்கவேண்டும். பாடசாலைகள் பிள்ளைகளை உண்மையான பயன்தரக்கூடிய பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.

பிள்ளைகள் வகுப்பறையில் உடற்பணிகளில் மட்டுமல்லாது உளப்பணிகளிலும் ஈடுபட்டுச் சுதந்திர நோக்குடன் சுயசிந்தனையை விருத்தியாக்க வேண்டும். பிள்ளைகள் சுதந்திரமான சூழலில் வளர வேண்டும். பிள்ளைகளுக்கு விஞ்ஞான நோக்கை வளர்க்கும் கல்வியாகவும் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்கும் கல்வியாகவும் இருக்கவேண்டும். எந்த வகையான கட்டாயப்படுத்தும் செயல்களும் தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளை தன்னுடைய தேவைகளை நிறைவேற்றித், தனக்கேற்ற உண்மையைத் தன்னுடைய அனுபவங்களினால் கண்டறிந்து கொள்வதற்கேற்ற கல்வியை அளிப்பதில் ஜனநாயக முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றார். உடல் உள சிந்தனைச் சுதந்திரம்யாவும் அளிக்கப்பட வேண்டும். பிள்ளையின் சுதந்திரம் கல்விச்சுதந்திரம் என்பவற்றின் மூலமே அர்சியல் பொருளாதார விருத்தி ஏற்படுத்த முடியுமென வலியுறுத்தினார்.

ஏட்டுக்கல்வியை டூயி வெறுத்தார். கல்வி என்பது ஏட்டுக்கல்வி அல்லது குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்றல் என்பது மட்டுமன்று விளையாட்டு ஆக்கச் செயல்கள், கருவிகளைப்பயன்படுத்துதல், இயற்கையுடன் தொடர்பு கொள்ளல், தமது ஆற்றல்களைப் பல்வேறு செயல்களின் வழியே வெளிப்படுத்துதல் ஆகியயாவும் கல்வியில் அடங்கும். பள்ளியானது குழந்தைகளைச் செயற்படுத்தும் இடமாக அமையக் கூடாது. வாழ்ந்தே அவர்கள் வாழ்க்கைபற்றிக் கற்கவேண்டும். சமூக நிலையங்களைப் பற்றி அறிய அவர்கள் நேரடியாக இவற்றுடன் தொடர்பு கொண்டு இவற்றை ஆராய வேண்டும்.

செய்தும் சிந்தித்தும் குழந்தைகள் கற்கவேண்டும். என்பதை வலியுறுத்தினார். குழந்தைகளது இயல்பான கவர்ச்சிகள் செயல்கள் ஆகியவற்றினின்றும் பல பிரச்சினைகள் எழுமாறு பள்ளி நிலைமைகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் இப்பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவைப்படும் விவரங்களைக் குழந்தைகளே தேடித்தொகுத்து இவற்றினின்றும் பிரச்சினைகளுக்கான விடைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் டூயி விரும்பினார். சிக்கல் மிகுந்த சமூக வாழ்க்கையைக் குழந்தைகள் புரிந்துகொள்ளக்கூடிய எளிய கூறுகளாகப் பகுத்து எளிய அனுபவங்களின் வழியே சமூக வாழ்க்கையைக் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்துவதே பாடசாலையின் பணியாக அமையவேண்டுமென்று குறிப்பிடுகிறார். பிள்ளை தன் நுண் அறிவினைக் கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர் காணக் வழிவகுக்க வேண்டுமென்றார். பிள்ளைகளுக்குப் பிரச்சினைகளைக் கொடுத்து நடைமுறைப் பிரயோகங்களில் தீர்வு காணச் செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் எழுந்தனவே செயல் அமைவுக் கலைத்திட்டப, செயல்திட்டம் முறை ஆகியன.

கலைத்திட்டம், சமுதாய உறுதி, ஒருமைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். பாடநூல், பாடப்பொருள், ஆசிரியர் ஆகியவற்றைக் காட்டிலும் கற்கும் குழந்தையின் முக்கியத்துவத்தையே வலியுறுத்தினார் டூயி. பள்ளியில் குழந்தை அடையும் அனுபவங்கள் அதனது செயல்கள் கவர்ச்சிகளினின்றும் எழுவனவாக அமைதல் வேண்டும் கல்வி ஏற்பாடு மாணவர்களின் கவர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அக்கவர்ச்சிகளைப் பயன்படுத்திக் குழந்தையின் நல்வளர்ச்சிக்கு உதவ வேண்டும். 3 R$^{s}$ முறையை வலியுறுத்தினார் டூயி படித்தல், எழுதுதல், கணிதம் கற்றல் ஆகியன இக்கவர்சிகளுடன் இணைந்து இவற்றை நிறைவு செய்யக்கூடிய கருவிகளாக அமைய வேண்டுமே தவிர இவைகளையே கல்வியின் இறுதி இலக்குகளாகக் கருதக் கூடாது. குழந்தையின் இயல்பு வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றுடன் இணைந்ததே கல்வி ஏற்பாடு. பாடஏற்பாடு பிள்ளையை மையமாகக் கொண்டிருக்கவேண்டுமென்றார். கல்வி என்பது சமூகத்தைப் புனருத்தாரணம் செய்யும் கருவி என்ற வகையில் கூறினார் சமூகத்தில் இருக்கும் ஏற்படும் குறைகளைக் கல்வி மூலமே மாற்றியமைக்கலாம் என்பது இவரது கருத்து.

டுயி ஆசிரியர் பற்றிக் கூறும்பொழுது வழிகாட்டியாகவும் கூடக்கற்போனாகவும் இருக்கவேண்டுமே தவிரப் பாடங்களைத் தொகுத்து மாணவன்மேல் திணிப்பவராக இருக்ககூடாதென்றார். மாணவர்களும் ஆசிரியர்களும் உட்படகற்கும் முயற்சியில் ஒருவரோடு ஒருவர் கூட்டுறவு முறையில் இணைந்து செயற்படும் ஓர் சூழலை உருவாக்கவேண்டியது ஆசிரியரது கடமையாகும். கூட்டுறவின் அடிப்படையில் ஆசிரியர் தொழிற்பட வேண்டுமே தவிர அதிகாரத்தின் அடிப்படையில் அல்ல. மாணவன் பிரச்சினை ஒன்று உள்ளதென்பதை உணரும் படியாக ஆசிரியர் செயலாற்ற வேண்டும். மாணவனிடம் கற்கவேண்மென்ற ஆர்வத்தைத் தூண்டுவதற்கு ஒவ்வொரு தனிமாணவனதும் தனிப்பட்ட விருப்புக்கள், வெறுப்புக்கள், தேவைகள், கவர்ச்சிகள் என்பவற்றை உணர்ந்தவராக ஆசிரியர் இருக்க வேண்டும். எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள் தனியாள் வேறுபாடுகள் இருக்கும். எனவே ஒவ்வொரு மாணவனையும் அறிந்திருக்க வேண்டியது மட்டு மன்றி ஒவ்வொரு மாணவனையும் கற்க வேண்டுமென்ற ஆர்வமுடையவனாக்க வேண்டியது ஆசிரியர் பொறுப்பாகும் என்று கூறினார்.

டுயியின் கல்விக் கருத்துக்களில் பொதுவுடமைக் கருத்துக்கள் பொதிந்திருப்பதையும் காணலாம். தொழில்நுட்பக் கல்வி பொதுக்கல்வியாக அமையவேண்டுமென்றார். பொதுவுடமைக்கல்விக்கருத்து அரசியல் சமூக பொருளியல் சார்ந்த கருத்துக்களாகும். ஆனால் டுயி பாடசாலைகள் அரசின் திட்டங்களைச் செயற்படுத்தும் ஓர் சாதனமாக அமையவேண்டும் என்று கூறவில்லை. எல்லோருக்கும் சமத்துவமான கல்வி அளிக்கப்படவேண்டுமென்றார். சமுதாயம் முன்னேற வேண்டும், மக்கள் பாகுபாடு இருத்தல் கூடாது என்றதன் அடிப்படையில் மக்கள் எல்லோரும் கல்வி பெறக்கூடிய வாய்ப்பு இருத்தல் வேண்டும். டுயி சமயக் கல்விக்குப் பாடசாலையில் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டியதில்லை என்கிறார்.

டுயியின் கல்விக்கருத்துக்களில் காந்தியடிகளின் கல்விக்கருத்துக்களின் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். டுயியின் கல்விச் சிந்தனைகள் சமூகத்தைச் சீர்திருத்தும் கல்விக் கருத்துக்களாகவே அமைந்தன. இவரின் கல்விச் சிந்தனைகள் பிள்ளையை மையமாகக் கொண்டும் அதே நேரத்தில் சமூகத்தை மையமாகக் கொண்டும் எழுந்தனவாகும். இவரின் கருத்துக்களின் விளைவாக செய்து கற்றல் வாழ்ந்துகற்றல், செயற்றிட்டமுறை ஆகியன ஏற்பட்டன, செயல் முறைகள் கற்பித்தலில் சிறப்பாக இடம் பெற்றன. செயற்றிட்ட முறை டுயியின் கல்விக்கருத்துக்களின் நேர்ப்பயனாகும்.

செல்வி. தேவமனோகரி குமாரவேல்
2-ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் எங்கே?

மனிதா! இறைவன் எங்கே என்று தேடுகிறாயா? ஏன் தேடுகிறாய்? ஏ! மனிதனே நீ இறைவனைத் தேடத் தொடங்கியதையிட்டு மகிழ்கிறேன். ஆனால் நீ எவ்வழியால் தேடுகிறாயோ நானறியேன். நீ தேடும் வழியும், இறைவன் உன்னைக் காணவரும் வழியும் ஒன்றை ஒன்று சந்திக்க வேண்டும். ஆனால் உன் வழியும் இறைவன் வழியும் வேறாகில் அந்தோ! பரிதாபம்! நீ இறைவனை அடையமாட்டாய். ஆகவே! உனக்குச் சொல்கிறேன் கேள். நீ தெய்வத்தைத் தேடும் வழி தெய்வ வழியாகவே இருக்க வேண்டும். அதுவும் நேரிய வழியாக இருக்க வேண்டும். வளைந்த வழிக்கும் இறைவனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

கடவுளை அல்லும் பகலும் தேடியலைந்தார். முனிவரொருவர். கடவுளைக் காணவில்லை அவர் அழுதார் அரற்றினார், தேடினார், பிதற்றினார், காலையும் மாலையும் தேடித் தேடி அழுதார். ஆனால் இறைவன் வரவில்லை. முனிவர் அச்சம் கொண்டார். இறைவன் எங்கே இறந்து விட்டானா? அல்லது ஆனந்தத் துயில் புரிகின்றானா. என்று பலவாறு சிந்தித்தார். பலமணி நேரம் சிந்தித்தபடியே இருந்தார். அப்போது முனிவரின் முதுகில் ஒரு விரல் தொடுவது போல் இருந்தது. முனிவர் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தார். ஆம் வாழ்நாள் முழுவதுமே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

முனிவர் தேடினார். நம்பிக்கை தளராது தேடினார். கண்டார் இறைவனை, கொண்டார் இன்பம். ஆனந்தக் கூத்தாடினார். இதை மனதில் வைத்து மனிதனே நீ ஆண்டவனைத் தேடு அப்போது உன் கண்ணெதிரே, உன் இதயத்தெதிரே நீ தேடும் ஆண்டவன் காட்சியளிப்பான். ஆண்டவன் எப்பொழுதும் கவனிக்கிறான். ஆனால் நாம் அவனைக் கவனிப்பதில்லை. இது தான் எம்மிடமுள்ள பெரும் தவறுகளிலொன்று.

என் அன்பான மனிதனே! நீ இறைவனைத் தேடிக் காணவில்லையா அஞ்சாதே! நம்பிக்கையைத் தளரவிடாதே. என்றுமே உன்பாட்டில் அவனைத் தேடிக்கொண்டிரு. இன்றும் தேடு. நாளையும் தேடு. உன வாழ்நாள் முழுவதும் தேடு. ஆனால் இப்பிறவியில் உன்னிடம் இறைவன் வராவிட்டாலும் அடுத்த பிறவியில் நிச்சயம் வருவான். அப்படியும் வராவிட்டால் உண்மையாகவே உன்னிடம் எப்போதோ ஒரு நாள் வருவான். ஆனால் அவன் வரும் நேரம் குறிப்பிட்டடங்காது. அந்தியிலும் வருவான் சந்தியிலும் வருவான், இன்பத்திலும் வருவான். துன்பத்திலும் வருவான். அவனுக்குக் காலநேரமில்லை.

மனிதா! உனக்குப் புத்தி பல புகட்டிச் செயற்கரிய செய்கைகளை இயக்குவிப்பது ஆத்மா. ஆத்மாவாகிய நீ பரமாத்வாவின் ஒரு கூறு. இதை நம்பி இதன் வழியே நட இதுவே உனது முன்னேற்றப் பாதை. இதன் மூலம் இறைவனை அடைந்து இன்பம் பொங்க வாழ்வாயாக.

திருமதி. சி. திருச்செல்வம்.
1-ம் வருடம்

மௌனமாய்த் தியானித்தால் மனம் கலங்கா நிலை பெறும். தியானத்தின் மூலம் சிந்தையைத் தூய்மை செய்பவன் துன்பக் கடலைக் கடக்கும் கப்பலாவான்.

காந்தி—

நீதிமன்றங்களிலும் உயர்ந்த மன்றம் ஒன்று உண்டு. அதுதான் மனச்சான்று. அதுவே மற்ற மன்றங்களுக்கும் மேலானதாகும்.

காந்தி—

இறையருள் பெறவேண்டுமானால் நமது பிரார்த்தனையில் சுயநலமனப்பான்மையை ஒழிப்பது தான் வழி. சுயநலம் இறைவழிபாட்டிலிருந்து நீங்கும் பொழுது எம் வழிபாடு தூய்மையடைகிறது. பிரார்த்தனை தூய்மையுற்றால் வாழ்வு தூய்மையுறும், வாழ்வு தூய்மையுற்றால் ஆன்மா தூய்மையடையும் ஆன்மா தூய்மையடைந்தால் உள்ளத்தொளி வெளிப்பட்டு விளங்கும்.

பக்தன்—

# நன்னூலார் கூறும் சொற்பாகுபாடும் இக்கால வழக்கும்.

நன்னூலார் சொற்களின் பாகுபாட்டைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல். உரிச்சொல் என்றும், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்றும் இருவேறு அடிப்படையிற் பிரித்துள்ளார்.

ஒரு பொருளின் பெயரே முதற்கண் வருவதால் முதலாவது பாகுபாட்டிற் பெயர்ச்சொல்லை முதலாவதாக அமைத்துள்ளார். இப் பெயர்ச்சொற்கள் இரு திணை, ஐம்பால் மூவிடங்களிலும் நின்று இயங்கி வருவன. பெயர்ச் சொற்களின் அடுத்ததாக வினைச் சொற்களைக் கூறுகின்றார். பெயர்ச் சொற்களின் தொழிற்பாட்டை விளக்குவனவாக வினைச் சொற்கள் அமைவதால் அவற்றை இரண்டாவதாக அமைத்துள்ளார். பெயரையும் வினையையும் சார்ந்து தமக்கெனச் சுதந்திரமின்றி வழங்கி வருபவை இடைச் சொற்களாகும். பெயரதும் வினையதும் தன்மைகளை விளக்க அவற்றின் விசேட சொற்களாய் அமைவன உரிச் சொற்களாகும்.

இரண்டாவது பாகுபாட்டில் இயற்சொல்லும் திரி சொல்லும் எட்டு வகையாக நன்னூலாரால் பிரிக்கப்படுகின்றன. இவை முறையே பெயரியற் சொல், வினையியற்சொல், இடையியற்சொல், உரியியற்சொல், பெயர்த்திரிசொல், வினைத்திரிசொல், இடைத்திரிசொல், இடைத்திரிசொல், உரித்திரிசொல் என்பனவாகும். இயற் சொல்லானது செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொற்களாய்க் கற்றகல்லாத மக்கள் யாவருக்கும் விளங்குவனவாய் அமைவன.

| | |
|---|---|
| பெயரியற்சொல்: | மண், பொன் |
| வினையியற்சொல்: | நடந்தான், வந்தான. |
| இடையியற்சொல்: | அவனை, அவனால் |
| உரியியற்சொல்: | அழகு, அன்பு |
| | முதலியனவாகும்.? |

திரிசொல் என்பது கற்றவர்களால் மட்டும் அறியக்கூடியது. இயற்சொல்லிலிருந்து மாறுபட்டது, எளிதிற் பொருள் அறியப்படாததாய் அரிதில் வலிந்து பொருள் உணரவேண்டியதாய் அமைந்துள்ளது. கிளி என்ற சொல்லைக் குறிக்கக் கிள்ளை, தத்தை என்ற திரி சொற்கள் காணப்படுகின்றன ஆனால் இன்று கிள்ளை, தத்தை என்பன வழக்கற்ற சொற்களாய் உள்ளன. சில திரி சொற்கள் குழூஉக் குறியாக வழங்கப்படுகின்றன. இன்றைய வழக்கில் இயற்சொல், திரிசொல் என்பன பொதுவாக ஒரே சொற்களாய் அமைவதன் மூலம் இயற்சொல்லுக்கும், திரி சொல்லுக்கும் பாகுபாட்டை அறிய முடியாமல் உளது. பொதுவாக இன்று இயற்சொல், திரிசொல் என்பன வித்தியாசமின்றி ஒரே வழக்கில் உள்ளன எனலாம்.

திசைச் சொல் எனும்போது நன்னூலார் "செந்தமிழ் நிலஞ்சேர்
பன்னிரு நிலத்திலும்,
ஒன்பதிற் றிரண்டினில்
தமிழ் ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே
திசைச்சொல்" எனக் கூறுகின்றார். கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டும், பிறதேசங்கள் பதினேழும் உட்பட்ட நாடுகளில் பேசும் பாஷையிலுள்ள சொற்கள் தமிழில் வந்து வழங்குவன திசைச் சொற்களாகும் என்பது அவர் கருத்து. திசைச் சொல் பற்றிய கருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் இன்று விரிவடைந்துள்ளது. கொடுந் தமிழ் நாடாய பன்னிரு நாட்டிலும், பதினேழு தேசத்திலும் பேச்சு வழக்கில் உள்ளவை திசைச் சொற்களென நன்னூலார் கூறுகிறார். மதுரையை மையமாகக் கொண்டு ஏனைய திசைகளில் பேசப்பட்டு வந்த சொற்களையே நன்னூலார் திசைச் சொற்களாய்க் குறிப்பிடுகிறார். ஆனால் தொல்காப்பியர் திசைச் சொல் பற்றிக் கூறும் போது

''செந்தமிழ் நிலஞ்சேர்
பன்னிரு நிலத்தினும்
தம் குறிப்பினவே திசைச் சொல்''

எனக் கூறுகின்றார். தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழ் நாடாய பன்னிரு நாட்டுச் சொற்களே திசைச் சொற்களாய் வழங்கப்பட்டன. ஆனால் தமிழ் மொழியின் வளர்ச்சி காரணமாக அம் மொழியில் வேறு பல நாட்டுச் சொற்களும் வந்து புகுந்ததன் காரணமாக நன்னூலார் மேலும் பதினேழு தேசச் சொற்களையும் திசைச் சொற்களுள் அடக்கி உள்ளார்.

வட சொல்லாவன பொது எழுத்தாலும், சிறப்பெழுத்தாலும் அமைந்துள்ள சமஸ்கிருத பாஷைப் பதங்களாகும். அமலம், கரணம் என்பன பொது எழுத்தாலானவை. சுகி, போகி, சுத்தி என்பன சிறப்பெழுத்தால் ஆனவை. திசைச் சொற்களின் பெரும்பகுதி வட சொற்களெனலாம். நன்னூலார் காலத்தில் வட சொற்களைத் தமிழிற் சேர்த்தல் தமிழ் மொழிக்குப் பெருமை அளிப்பதாய்க் கருதப்பட்டது. அத்துடன் அதிகமான நூல்களும், கருத்துக்களும் வட மொழியிலிருந்தே பெறப்பட்டன. அதனால், திசைச் சொற்களில் அடக்காது வட சொல்லை வேறாகப் பிரித்துள்ளார் என்பது புலனாகிறது.

ஆனால் இத்தகைய பாகுபாடு இன்று பிரித்துணரக் கூடியதாய் இல்லை. நன்னூலார் சொற்களைப் பாகுபாடு செய்யும் போது முதற்பிரிவிற் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனப் பாடுபாடு செய்தார். முதன் முதல் தமிழில் பெயர்ச்சொல்லே வழக்கில் இருந்தது. உதாரணமாக ஒரு சிறு குழந்தை தாயிடம் ''அம்மா சோறு'' எனக் கேட்குமே தவிர ''அம்மா சோறு தாருங்கள்'' எனக் கேட்குமென எதிர்பார்க்க முடியாது. எனவே காலப்போக்கில் பொருளை விளங்கிக் கொள்வதற்கு இலகுவாகவும், பேச்சு, பொருள் நிறைந்ததாகவும் அமையவேண்டி வினைச்சொற்கள் சேர்க்கப்பட்டன. இவ்வாறே வசனங்கள், பேச்சுக்கள், தெளிவான கருத்தையும் இலக்கணத்தையும் கொடுப்பதற்காகக் காலப்போக்கில் இடைச்சொற்கள் புகுத்தப்பட்டன.

நன்னூலார் கூறும் சொற் பாகுபாடுகள் அன்றைய மொழிநிலையில் வகுப்பட்டன. அவை இன்று காலத்திற்கேற்ற மாற்றமும், விரிவும் அடைந்துள்ளன. தமிழ் மொழியின் வளர்ச்சி காரணமாயும், இலக்கண மொழி வளர்ச்சிக்குத் தடையாய் அமையக்கூடாது என்ற காரணத்தாலும் நன்னூலார் கூறும் சொற் பாகுபாடுகள் மாற்றமடைவது அவசியமாய் உள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சி காரணமாக மொழி ஆராய்ச்சிகள் மென் மேலும் விரிவடைவதாற் சொற்பாகுபாடுகள் இந்நிலையிலிருந்தும் மாறுதலடைதல் வியப்புக்குரியதல்ல.

நன்னூலார் கூறிய
''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே''

என்பதற்கேற்பத் தமிழ் மொழி இலக்கணம் மாற்றமடைதல் ஏற்புடையதே.

திருமதி இந்திரவதனி அரியரத்தினம்
2-ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசாலை ஆளுமன்ற உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற சுவர்ணு இல்ல வீராங்கனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவனின் உற்றதுணை

தூயவென் தம்பியரே — யானும்
சொல்கதை கேட்டிடுவீர்
ஆயது கேட்டபின்னர் — என்போல்
அயரா துழைத்திடுவீர்

தாயின் மடியினிலே — சுரந்து
தங்கிய பாலையுண்டு
வாயில் வடிந்திடவே — துள்ளி
மகிழ்ந்தவோர் காலமுண்டு

காளைப் பருவமதில் — ஒருவர்
கட்டுக் கடங்காமல்
வேலிகள் தாண்டிடுவேன் — அங்கு
விளைபயிர் தின்றிடுவேன்

துள்ளித் திரிகையிலே — எனது
துடுக்கை அடக்குதற்கு
மெள்ளத் தெரிந்தனரே — புத்தி
மேவிய மானிடரே

மூக்கில் துளையுமிட்டே — அதிலொரு
முறுக்குக் கயிறுவிட்டார்
ஆக்கப் பணிவுடனே — அறிவும்
அடக்கமும் பெற்றனனே

காலைப் பிணையலிட்டே — என்றன்
கழுத்தை வளைத்துவீழ்த்திக்
கோலைப் பிடித்துச்சுட்ட — குறியின்
கோலமும் கண்டிடுவீர்

சீரிய சோடிவெள்ளை — எனது
சிந்தைக் கிசைந்திடவே
ஏரில் இணையவைத்தார் — என்றும்
இன்பத்துடன் உழுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிணை தன்னுடனே — என்றும்
ஏறுமா றில்லாமல்
கண்ணிய மாய்நடப்பேன் — இதனைக்
கருத்தினிற் கொண்டிடுவீர்

போட்டிச் சவாரிகளில் — என்றும்
புகழுறும் வெற்றிகளை
ஈட்டிய வெள்ளையென — எம்மை
எவரும் வியந்திடுவர்

பாரம் மிகுந்தவண்டி — குனிந்து
பக்குவ மாயிழுப்பேன்
சேரும் உல்லாசவண்டி — சதங்கை
செய்யொலி போல்நடப்பேன்

வாயாற் கேளாவிடினும் — எமக்கு
வைக்கோல் பிண்ணாக்குடனே
ஓய்வில் உணவளிக்கும் — உழவன்
உற்ற துணையாவேன்

வையகம் வாழ்வுறவே — உழவின்
வளமுறு மேன்மையெண்ணித்
தையிரு நாளினிலே — எமக்குத்
தனியொரு பொங்கல்வைப்பார்.

திருமதி சரஸ்வதி - சிவராஜன்
முதலாம் வருடம்.

---

உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றுக்கு காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள் மேலும் வெற்றி அடைவீர்கள

— பெனலன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கூட்டுறவு

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதற்கிணங்க ஆதிகாலம் தொடங்கியே மனிதன் வாழ்ந்து வருகின்றான். எவ்வளவு திறமையுள்ள ஒருவராலும் தனித்து வாழ்க்கை நடாத்துவது இயலாத காரியமாகும். ஆதிகாலத்தில் வேட்டையாடிய மக்கள் கூடக் கொடிய மிருகங்களிலும், பகைவர்களிலும் இருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காகக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர் பின்பு வயல் செய்த மக்கள் முறையே ஒவ்வோருவருடைய வயலிலும் சேர்ந்து வேலை செய்தனர்.

இவ்வாறு கூட்டுறவாக வாழ்ந்த மக்களிடையே கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாகியது. இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்ததும் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. கள்ளச்சந்தை வியாபாரம் ஆரம்பமாகியது. அப்போதுதான் இலங்கைப் பண்டசாலைச் சங்கங்கள் எங்கும் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. இவ்வாறே கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாகியது. இது ஒரு மக்கள் இயக்கமாகும் வறுமையில் வாடிடும் மக்களின் துயர் துடைக்கவும் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவும் மக்களிடையே ஏற்பட்டுள்ள வறுமை, சமுக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்துச் சமாளிக்கும் சிறந்த சாதனையே கூட்டுறவு ஆகும். கூட்டுறவு இயக்கம் முக்கியமாக ஒழுக்கத்தையும் கடமை உணர்ச்சியையும், சேவைமனப் பான்மையையும் அடிப்படையாகக் கொண்டது.

"உழவன் கணக்குப் பார்த்தால் உழவு கூட மிஞ்சாது." என்பது அக்கால முதுமொழி. விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக வட்டிக்குத் தனியாரிடம் கடன் பெற்றுச் சாகுபடி செய்து விளைந்தவற்றை விற்றும் கடனைத் தீர்க்க வசதியில்லாமல் அவதிப்பட்டு வந்தநிலை மாறவும் வேளாண் குடி மக்களின் பொருளாதார நிலை உயரவும் நெசவு, கிராமக் கைத்தொழில் போன்றவைகளில் ஈடுபட்டுள்ள கணக்கற்ற ஏழைத் தொழிலாளர்க்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும் சிறந்த சாதனம் கூட்டுறவு இயக்கமாகும்.

கைத்தொழிற் புரட்சியின் பின் பிரான்ஸ் நாட்டிலே தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இவர்களின் துயர் துடைத்துக் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை எனப் பெயர் பெற்றவர் றொபர்ட் ஓவன். இவர் காலத்திலே தனிப்பட்ட நெசவாலைகளிலே வேலை செய்தவர்கள் இயந்திரங்கள் போல் ஓய்வில்லாமல் வேலை செய்ய வேண்டியிருந்ததுடன் சம்பளமும் குறைவாகவே வழங்கப்பட்டது. இதைக் கண்ட றொபர்ட் ஓவன் பிரான்ஸ் தேசத்திலே கூட்டுறவு மூலம் நெசவாலைகளை அமைத்தார். விவசாயிகள் பல இன்னல்களுக்குட்பட்டதைக் கண்டு விவசாயப் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தை அமைத்தார். இவர் ஆரம்பித்த இவ்வியக்கத்திலிருந்தே இன்று பல நோக்கங்களையும் கொண்டு கூட்டுறவு இயக்கம் வளர்ந்துள்ளது.

ஏழை விவசாயிகள் தனிப்பட்டவர்களிடம் கடனைப் பெறுகிறார்கள், பெற்ற கடனுக்குக் கூடுதலான வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. கடன் பெறுவதாயின் அவர்களுக்கு நகைகளோ காணியோ பொறுப்பாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெறும்போது குறைந்த வட்டிக்கு இரண்டு ஆள்பிணையுடன் கடன் பெறலாம். பெற்ற கடனைப் பகுதி பகுதியாகக் கட்டக்கூடிய வசதியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை வியாபாரிகளுக்கு விற்பதனால் குறைந்த விலைக்கே விற்கவேண்டும் ஆனால் கூட்டுறவு மூலம் சந்தைப்படுத்தும் போது நியாயமான விலைக்கு விற்கக் கூடியதாக இருக்கிறது. தரகர்மாரின் சுரண்டலுக்கும் ஆளாகாமல் கூட்டுறவு சந்தைப் படுத்தல் மூலம் நன்மையைப் பெறலாம். சங்கம் அங்கத்தவரின் உற்பத்திப் பொருட்களை வாங்கித் தரப்படுத்தி, பதப்படுத்தி, சேமித்து, பாதுகாத்து, விலைகுறித்துக் குவியலில் விற்கிறது. தனிப்பட்டவர்கள் தாம் விளைவித்த பொருட்களைச் சேமித்துப் பாதுகாத்தல் கடினம். கூட்டுறவு மூலம் தொழிற்படும் போது சேமிப்புக் களஞ்சியங்களை அமைத்து அதிலே சேமித்துப் பாதுகாக்கின்றது. கூட்டுறவு மூலம் பொருட்களை ஏற்றிச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை அமைத்தல் இலகுவாக இருக்கின்றது.

கைத்தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள், கடன் உபகரணங்கள் தொழில் நுட்ப அறிவு என்பவற்றைக் கூட்டுறவு மூலம் இலகுவாகப் பெறலாம் மீன்பிடித் தொழிலாளர்களும் தங்களுக்குத் தேவையான வலை, யந்திரங்கள், வள்ளங்கள், தொழில் நுட்ப அறிவு என்பவற்றைக் கூட்டுறவு மூலம் சுலபமாகப் பெறலாம். அத்துடன் சந்தைப் படுத்தும் வசதியும் கூட்டுறவு மூலம் இலகுவாக இருக்கும்.

1957ம் ஆண்டளவில் 85 இலட்சம் மக்களைக் கொண்டிருந்த இலங்கையில் 70 வெவ்வேறு வகையான 10812 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவ்வகையான சங்கங்களின் அதிகரிப்புப் பற்றி அப்போது இருந்த கௌரவ உணவு விவசாய அமைச்சர் பிலிப் குணவர்த்தன பின்வருமாறு கூறினர் "இந்த இடைஞ்சலான அமைப்புக் காலத்தையும் சக்தியையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறது." ஒரு தனிமனிதன் நுகர்வோனாகவும், கடன் பெறுவோனாகவும், நெல் விற்போனாகவும், பால்விற்போனாகவும், தும்புப்பொருள் விற்போனாகவும் இருக்கலாம். இதற்காக இவன் பலசங்கங்களின் அங்கத்தவராக இருக்க வேண்டியிருக்கிறது இதனால் இவன் ஒரு சங்கத்திலும் உருப்படியாக இருக்கமுடியாது. சங்கத்தில் அவனுக்குள்ள ஈடுபாடு நாளடைவில் குறைந்து கொண்டு வருகிறது. இதன் விளைவாக நிர்வாகஸ்தரிடையேயும், பணியாளரிடையேயும் ஊழல் நிறைந்து வருகிறது.

இதுமட்டுமல்ல. பல சிறு சிறு சங்கங்கள் இருப்பதால் எண்பார்வையாளரின் மேற்பார்வை பரிசோதனைகள், கடமைகள் கடினமாக இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாகக் குறைந்த சம்பளத்திற்கு முகாமையாளரை வைக்கும் மிகக்குறைந்த வியாபாரம் உள்ள சிறுசங்கங்கள் மூலம் முகாமை அழிந்து விடுகிறது. ஆகவே கௌரவ அமைச்சர் நுகர்வோர் கடனுதவி சந்தைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் ஒரே கூரையின் கீழ் நடைபெறும் வகையில் நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்குமாறு கூட்டுறவுத் திணைக்களத்தைப் பணித்தார். எல்லாக் கிராமங்களிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது பொருளாதார அடிப்படையில் நடைபெறக்கூடிய காரியமாகா விட்டாலும் பண்டசாலைச் சங்கங்களையும் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்களையும் ப. நோ. கூ. சங்கமாக. மாற்றியமைக்க முற்படுவது. இதனால் 1958 ம் ஆண்டு முடிய 1927 ப. நோ. கூ. சங்கங்கள் நிறுவப்பட்டன. 1968 ம் ஆண்டு 1105077 அங்கத்தவரைக் கொண்ட 5108 ப. நோ. கூ. சங்கங்கள் இருந்தன.

இதன்பின் 1971 ம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட்ட போது பல குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டது. இக் குழு கண்டு பிடித்த குறைகளும் அதை நிவிர்த்தி செய்ய எடுத்த நடவடிக்கைகளும் பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(1) பங்குத் தொகை கூடுதலாக இருப்பதால் கூட்டுறவுச் சேவையை விரும்பும் எல்லோரும் அங்கத்தவராக இருக்க முடியாது. இதன்படி பங்குப்பணம் 1ரூபா வாங்கப்பட்டது,

(2) ஊழியர்களுக்குப் போதிய சம்பளம், இடமாற்றம் இன்மையால் ஊழல்கள் நிறைந்து காணப்பட்டன. இதனால் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வும் இடமாற்றமும் கொடுத்து ஊக்குவிக்கப் பட்டது.

(3) நிர்வாக முறையில் கட்டுப்பாடு இல்லை. அதனால் ஊழல்கள் நிறைந்து காணப்பட்டன. இதை நீக்குவதற்குப் பொறுப்புக்கள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டுக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) ஒரு சங்கத்தில் பொருட்கள் தேங்கியும் இன்னொரு சங்கத்தில் அவசியமாகவும் இருந்தால் அங்கு பொருள்களை மாற்றக் கூடிய வாய்ப்பு உண்டு. நல்லகணக்கு வைக்கும் முறை புகுத்தப்பட்டது. கிராமிய வங்கி ஏற்படுத்தப்பட்டுச் சேமிப்புத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

## தற்போது இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மட்டத்தில் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை அமைந்திருக்கிறது. இது இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கவும், அபிவிருத்தி செய்யவும் பொது மக்களுக்கு வழிகாட்டியும் கற்பித்தும் வருகிறது. கூட்டுறவுப் பயிற்சித் திட்டங்களும், கல்வியூட்டும் திட்டங்களும் அமைத்துக் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் இது பரவச் செய்கிறது.

இது இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் சார்பில் கருத்துக்களைப் பரிமாறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்வதற்காக நிபுணர்களதும் நிர்வாக ஆலோசகர்களதும் அறிவைப் பெற்றுக் கொடுக்கிறது. கூட்டுறவு இயக்கத்தை இணைக்கு முகமாகக் கூட்டுறவுத் தொடர்புகளைப் பல்வேறு பகுதிகளுடன் இணைத்தல், கூட்டுறவை ஒட்டித் தேவையான இலக்கியம், புகைப்படங்கள் மற்றும் கல்வியூட்டும் கருவிகள் போன்றவற்றைத் தயாரிக்க உதவி செய்தலும் வெளியிடுதலும் ஆகும். அத்துடன் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான பத்திரிகை, சஞ்சிகைகள், கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட உதவி செய்தல், வெளியிடுதல், கூட்டுறவு நூல் நிலையத்தை நடாத்துதல், கூட்டுறவுக் கருத்தரங்கம் மகாநாடு, பொருட்காட்சி போன்றவற்றை ஒழுங்கு செய்தல் கொண்டு நடாத்துதல், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்காக நிதிகளைத் திரட்டுதல், விசேட அல்லது பொது நிதிகளை ஒதுக்குதல் போன்ற உரிமைகள் இச் சபைக்கு உண்டு.

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் கீழ் இருக்கும் ஐந்து சமாசங்களில் ஸ்ரீ லங்கா சந்தைப்படுத்தும் சம்மேளனம் மிகவும் முக்கியமானதாகும். இதனூடாகவே அத்தியாவசியப் பொருட்கள் மொத்தமாக விநியோகிக்கப்படுகின்றன. இதிலே கிட்டத்தட்ட 368 பெரிய ஆரம்பப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன.

ஸ்ரீ லங்கா கைத்தொழிற் சாமாசத்தில் 42 சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இதன் பங்கு முதல் 4·9 இலட்சம் ரூபாவாகும். இன்று இதனிடம் 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொறித்தொகுதிகள் உண்டு. றபர், தும்பு மெத்தைகளைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை இதற்குச் சொந்தமாக உண்டு. இந்த மெத்தைகள் சந்தையில் ''சியஸ்தா'' என்ற பெயரில் விற்கப்படுகின்றன. இதன் மாதம் ஒன்றுக்குள்ள சராசரி விற்பனைப் பெறுமதி 27000 ரூபாவாகும். இந்தப் பொருட்களுக்கு வெளிநாட்டிலும் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா தெங்குப்பொருள் சங்க சமாசத்தில் தெங்குப்பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இந்தச் சமாசத்தின் நோக்கம் இலங்கையின் தென்னை உற்பத்தி விற்பனையை அதிகரித்தலாகும்

ஸ்ரீ லங்கா கடற்றொழிற் சங்கத்தில் கிட்டத்தட்ட 45 கடற்றொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இந்தச் சமாசத்தின் நோக்கம் கடற்றொழில் உற்பத்திப் பொருட்களை அதிகரித்தலாகும்.

ஸ்ரீ லங்கா றப்பர் உற்பத்தி விற்பனை சமாசத்தின் கீழ் பல றப்பர் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இச் சமாசத்தின் நோக்கம் றப்பர் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தலாகும்.

இந்த ஐந்து சமாசங்களும் மாவட்ட ரீதியில் அமைந்த ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையும் தான் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையில் நேரடியாக அங்கத்துவம் வகிக்கின்றன. இவற்றிலிருந்தே ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்து அனுப்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து சமாசங்களுக்கும் அடுத்ததாக மாவட்ட ரீதியில் அமைந்த தேசீய கூட்டுறவுச் சபைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒவ்வொன்று உண்டு. இவைகளும் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தி முன்னேற்றம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபையுடன் ஒத்துழைக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தை விருத்தியடையச் செய்யவும் ஸ்தாபிக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளில் மக்களுக்கு உதவி செய்தல் பயிற்சியளித்தல் வழிகாட்டுதல் என்பனவற்றைச் செய்யும்.

மாவட்டரீதியில் அமைந்த ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபைக்குக் கீழ் 1ம் படிச் சங்கங்களாகிய பெரிய ஆரம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கம், கைத்தொழிற் சங்கம், கடற்றொழிற் சங்கம் ஆகியன இருக்கின்றன. இவைதான் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் சங்கங்களாக இருக்கின்றன. ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபை, சமாசங்கள் மாவட்டரீதியில் அமைந்த கூட்டுறவு சபை எல்லாம் அபிவிருத்தி நோக்கமாய்ச் சேவை செய்பவையாகும்

நாமும் கூட்டுறவின் வரைவிலக்கணப் படி ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் வாழப்பழகுதல் வேண்டும்.

செல்வி இராஜேஸ்வரி சின்னத்துரை
2ம் வருடம்.

---

குறைதான் குறை பற்றிக் குறை சொல்லும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு நிறைவு பெற்றவர்களாக இருக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு பிறர் குறைகளைப் பொறுத்துக் கொள்வதில் அன்பும் அமைதியும் காட்டுவோம்.

—பெனலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் எழில்

அந்தமும் ஆதியும் அற்றவனே பாசமாம்
பந்தங்கள் இல்லாப் பரிசுத்தம் - விந்தையாய்
வையகம் காத்திடும் வல்லவனே உன்னடியைப்
உபயவந்து போற்றுகிறேன் நான்.

ஆவியாய் விண்ணில் அசைகின்றாய் வையத்தைத்
தூவினாய் வார்த்தையால் தூயதாய் - சோதியாய்
எல்லோரின் உள்ளமதை எய்தினாய் என்னவோ
சொல்வேன் எழிலுருவைத் தான்.

அன்பே உனது அதிசயப் பண்பாகும்
துன்பம் தணித்தல் தலையாகும் - இன்பம்
விளைத்தல் இயல்பான வேட்கையாம் எல்லோர்
தளைகள் அறுத்தல் விருப்பு.

தந்தை இலக்கணம் தாங்கிடும் தற்பரனே
விந்தையாம் வாழ்வதனைத் தந்தாயே - சொந்தமெனப்
பாராட்டி மீக்கூர் பரிவுடனே எம்மையும்
சீராட்டும் எந்தாய் சரண்.

பாலூட்டும் பட்சமுள்ள பாவை பரிவிலும்
தாலாட்டும் தாயின் தயையிலும் - மேலெழுந்து
பொங்கி வடிகின்ற பாசமும் கொண்டுள்ள
மங்காத அன்புடையோய்.

கட்டி யணைக்கின்ற கட்டழகன் போல்நின்று
கட்டிக் கரும்பு கசியுமின்பம் - அட்டியின்றி
அள்ளி அளிக்கின்றாய் ஆனந்தம் அன்பரின்
உள்ளமதைக் கொள்ளைகொண் டாய்.

சொட்டுகின்ற சோதர பாசம் பெருக்கெடுக்கு
மட்டில் நலன்களை மாரியாய்க் - கொட்டி
உடன்பிறப்பாய்க் கைதந் துதவுவது உந்தன்
கூடல்கொள்ளாக் காருணியங் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய மெனும் வீட்டி லுள்ளவின் னல்கவெல்லாம்
உதயம் தொடக்கம் உணர்ந்து – பதமாகப்
பார்க்கும் பரிகாரி பாரிசமாய்ப் பக்தர்கள்
ஈர்க்கு முளந் தாளு யிரம்.

துன்பம் நிறைந்து துயர்கூரும் வேளையில்
இன்பாய் உதவுகின்ற ஏகபரன் - என்புருகத்
தந்திடுவாய் தஞ்சமும் தாசருக்கு நண்பனாய்
வந்திடுவாய் வாழ்வளிப் பாய்.

ஆண்டவனாய் அன்னையாய் அப்பனாய் அன்பனாய்
ஈண்டளிக்கும் சோதரமாய் நண்பனாய் - வேண்டுவோர்
கள்ளமில்லா உள்ளமதைக் கோவிலாய்க் கொண்டிடும்
வெள்ளமனை அன்பே பணிந்து.

**சிஸ். அல்போன்ஸ் மேரி,**
2ம் வருடம்.

---

*ஒருவன் தன்னிடம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் குறைபாடுகள் எல்லாம் நம்பப்படுகின்றன. தன்னை மெச்சிக்கொள்ளும் புகழ் மொழிகள் ஒன்றுகூட நம்பப்படுவதில்லை. மொத்தத்தில் தன்னைப்பற்றிப் பேசிக்கொள்ளும் போதெல்லாம் அவன் நட்டமே அடைகிறன்.*

—மான்டேன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் ஆண்டு.

நாட்டில் வளமான வாழ்விற்கு மனித சமுதாயத்தை ஈன்று உருவாக்கி எடுத்துக் கொடுப்பதும் குடும்பத்தின் சுமுகமான இன்பமான இல்லற வாழ்வு வாழ்வதும் குடும்பத்திலே ஏற்படுகின்ற இல்லாமையைப் போக்குவதற்கு பசி பட்டினி ஆகியவற்றை இன்முகம் காட்டி ஏற்றுக் கொள்ளும் தன்மையும் மற்றவர்களுக்கு அமுதூட்டி மிகுதி இருப்பதை உண்ணும் தியாகமும் கொண்டதுதான் தாய்க்குலம். இது தாய்மையின் தனிச்சிறப்பாகும். எனவே தான் ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் தாபனம் ஒவ்வொரு ஆண்டையும் பெயரிட்டு வருகின்றது. உலகக் குடித் தொகையின் அரைப்பங்கினர் மாதர்கள். ஆகவே இவர்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கவனத்திற்குள்ளாகினர். அதுமட்டுமா? 1974ம் ஆண்டை உற்பத்தியாண்டாகப் பிரகடனம் செய்ததற்குப் பின்னர் அடுத்த ஆண்டைச் சர்வதேச மகளிர் ஆண்டாகப் பிரகடனம் செய்திருப்பது பொருத்தமானதேயாம்.

மாதர்களின் நிலை உலகெங்கிலும் ஒரே தன்மையுடையதாக இல்லை. என்றாலும் பொதுவாக மனித சமுதாய ஆரம்ப காலம் தொட்டு குடும்பத்தில் குழந்தைகளைப் பெற்று வளர்த்தல், உணவு தயாரித்தல், சுகவீனமுற்றோர்களைப் பராமரித்தல் இவற்றைவிட ஆண்களுக்கு உழைப்பில் உதவியாயிருத்தல் போன்ற பலதரப்பட்ட பணிகளில் பெண்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்காக எதுவித ஊதியமும் பெறவில்லை? இப்படிக் கவனம் முழுவதும் குடும்பத்திற்காகச் செலவிட்ட போதும் சமுதாயத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானத்திலில்லை. என்றே கூறுதல் வேண்டும்.

முன்னைய காலங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நிலையைச் சற்று நோக்கினால் அவர்கள் இளம் வயதில் திருமணப் பருவம் வரை தாயின் கட்டுக்கோப்புக்குள் வெளி உலகம் அறியாமல் வாழ்ந்துவிட்டுத் திருமணம் செய்ததும் கணவனின் அடிமையாகப் பிள்ளை பெறும் யந்திரமாக இருந்து விடுவதோடு அவர் வாழ்க்கை முடிவடைந்து விடுகிறது. இதனால் கூண்டுக்கிளியாக, கிணற்றுத்தவளையாக இருந்தனர் பெண்கள். அதுமட்டுமா கணவனை இழந்த பெண்ணை உடன்கட்டை ஏறச் செய்வதும் சமூகத்தினர் புறக்கணித்து உதாசீனப் படுத்தி கொடுமைப் படுத்தலும் அநாதைகள் தனித்து வாழ முடியாமல் பிறரின் வீடுகளில் அடிமைகளாக இருத்தலும் வருத்தத்திற்குரியது. இவற்றிற்குக் காரணம் பெண்களின் அறிவுக் கண் மூடியிருந்த தெனலாம். இது அவர்களுக்கு தடைக்கல்லாக இருந்தது.

பொதுவாக மாதர்களின் பணிகள் குடும்பப் பராமரிப்பாக இருப்பினும் கலாச்சாரப் பழக்க வழக்கங்கள் சமயம் பொருளாதாரம் போன்றவற்றினால் வேறுபடுகின்றன. பாரதியார் போன்றோர் பெண் விடுதலை இயக்கங்களில் பெரிதும் பங்குபற்றி நிலையை உயர்த்தப் பாடுபட்டனர். இதன் எதிரொலியாக பெண்களுக்குப் பாடசாலைக் கல்வி அளிக்கப்படலாயிற்று. இக்கல்வி மாற்றம் பெண்களின் அந்தஸ்து நிலையில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது.

பெண் விடுதலை என்ற வெள்ளம் புறப்பட்டது. அதனால் மாதர் கல்வி நிலையில் உயர்ந்து விளங்க வாய்ப்பேற்பட்டது. காலப் போக்கில் படித்துவிட்டு வீட்டில் இருக்காமல் தொழிலிலும் புகுந்து விட்டார்கள். இன்று உலகில் அரசியல் விளையாட்டு போன்ற எதனை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலும் ஆண்களுக்குச் சமமாக இடம் பெறும் அளவிற்குப் பெண்கள் உயர்ந்துள்ளார்கள். பெண்கள் தலைநிமிர முடியாது அடிமை வாழ்வு வாழ்ந்த காலம் மாறிவிட்டது. இன்று மதிப்பு பெருமைகள் உண்டு என்று கர்வமாகத் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையைக் காண்கின்றோம்.

ஆசியாவில் இரண்டு பெண் பிரதமர்களுடன் பல பெண் அரசியல் வாதிகளும் விளங்கக் காண்கிறோம். மற்றும் பல துறைகளிலும் பெண்கள் பெருமளவில் ஈடுபட்டிருப்பதிலிருந்து மாதர்கள் சமூகத்தில் மதிக்கத்தக்க இடத்தில் உள்ளனர் என்பதில் ஐயமில்லை. பெண்கள் சகல துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். பிரபல்யம் வாய்ந்த தேசிய விஞ்ஞானக் சழகத்தின் தலைவராக மாதர் ஒருவர் கடமை புரிகின்றார், வைத்தியர்கள் பொறியியலாளர்கள், நிர்வாகிகள், விஞ்ஞானிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கட்டட வல்லுநர்கள், நீதிபதிகள் எனப் பல வகைகளிலும் தமது சாமர்த்தியத்தைக் காட்டி நிற்கின்றனர்.

உடல் வலுவிலோ அன்றி அறிவாற்றலிலோ பெண்கள் எந்த விதத்திலும் ஆண்களுக்குச் சளைத்தவர்களல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எவரெஸ்ட் மலையுச்சிக்குச் செல்வதிலோ, அல்லது விண்வெளியில் பறப்பதிலோ பெண்கள் ஆண்களுக்கு குறைந்தவர்களல்லர். ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின் அந் நாட்டில் பெண்களின் நிலையும் உயர்தல் அவசியம். பெண்களை மதிக்காத சமூகம் எக்காலத்திலும் முன்னேறாது என்பது பெரியோர் வாக்கு. ஆகவே அவர்களையும் தனிமனிதர்களாக கணித்துச் சமசந்தர்ப்பம் வழங்குதல் அவசியம்.

சிறந்த மனித வளத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டிற்கு ஓர் சிறந்த சேவையை மாதர்கள் செய்கின்றனராயினும் பெண்களின் நிலை சமூகத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் அதாவது ஆண்களோடு சரிநிகர் சமானமுடையதாக இல்லை. தனக்கென உள்ள அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிர்ஷ்டம் தமிழ்ப் பெண்ணின் தந்தை அல்லது கணவனது மனோநிலையைப் பொறுத்தது. பெரும்பாலான பெண்கள் சமூகத்திலே ஊறிப்போன பழக்க வழக்கங்களுக்குக் கட்டுப்பட்டு ஆசைகளை அடக்கி குடும்ப நலனை பெரிதெனக் கருதுகின்றனர். ஒரு சிறந்த பெண் ஆணுக்கு அடங்கி அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்களைக் கொண்டவளாக இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கின்றது.

பெண்ணானவள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவும் வேலைக்குச் செல்லக்கூடும். தனது சுயதிருப்திக்காகவும், மன நிறைவுக்காகவும் வேலைக்குச் செல்வதை விரும்பக் கூடும். வீட்டிலே அடைபட்டு சதா வீட்டைக் கவனிப்பதனால் ஏற்படக்கூடிய சலிப்பு வெளியில் செல்வதால் நீங்கலாம். இப்படியாகப் பெண் வேலைக்குச் செல்வதால் பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

சர்வதேச மகளிர் ஆண்டில் சிலகுறைபாடுகளைத் தீர்க்கும் போராட்ட முயற்சியில் மாதர் ஈடுபட்டு உள்ளனர். இம் முயற்சி பல காலமாக நடைபெறுகின்ற போதும் இவ்வாண்டு மிக மும்முரமாக இருக்கின்றது. பெண்கள் பெண்மை என்கின்ற பேரில் தம்மை நுகர்ச்சிப் பொருளாகக் கருதிக் கொள்கின்ற நிலைக்கு எதிராக நடாத்துகின்ற ஆன்மிகப் புரட்சியே இதுவெனலாம். ஆன்மாவைப் பீடித்துள்ள அகவிலங்குக்கு எதிரான போராட்டம்.

பெண் வீட்டை விட்டு வேலைக்குச் செல்வதால் அவளது உடலாரோக்கியம் கெட்டுவிடும். கணவனது, பிள்ளைகளது மனச்சந்தோஷத்தைப் பூர்த்தி செய்ய இயலாது. பிள்ளைகளது மனமுறிவு இவை யாவற்றிற்கும் மேலாக வீதியிலே, பஸ்சிலே ஆடவரது பார்வைக்கு............... இலக்காவது போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் எவ்வளவு பெரிய பதவி வகித்தாலும் வீட்டில் அவள் தாய். நிர்வாகத்தில் ஏதும் தவறுகள் நேர்ந்துவிட்டால், அதை சமூகம் தவருக எடை போட்டுவிடும். அடுப்பூதும் பெண்களுக்கு ......... ''பெண் புத்தி பின் புத்தி'' ...... என்று குறை கூறத் தொடங்கும்.

பெண் தன் கல்வியை தொழில் நிலையங்களிலோ, வங்கிகளிலோ, அலுவலகங்களிலோ பயன்படுத்த விரும்புகிருளே தவிரத் தன் குடும்பத்தின் நல்வாழ்வுக்கு பயன்படுத்துவதாக இல்லை. குழந்தைகளை ஆரோக்கியமான குழந்தைகளாக நாட்டிற்கு உதவக்கூடிய அறிவாளிகளாக வளர்க்க வேண்டும். அளவோடு பெற்று நல்லவர்களாக்க வேண்டும். கணவனின் வாழ்க்கையில் அவனின் கஷ்ட நஷ்டங்களில் உதவ வேண்டும். இதற்காகத் தான் அறிவுக்கண் திறக்கப்படவேண்டுமென்று கருதினர். ஆனல் தவருகப் புரிந்து கொண்டமையினுல் இன்றைய படித்த பெண்கள் தாய் என்ற ஸ்தானத்தில் இல்லாமல் சமூகத்தில் மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பகட்டான பல காரியங்களில் ஈடுபட்டு குடும்பத்தை கைவிட்ட நிலையைப் பார்க்கலாம்.

பெண்களின் படிப்பு ஒரு அவசர நிலைமையில் அவசியமான சமயங்களில் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் தம்மாலான முறையில் உதவி குடும்பம் சீரழிந்துவிடாமல் பார்ப்பதற்கு பயன்பட வேண்டும். எனவே படித்து விட்டாலும் தாய் என்ற ஸ்தானத்தை மறந்துவிடக் கூடாது. இது இயற்கை அளித்திடும் உன்னதமான கொடை. எனவே இதைச் சரியாகப் பயன்படுத்தாமல் ஆசிரியை, டாக்டர், வக்கீல் என்ற பட்டங்களை வகித்து மகிழ்ச்சியடைவதில் எவ்வித நன்மையும் இல்லை. பெண்கள் திருமணமாகும் வரை தம் கல்விக்கேற்ற எந்த வேலையினைச் செய்தாலும் 'தாய்' என்ற ஸ்தானம் அடைந்ததும் அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

சமூகத்திற்கும், சமுதாயத்திற்கும் நாட்டின் தேசிய வளத்திற்கும் பெண்கள் ஆண்களைவிட அதிக அளவிலே சேவை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டு இருக்கிருர்கள். இவர்கள் இச் சவாலை ஏற்று அக்கடமைகளைச் செவ்வனே ஆற்றி வருதல் வேண்டும்.

செல்வி. பேரின்பஜானகி செல்லத்துரை

சுதந்திரத்தில் இருந்துதான் பயமும் வேதனையும் பிறக்கின்றன. சுதந்திரத்தில் இருந்து விடுபட்டவன் பயத்தையோ வேதனையையோ அறியான்

—புத்தர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளையாட்டுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்ற இராதா இல்லத் தலைவி வெற்றிக் கேடயத்தைப் பெறுகிறார்.




விளையாட்டுப்போட்டியில் பரிசுபெறும் வீராங்கனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல விளையாட்டுப்போட்டி





இல்ல விளையாட்டுப்போட்டியில் திரு. சபாலிங்கம் அவர்களின் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர்

## பாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | கல்வி I | சிஸ். | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குருஸ் |
| 2 | கல்வி II | செல்வி | நவமணி சதாசிவம் |
| 3 | இந்து சமயம் | செல்வி | மகேஸ்வரி சுந்தரராஜன் |
| 4 | கிறிஸ்தவம் R.C. | சிஸ். | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குருஸ் |
| 5 | கிறிஸ்தவம் N.R.C. | செல்வி | தேவ அன்னராணி சந்திரசேகரம் |
| 6 | தமிழ் | சிஸ். | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குருஸ் |
| 7 | கணிதம் | திருமதி | தவபவானி சிவராசா |
| 8 | சூழல் | திருமதி | நீற்று ஹரல்ட் பத்மநாதன் |
| 9 | பொதுவிஞ்ஞானம் | செல்வி | செந்தில்ராணி கந்தையா / |
| | | செல்வி | தவமணி கந்தையா |
| 10 | உடல்நலக் கல்வி | திருமதி | லில்லிபுளோரா நடேசமூர்த்தி |
| 11 | தையல் | ,, | ஞானம் இராசையா |
| 12 | சங்கீதம் | ,, | புனிதராணி நவரத்தினம் |
| 13 | நடனம் | ,, | காமல் அருந்ததி யோகநாதன் |
| 14 | சித்திரம் | சிஸ். | தெரேசா மேரி ஜெனெற் பெரேரா |
| 15 | கைவேலை | ,, | தெரேசா மேரி ஜெனெற் பெரேரா |

## தெரிவுப் பாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 16 | தமிழ் | சிஸ். | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குருஸ் |
| 17 | கணிதம் | திருமதி | தவபவானி சிவராஜா |
| 18 | சமூகவியல் | செல்வி | மாலினி செல்வநாயகம் |
| 19 | பொது விஞ்ஞானம் | ,, | தவமணி கந்தையா |
| 20 | சங்கீதம் | திருமதி | இந்திரவதனி அரியரத்தினம் |
| 21 | நடனம் | ,, | காமல் அருந்ததி யோகநாதன் |
| 22 | உடல்நலக் கல்வி | செல்வி | ஹில்டா பொன்ரதி அந்தோனிப்பிள்ளை / |
| | | செல்வி | சுந்தராம்பிகை சபாரத்தினம் |
| 23 | சித்திரம் | செல்வி | பாக்கியவதி கந்தசாமி |
| 24 | மனையியல் | ,, | தையல்நாயகி கந்தையா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 25 | ஆங்கிலம் - முறை | சிஸ். | தெரேசா மேரி ஜெனெற் பெரேரா |
| 26 | பொதுத் தேர்ச்சி | ,, | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குரூஸ் |
| 27 | பல்திறன் | திருமதி | காமல் அருந்ததி யோகநாதன் |
| 28 | கற்பித்தல் | ,, | எஸ். எஸ். புவனேஸ்வரி |
| 29 | ஒழுங்கான வரவு | செல்வி | தேவஅன்னராணி சந்திரசேகரம் |
| | நிருவாகத் திறமை | | |
| 30 | தலைவி: | ,, | ரேணுகா செந்திநாதன் |
| 31 | உப தலைவி: | ,, | மடுமலர் மார்சலீன்பிள்ளை |

## போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 32 | பேச்சு | திருமதி | வடிவாம்பிகை கணேஷ் |
| | கதை சொல்லல் | | |
| 33 | மேற் பிரிவு: | செல்வி | தேவமனோகரி குமாரவேலு |
| 34 | மத்திய பிரிவு: | ,, | சரஸ்வதி செல்வநாயகம் |
| 35 | கீழ்ப் பிரிவு: | திருமதி | காமல் அருந்ததி யோகநாதன் |
| 36 | நாடகம் ஆண்: | செல்வி | கிறேஸ் செபமாலை |
| 37 | பெண்: | ,, | விமலா முருகேசு |
| | நாட்டிய நாடகம் | | |
| 38 | ஆண்: | ,, | நவமணி சதாசிவம் |
| 39 | பெண்: | திருமதி | காமல் அருந்ததி யோகநாதன் |
| 40 | கோலம்: மாக்கோலம்: | செல்வி | நிர்மலாதேவி செல்வத்துரை |
| 41 | பூக்கோலம்: | திருமதி | எஸ். எஸ். புவனேஸ்வரி |
| 42 | | செல்வி | ஜெயகௌரி பொன்னையா |
| 43 | | ,, | தனரஞ்சனி ஜீவரத்தினம் |
| 44 | | திருமதி | கமலாம்பிகை ஸ்ரீ சுப்பிரமணியம் |
| 45 | | சங். சகோ. | பேக்மன் |
| 46 | கைவேலை தென்னை: | செல்வி | தேவ அன்னராணி சந்திரசேகரம் |
| 74 | பனை: | சங். சகோ. | திரேசா மேரி, ஜெனற் பெரேரா |
| 48 | கடற்பொருள்: | செல்வி | மகாலட்சுமி சிவகுரு |
| | ஆங்கிலம் பேச்சு | | |
| 49 | பிரிவு A: | ,, | மொன்றீசா ஞானப்பிரகாசம் |
| 50 | பிரிவு B: | திருமதி | புவனேஸ்வரி கருணாகரன் |
| 51 | பிரிவு C: | ,, | எஸ். எஸ். புவனேஸ்வரி |
| 52 | வினாடி வினாப்போட்டி | செல்வி | பேரின்பஜானகி செல்வத்துரை |
| 53 | இசைப் போட்டி | திருமதி | புனிதராணி நவரத்தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்ச்சிச் சான்றிதழ் பெறுவோர்

| | | |
|---|---|---|
| 1 | சிஸ். | அல்போன்ஸ் மேரி அருளானந்தம் குரூஸ் |
| 2 | திருமதி | தவபவானி சிவராசா |
| 3 | செல்வி | தவமணி கந்தையா |
| 4 | ,, | ருக்மணிதேவி கணபதிப்பிள்ளை |
| 5 | ,, | கனகம்மா தம்பிப்பிள்ளை |
| 6 | திருமதி | இந்திரவதனி அரியரத்தினம் |
| 6 | செல்வி | நவமணி சதாசிவம் |
| 8 | ,, | கலாதேவி நாகலிங்கம் |
| 9 | ,, | இந்திராதேவி தம்பையா |
| 10 | ,, | நிர்மலாதேவி செல்வத்துரை |
| 11 | ,, | ரேணுகா செந்திநாதன் |
| 12 | ,, | மகாலட்சுமி சிவகுரு |
| 13 | ,, | மாலினிதேவி செல்வநாயகம் |
| 14 | ,, | பிரியதர்சினி வடிவேல் |
| 15 | சிஸ். | தெரேசா மேரி ஜெனெற் பெரெரா |
| 15 | செல்வி | செல்வராணி நல்லையா |
| 17 | ,, | கலா சிவபாலசுந்தரம் |
| 17 | ,, | செந்தில்ராணி கந்தையா |
| 19 | ,, | புவனேஸ்வரி காசிப்பிள்ளை |
| 19 | திருமதி | புனிதராணி நவரத்தினம் |
| 21 | ,, | லூட்ஸ் மேரி ஆறுமுகம் |
| 22 | செல்வி | தேவமனோஹரி குமாரவேலு |
| 23 | ,, | ஸ்கந்தகுமாரி சிவசுப்பிரமணியம் |
| 24 | திருமதி | காமல் அருந்ததி யோகநாதன் |
| 25 | செல்வி | கமலாதேவி மார்க்கண்டு |
| 26 | ,, | தையல்நாயகி கந்தையா |
| 26 | திருமதி | லில்லி புளோரா நடேசமூர்த்தி |
| 28 | செல்வி | சுந்தராம்பிகை சபாரத்தினம் |
| 28 | ,, | யோகராணி ஆபிரகாம் |
| 28 | திருமதி | செல்லம்மா வடிவேல் |
| 31 | ,, | சரஸ்வதி சின்னத்தம்பி |
| 32 | செல்வி | இராஜேஸ்வரி சின்னத்துரை |
| 33 | திருமதி | பர்வதபத்தினி மகேஸ்வரன் |
| 34 | செல்வி | மகேஸ்வரி சுந்தரராஜன் |
| 36 | ,, | மொன்றீசா ஞானப்பிரகாசம் |
| 35 | ,, | ரோஸ்மலர் கனகரத்தினம் |
| 37 | ,, | தேவஅன்னராணி சந்திரசேகரம் |
| 38 | ,, | ஜெயகௌரி பொன்னையா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையிற் கோத்த புதிய முத்துக்கள்

1 அணைந்தோர்க்கு உதவி செய்து ஆதரவாய் இருந்திடுவாள் அடக்கக் குண முடையாள் அன்னமுத்து சின்னத்தம்பி —இராமநாதபுரம்

2 அன்புடனே எமக்கு அறிவுரைகள் பல பகர்ந்து அரியபல பொதுத் தேர்ச்சிப் பரிசுகளும் பெற்றிட்டார். அல்போன்ஸ்மேரி குரூஸ் — பேசாலை

3 பார்வையிலே கனல்பறக்கும் பாடலிலே இசை மணக்கும் பார்வையிவள் பகிடிகளோ பலரகத்தில் துனிரகம் தான் அன்னக்கன்று ஞானப்பிரகாசம் — நுணுவில்

4 இதமாய் இருந்து இங்கிதமாய்க் கதைபேசும் இனிய கன்னியவள் இந்திரா சின்னத்தம்பி — அச்சுவேலி

5 உருவத்திலே சிறியவளாய் கொண்டகாரியம் பெரியளாய்க் கருத்திலே கண்ணுயிருக்கும் கலைமலர் குழுத்தலைவி இந்திரவதனி அரியரத்தினம் — பளை

6 அங்கமெலாம் தங்கநிறம் அழகான ஆரணங்கு பொறுமையெனும் நகையணிந்து பெருமை கொள்ளும் பெண்ணரசி அகிலாண்டேஸ்வரி தர்மராஜா — கல்வியங்காடு

7 உடற்பயிற்சி என்றாலே உல்லாசம் காட்டிடுவாள் உன்னதகுணங் கொண்டாள் இராஜேஸ்வரி சின்னத்துரை — கோண்டாவில்.

8 விளக்கமுடன் கணிதம் விரிவாகக்கற்றிடுவாள் அளக்கமுடியாத அன்புடைமை கொண்டிடுவாள் ஜெயகௌரி பொன்னையா — நாவலப்பிட்டி

9 இராதா இல்லத்தின் இணையிலாப் பெருந்தலைவி கல்வியையும் கருத்தாகக் கற்றிடுவாள் கன்னியவள். இந்திராதேவி தம்பையா — காரைநகர்

10 மனையியல் மன்றத்து மாண்புடைச் செயலாளர் இனிய குரலுடையாள் கல இரஞ்சிதசற்குணதேவி அம்மா சோமசுந்தரம் — காரைநகர்

11 மள மள வென்றே பேசிடுவாள் மற்றோர் மனத்தைக் கவர்ந்திடுவாள் ஜெகதீஸ்வரி சிவசண்முகராஜா — கோப்பாய்

12 அருங்குணங்கள் அத்தனையும் ஒருங்கமைந்த பாவையவள் அன்பாகப் பழகிடுவாள் ஆபத்தில் உதவி செய்வாள் இராஜேஸ்வரி அப்புத்துரை — மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 பதருத குணமுடையாள் பாங்காக உடுத்திடுவாள் இனிமையாய்ப் பழகிடுவாள் ஸ்ரெலா தருமநாயகம் — யாழ்ப்பாணம்.

14 கமலம் போல் பொலிந்திருப்பாள் கலகலப்பாய்ப் பேசிடுவாள்
கருத்திலே கண்ணியமாய் வாழ்ந்திடுவாள்
கமலாதேவி இரத்தினம் — யாழ்ப்பாணம்.

15 கனிமொழியாள் தேன்மழைபோல் தமிழ்மாரி பொழிந்திடுவாள்
இனிமையாய்ப் பழகிடுவாள் இவட்கு நிகர் யாருமில்லை.
கமலாம்பிகை அமிர்தலிங்கம் — கொழும்பு.

16 கொல்லென்று சிரித்துக் குலுங்க நகைக்கவைக்கும் அருணு இல்லத்து அரிவையர் தலைவி ஸ்கந்தகுமாரி சிவசுப்பிரமணியம் — யாழ்ப்பாணம்

17 கணீரென்று ஒலித்திடுவாள் கனிவுடனே பழகிடுவாள் கல்வியிலும் முன்னின்று கற்றிடுவாள் கலாதேவி நாகலிங்கம் — அளவெட்டி.

18 நித்தியமும் அவள் முகத்தில் நெளிவதெல்லாம் சிரிப்பலைதான் சத்தியவான் சாவித்திரி நாட்டியத்தின் நாயகன்தான்
கில்டா பென்ரதி அந்தோனிப்பிள்ளை — யாழ்ப்பாணம்.

19 கணிதமுடன் விஞ்ஞானம் கலைகளும் வல்லவளாம் இனிமையுடன்
இரவில் இங்கிதமாய்ப் பேசிடுவாள்
உருக்குமணிதேவி கணபதிப்பிள்ளை — பருத்தித்துறை.

20 அமைதியாய் வாழ்ந்திடுவாள் அர்த்தமுடன் ஆவன செய்வாள்
சுமையாக வந்திடினும் சோர்வடையாள்
கலாவதி சிவபாதசுந்தரம் — வல்வெட்டித்துறை.

21 நாட்டியத்தில் நாடகத்தில் நடிப்பரசியாய்த் திகழ்ந்தாள் போட்டிகளில் பரிசுபெற்று புகழ்மிகுந்து விளங்குகின்றாள்
கிறேஸ் செபமாலை — மாதகல்

22 மனையியல் மன்றத்தின் மாண்புறு தலைவியாய்ப் பணிபுரிவதில் வல்லாள்
கமலவேனி கந்தையா — கொழும்புத்துறை

23 கணக்காய் வாதிடுவாள் கருத்துடனே கற்றிடுவாள்
பிணக்கிடினும் பேருள்ளம் கொண்டாள்
கனகாம்பிகை பாலசுப்பிரமணியம் — உடுவில்

24 பொல்லாத புன்சிரிப்பு பொங்கிவரும் நிலவு முகம்
சைவத் திருமகளாம் தமிழ் மன்றத் தலைவியவள்
கௌசலாதேவி குமாரசுவாமிக்குருக்கள் — நீர்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 கொடுத்த காரியம் பலவும் கச்சிதமாய் முடித்திடுவாள்
எடுத்த காரியத்திலும் சலிப்படையாள் கல்வியில் வல்லாள்
கனகம்மா தம்பிப்பிள்ளை — கல்வியங்காடு

26 அடக்கமுடன் இருந்து அறிவுரை வழங்கிடுவாள்
அன்பே உருவானவள்
கமலாதேவி இரத்தினசபாபதி — சுருவில்

27 பயிற்சியிலே வெற்றிபெறப் பதட்டமின்றிப் படித்திடுவாள்
முயற்சியுள்ள மங்கையிவள்
சரஸ்வதி — சின்னையா — மன்னூர்

28 இன்னல் பல இருந்தாலும் ஈசன் செயல் என்றே
கண்ணும் கருத்துமாய்க் கலாசாலை வந்திடுவாள்
கனகமலர் இராசசிங்கம் — சண்டிலிப்பாய்

29 குடும்பப் பொறுப்புகள் பலவற்றுடன் குதூகலமாய் களித்திட்டாள்
குணவதி தேவராசா — அல்வாய்

30 அருணா இல்லத்தின் ஆடலரங்கிலென்றால்
அருச்சுனனாய், கோவலனாய் ஆடிவென்ற அழகுமயில்
சரஸ்வதி செல்வநாயகம் — முல்லைத்தீவு

31 கோப்பின் தலைவி கோப்பாகத் திரிந்திடுவாள் கருமமே
கண்ணாயினாள் கமலேஸ்வரி சின்னத்துரை — இணுவில்

32 ஒயிலாக நடந்திடுவாள் ஓசையுடன் பேசிடுவாள்
நுண்கலை மன்றத் தலைவி
சந்திரமலர் மரியநாயகம் — அநுராதபுரம்

33 புத்தம்புதிய மலராய்ப் புனிதமாய் உடையணிந்து
அன்னநடை பயின்று வரும் அழகுப் பெட்டகம்
சுசீலா மகேசன் — யாழ்ப்பாணம்

34 அல்லியாய், கண்ணகியாய் அரங்குகளில் தோன்றி
அனைவரையும் மயக்கிடுவாள் ஆடலழகி
அருந்ததி யோகநாதன் — யாழ்ப்பாணம்

35 விகடமாய்ப் பேசிடுவாள் வீர் என்று சிரிக்க வைப்பாள் விகடகவி
சரஸ்வதி சின்னத்துரை — கட்டுவன்

36 கள்ளமிலா வெள்யுளம் கலகலென்று சிரித்திடுவாள் நகைச்சுவை
யாய் நடித்திடுவாள் நாரதராய் ஆடிவந்தாள் சுந்தராம்பிகை
சபாரத்தினம் — கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37 சிந்தையின்றிச் செலவிடுவாள் சிறப்புடனே கலகலப்பாள் பேரார்வம்
காட்டும் எம் உபதலைவி மடுமலர் மார்சலின்பிள்ளை
– வல்வெட்டித்துறை

38 தாய்மை உருவுடனே தாங்கிடுவாள் எல்லாம்
சேயாகப் பணிந்திடுவாள் சிரிப்புடனே
சரஸ்வதி ஆனந்தசுந்தரம் – ஏழாலை

39 கொடிபோல அசைந்திடுவாள் குழந்தைபோல் சிரித்திடுவாள்
நடமாடும் கோயிலவள் நயமாகப் பேசிடுவாள்
செல்வராணி நல்லையா – யாழ்நகர்

40 சாந்தமே உருவாகிச் சாமர்த்தியமாய் கடமை செய்யும்
மாது நல்லாள் சாந்தம்மா கந்தசாமி —வசாவிளான்

41 கதைப் புத்தகம் கட்டாக வைத்திடினும்
காரியத்தில் கண்ணுயிருக்கும் காரிகை
சுகுணதேவி மகேஸ்வரன் – அச்சுவேலி

42 செல்வி என்ற சிறுமங்கை கீதங்கள் இசைத்திடுவாள்
சிங்காரமாய் நடப்பாள் சிக்கனமாய்ச் செலவு செய்வாள்
செல்வநாயகி வெற்றிவேல் – கண்டி

43 சிரித்து மகிழ்ந்திடுவாள் சிந்தித்தே பேசிடுவாள்
சிறப்பினைப் போற்றிடுவாள் கீதா கணேசன் – மாவிட்டபுரம்

44 புன்முறுவல் பூக்கப் பூரிப்புடன் வந்திடுவாள்
இன்முகம் காட்டும் எங்கள் சாது
செல்வராணி தியாகராஜா - வளலாய் அச்சுவேலி

45 குக்கனுக ஆடிப் புகழ் பெற்றுள் குணக்குன்று
அழகாக ஒளிவீசி ஆடிவரும் பொன்விளக்கு
தனரஞ்சினி ஜீவரத்தினம் – நல்லூர்

46 துடுக்குக் கேள்விகளைத் துல்லியமாய் கேட்டிடுவாள்
செல்லக் கதைபேசும் பாவை
செந்தில்ராணி கந்தையா – நாவற்குழி

47 சித்திரம் என்றவுடன் சிங்காரி எழுந்திடுவாள்
சிக்கனமாய் வாழ்ந்திடுவாள் செபமாலை செல்லையா – நவாலி

48 தென்றல்போல் குளிர்ந்த பார்வை தேன்போலப் பேசிடுவாள்
அன்றலர்ந்த தாமரைபோல் அழகாகச் சிரித்திடுவாள்
தனலட்சுமி நாகரத்தினம் – காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49 செல்விருந்தோம்பி வரும் விருந்தினரைக் காத்து நிற்கும்
சீரிய குணமுடையாள் செல்வலக்சுமி பொன்னுத்துரை
- தலவாக்கொல்லை

50 ஆராய்ச்சி செய்திடுவாள் அனைத்தையும் அறிந்திடுவாள்
ஆட்டிவைப்பாள் அனைவரையும்
தவபவானி சிவராஜா - அளவெட்டி

51 அன்றலர்ந்த தாமரைபோல் என்றுமவள் ஒளிர்ந்திடுவாள்
அடக்கமும் அமைதியும் அழகுமுள்ள மலர் வதனி
திரேசா மரியாம்பிள்ளை – சிலாபம்

52 பண்ணோடுபாடிப் பரம்பொருளைப் பணிந்திடுவாள்
கண்ணெனவே கல்வியையும் கவனமுடன் கற்றிடுவாள்
அருந்ததி கணேசலிங்கம் – திரிகோணமலை

53 மலைபோல் எதுவந்தாலும் தன்னிலையில் தளர்ந்திடாள்
தலை போனாலும் தன்னிஷ்டம் செய்திடுவாள்
திலகவதி பரமானந்தராஜா – துணுக்காய்

54 கரிகாலன் அபராஜிதனுய்க் கன்னியரைக் கவர்ந்திழுத்த
நிமிர்ந்த நடையழகி நிகரின்றிக் கற்கும் நங்கை
தேவமனோகரி குமாரவேல் – மீசாலை

55 உற்பத்திப் பணியில் ஊக்கமாய் உழைத்திட
உறுதியாய் நின்றிடுவாள் ஞானம் இராசையா – மன்னார்

56 துடுக்கென்று பேசிடுவாள் துள்ளி எழுந்தாலும்
தூய உள்ளம் கொண்டாள்
தில்லைப்பிள்ளை ஆறுமுகம் – முள்ளியவளை

57 முன்வரிசை ஆசனத்தில் எந்நாளும் அமர்ந்திருப்பாள்
தினவரவுப் பரிசையும் சீராகப் பெற்றிட்டாள்
அன்னராணி சந்திரசேகரம் – வவுனிக்குளம்

58 செல்லப் பேச்சாலே சிந்தை கவர்ந்திடுவார்
சீராகக் கைப்பணியில் சிறப்புப் பரிசு பெற்றிட்டார்
சகோதரி ஜெனற் பெரேரா – சிலாபம்

59 விளங்காத புதிரெல்லாம் விளக்கி வைப்பாள் விவேகியவள்
அழகு என்னும் தெய்வமகள்
நிர்மலாதேவி செல்வத்துரை குருநாகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 ஆற்றல் பல இருந்தாலும் அலட்டித் திரியாமல்
அமைதியாய் இருந்து விஞ்ஞானப் பரிசுபெற்ருள்
தவமணி கந்தையா — கல்வியங்காடு

61 அடக்கமாய் இருந்தாலும் அரங்கிலே ஏறிவிட்டால்
அனைவரையும் திகைக்க வைப்பாள்
நாகம்மா தவம் — உடுப்பிட்டி

62 இறைவனுக்குப் பணிபுரிவாள் இன்முகமும் காட்டிடுவாள்
இந்து மா மன்றத்தின் சிறந்தவொரு பெருந்தலைவி
பரமேஸ்வரி ஆறுமுகம் கெக்கிராவை

63 தயவாய் இருந்திடுவாள் தன்னலமே கருதாது
தயவுடனே சேவை செய்வாள்
தனேஸ்வரி செல்வரத்தினம் — சுண்டிக்குளி

64 கடமை செய்வதில் கண்ணுய் இருந்திடுவாள்
திடமாக எதையும் சீராகச் செய்திடுவாள்
பத்மாவதி பரமராசு — வேலணை

65 பூசை என்ருல் கோயிலிலே பூமாலை கட்டிடுவாள்
ஆசையுடன் கற்றிடுவாள் அழகாகச் சிரித்திடுவாள்
புவனேஸ்வரி காசிப்பிள்ளை — வட்டுக்கோட்டை

66 தன்னடக்கம் சாந்தகுணம் மற்றுமுயர் குணமெல்லாம்
தாங்கி நிற்பாள் தங்கரெத்தினம் நாகராசா — கொழும்புத்துறை

67 நித்தமும் இன்பமாய் எல்லோருடனும் வாழ்ந்திடுவாள்
பக்தியிலே சிவத்துடனே கலக்கும் பாவையிவள்
பாலசரோஜினி அரியகுட்டி — இயக்கச்சி

68 சகசமாய்ப் பழகிடுவாள் சந்தோஷமாய்ச் சிரிப்பாள்
விளையாட்டாய்க் கதைத்திடுவாள் விகற்பமின்றிப் பழகிடுவாள்
புவனேஸ்வரி வீரசிங்கம் — வவுனியா

69 சிக்கல்தனைக் களைந்து சீர்பெறவே வாழ்ந்திடுவாள்
கல்வியில் கருத்துடைய திருமகள் கணபதிப்பிள்ளை — கண்டி

70 பொறுப்புடனே எடுத்த காரியம் இனிதாய்ச்
சிறப்புடனே செய்யும் சிற்றிடையாள்
பிரியதரிசினி வடிவேல் — மானிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71 கயல்விழி காட்டி எம்மைக் கவர்ந்திழுக்கும் கட்டழகி
உதிஷ்டிரனாய் நடித்துவிட்ட உத்தமி
பேரின்பஜானகி செல்வத்துரை — அநுராதபுரம்

72 வாய் ஓயாது வாதாடிக் கதைபேசும்
வண்ண வடிவழகி பரிசாதும் மனையியலில் பெற்றிட்டாள்
தையல்நாயகி கந்தையா — உருத்திரபுரம்

73 இல்லத்தின் சிறப்புக்கு இராப்பகலாய் உழைத்திடுவாள்
எல்லாக் காரியமும் முன்னின்று செய்திடுவாள்
புனிதராணி நவரத்தினம் — சாவகச்சேரி

74 மங்கையரில் தங்கமவள் மகிழ்ச்சியுடன் தோன்றிடுவாள்
வீண்பொழுது போக்காமல் விருப்பமாய் கற்றிடுவாள்
மரியபுஷ்பம் மகாலிங்கம் — கண்டி

75 நடிப்பிலே பரதனும் படிப்பிலே பரிசும் பெற்றுத்
துடிப்புடனே கருமமாற்றும் 'ஏ' வகுப்புத் தலைவி
நவமணி சதாசிவம் — சரசாலை

76 சிந்தனையாய் வாழ்வினிலே செயலகத்தில் இன்புறுவாள்
அடக்கமே உருவானவள் பூபதி சின்னையா — கோண்டாவில்

77 மங்கையர் திலகமவள் மாசிலாமாணிக்கம்
கவர்ச்சியுடன் குழந்தைகட்குக் கதைகள் எலாம் கற்பிப்பாள்
மரியம்மா பெர்நாந்து — நெடுந்தீவு

78 சுகாதார மந்திரியாய்ச் சோர்வின்றி உழைத்திடுவாள்
சீரிய சிந்தனைகளை நூற்பாகக் கூறிடுவாள்.
பர்வதபத்தினி மகேஸ்வரன் — புங்குடுதீவு

79 கருத்தடக்கிப் பேசினும் கலகலவென்று சிரித்திடுவாள்
பொருத்தமுடன் எதையும் புனைந்திடுவாள்
பூமணி சீனியர் — வல்வெட்டி

80 'அக்காவென்று அன்புடனே யார்கூறி அழைத்தாலும்
'என்னடா' என்று இயம்பிடும் மிஸ்ரசி
மேரி கதரின் மரியாம்பிள்ளை —நீர் கொழும்பு

81 இடைவிடா இறை பக்தியும் எவர்க்கும் உதவும் குணமும்
கொண்டு பாக்கியமாய் வாழும் பத்தினி
பாக்கியம் இரத்தினம் —புத்துவெட்டுவான்

82 சித்திரம் தான் தெரிவு பாடம் ஆனாலும் என்றும்
சித்திரமாய் வண்ணங்கள் தீட்டிடுவாள்.
மேரி றேசலின் பிரான்சிஸ் —மிருசுவில்

83 விளையாட்டு மன்றத்தின் வீரமிகு தலைவியிவள்
விதுரனாய் வசிட்டனாய் விதம் விதமாய் நடித்துவிட்டாள்
யூலியட் தவமணி கணேசதாசன் —திரிகோணமலை

84 சித்திரம் தீட்டுவதில் கைதேர்ந்த வித்தகியாம்
சித்திரப் பொம்மைபோல் அலங்கரிப்பாள் பீ வகுப்பை
மேரி யொசவின் சண்முகம் —வட்டுவாகல்

85 அடக்கமாய் இருந்து ஆழமாய்க் கற்றிடுவாள்
மிடுக்காகக் கதைத்திடுவாள் மெல்லியலாள்
யோகலட்சுமி பாலசுப்பிரமணியம் —வேலணை

86 ஆராய்ச்சிக் கேள்விகளை ஆர்வமாய்க் கேட்டே
கல்வியைத் தெளிவுடனே கற்றிடுவாள்
மகாலட்சுமி சிவகுரு —கிளிநொச்சி

87 விஞ்ஞான முறையில் எதையும் விதந்துரைப்பாள்
அஞ்ஞானப் போக்கில் அசட்டையுடன் திரிந்திடுவாள்.
மேரி மொன்றீசா ஞானப்பிரகாசம் —நாரந்தனை

88 சீ வகுப்புத் தலைவியாய் ஈராண்டுச் சேவை செய்த நங்கையவள்
லீலாவதி சீவரத்தினம் —நெல்லியடி

89 சைவமும் தமிழும் தழைத்திடவே எந்நாளும்
மகிழ்வுடன் பணிபுரியும் மங்கை இவள்
மகேஸ்வரி சுந்தரராஜா —திரிகோணமலை

90 மேல்நாட்டுச் சேலைகளை மிதமாகக் கட்டிடுவாள்
மாண்புடனே யாருடனும் மதிப்பாகப் பழகிடுவாள்
வள்ளியம்மை கணபதிப்பிள்ளை —சுழிபுரம்

91 வடிவழகி வந்துவிட்டால் வகுப்பினிலே கலகலப்பு
மேடையிலே ஏறிவிட்டால் மென்குரலில் முழங்கிடுவாள்
வடிவாம்பிகை கணேஷ் —யாழ்ப்பாணம்

92 துயரமடைந்தோர் மனதில் துன்பந் தீர்க்கத்
துடிக்குக் கதை கூறிடுவாள். மரிய குளோட்டில்டா டயஸ் —கற்பிட்டி

93 பண்புக்கும் அன்புக்கும் பிறப்பிடமாய் இன்புறுவாள்
கண்டோர் அழகியெனும் காரிகையாள்.
வைஜயந்திமாலா சாமுவேல் —அவிசாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94 சிறுவரைப் போல் சிரித்திடுவாள் சேர்ந்திருந்து படித்திடுவாள்
சுறுசுறுப்பாய்த் திரிந்திடுவாள்.
ஹரல்ட்றீற்ரு பத்மநாதன் — கொழும்பு

95 கலாசாலை போற்றும் கருங்கூந்தல் அழகி காதலாய்க் கவிபுனைவாள்.
மாலினிதேவி செல்வநாயகம் — கொக்குவில்

96 அமைதியுடன் இருந்து ஆர்வமாய்க் கற்றிடுவாள்
ஆண்டவனுறவை ஆழமாய்ச் சுவைத்திடுவாள்
யோகராணி ஏபிரகாம் — கொக்குவில்

97 மெல்லியலாள் இன்முகத்தில் நிலையான புன்சிரிப்பு
நல்ல குணமுடையாள் நன்ருகப் பழகிடுவாள்
ரூேஸ்மலர் டேவிட் — யாழ்ப்பாணம்

98 கடமை கண்ணியம் கட்டுப்பாடு உயர் குணம் எலாம் கொண்டு
தகுதிசால் தலைவியாய் விளங்கிட்டாள் கலாசாலையில்
ரேணுகாதேவி செந்திநாதன் — திரிகோணமலை

99 நாட்டியமோ விளையாட்டோ நாடகமோ எதிலும்
காட்டிடுவாள் தன் திறமை கருமை நிறக் கண்ணழகி
லில்லி புளோரு நடேசமூர்த்தி — சேமமடு

100 இசைபாடி மகிழ்வித்து இருக்குமிடம் கலகலப்பாக்கிடுவாள்
இடரின்றி எதனையும் துணிந்தே செய்திடுவாள்
சிவம் நாகமுத்து — கரவெட்டி

101 பகிடிக் கதைகளை பாங்காகக் கூறிடுவாள்
சுவர்ணு இல்லத் தலைவி விமலா முருகேசு — புங்குடுதீவு

102 சிக்கனமாய்ப் பேசிடினும் சிந்திக்க வைத்திடுவாள்
தக்க பொறுப்புக்களை தயவுடனே செய்திடுவாள்
ரூேஸ்மலர் கனகரத்தினம் — வரணி

103 கல்வியிலே கருத்துடையாள் கடமையில் கண்ணுடைய காரிகை
கதிரநாயகி கந்தசாமி — வட்டுக்கோட்டை

104 துரியோதனனுய் அரங்கில் துகிலுரியச் சொல்லிவிட்டு
கோமாளியாய் வந்து குதூகலிக்கச் செய்த நங்கை
சிவரஞ்சிதபதி கோபாலகிருஷ்னன் — துன்னலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105 நற்குணமும் நற்பண்பும் நயமான பேச்சுமுண்டு
நன்றாகப் படித்திடுவாள் நாயகியாள்
நல்லநாயகி இளையதம்பி — கரவெட்டி

106 பீ வகுப்பு மாணவியரில் கவலையற்றிருந்திடும்
கடுமை சினம் கொண்டிடா மணி,
மனோன்மணி யாதவராயர் — வவுனியா

107 அமைதியுடன் தான் இருந்து ஆர்வமாய்க் கற்றிடுவாள்
கணக்கில் வல்ல காரிகை
செல்லம்மா வடிவேலு — மன்னார்

108 சாதுரியமாய் நின்று சாமர்த்தியங் காட்டித் தர்க்கமும்
செய்திடத் தருணமதைப் பார்த்திருப்பாள்
சரஸ்வதி சின்னத்தம்பி — கரவெட்டி

109 பொறுமைக் கணிகலனாய்ப் பொருந்தியே வாழ்பவளாம்
புனித குணமுள்ள பூவை
பொன்னம்மா விசுவலிங்கம் — மீசாலை

110 சிற்றிடையாள் என்றாலும் சிறப்புடனே கலகலப்பாள்,
கற்றிடுவாள் தம் பணியைக் கல்விக் கழகமதில்
சரஸ்வதி சின்னத்தம்பி — கோட்டாவில்

111 இன்சொலால் ஆண்டிடுவாள் இன்முகங் காட்டிடுவாள்,
பரிமள கந்தம் கமழும் பீ வகுப்புத் தலைவி,
ஹார்த்மேரி ஆறுமுகம் — கொழும்பு

112 ஈராண்டுப் பயிற்சியினைச் சீராக முடித்துவிட்டு
புத்தாண்டில் புதுவாழ்வில் புகுந்திடுவாள் மங்கையிவள்
ஞானேஸ்வரி சின்னையா — அச்சுவேலி

113 கனவேலை இருந்தாலும் கடமையே கண்ணாயிருப்பாள்,
காட்சிக்கு இனியவள் அவள்
கமலாம்பிகை குணராசா — இணுவில்

114 சிறுகதை எழுதியும் பல்கவி புனைந்தும்
அன்பாய்ப் பேசி பண்பாய்ப் பழகிடும் காந்த விழியாள்
கௌரி மனோகரி நடராஜா — கொப்டன்.

115 ஒல்லியாய் உருவத்தில் இருந்தாலும்
வில்லியாய்ச் சிங்களம் கதைத்திடுவாள்,
பாக்கியவதி கந்தசாமி — கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116 மெல்லிசையில் வல்லுவளாம் மெட்டி ஓசை கேட்டிடவே
மின்னல் போல் சிரித்திடவே மிகத் திறமாய் வரைந்திடுவாள்,
புகனேஸ்வரி ஜெகதீசன் — கண்டி

117 ஆங்கிலம் தனியே ஆழ்ந்த அறிவுள்ளாள்
ஆர்வமுடன் சித்திரம் தீட்டும் வித்தகி
கமலாம்பிகை ஸ்ரீ சுப்பிரமணியம் — இளவாலை

118 அறிவுரைகள் பலவற்றை ஆர்வமாய எடுத்துரைப்பாள்
சீர்மிக உழைப்பாள் சீரோடு வாழ்ந்திடுவாள்.
கௌரி இராமச்சந்திரன் — சரவணை

119 மௌனமாய் இருந்திடுவாள் மற்றோரை மயக்கிடுவாள்
மதிப்புடனே எந்நாளும் நடந்திடுவாள் மங்கை நல்லாள்
எலிசபெத் மணிமேகலை திருச்செல்வம் — யாழ்ப்பாணம்

120 தானுண்டு தன்வேலையுண்டென்றே
தனிமையாய் இருந்திடுவாள்
லலிதாம்பிகை யதுகுலசிங்கம் — மண்டைதீவு

வாழ்க்கையில் காணப்படும் துன்பங்களைக் கண்டு பயந்து அவற்றைப் பொல்லாதவை யென்று மதிப்பிடுபவர்கள் தைரியசாலிகளாகவே இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை ஆளுமன்றம்

| | |
|---|---|
| ஆள்பதி : | திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் |
| முதலமைச்சர் : | செல்வி ரேணுகாதேவி செந்திநாதன் |
| உதவி அமைச்சர் : | செல்வி மடுமலர் மார்சலின்பிள்ளை |
| பொதுநிர்வாக அமைச்சர் : | திருமதி செல்வலஷ்மி பொன்னுத்துரை |
| போக்குவரத்து அமைச்சர் : | செல்வி தெரேசா மரியாம்பிள்ளை |
| சுகாதார அமைச்சர் : | திருமதி பர்வதவர்த்தினி மகேஸ்வரன் |
| விவசாய அமைச்சர் : | திருமதி அன்னக்கன்று ஞானப்பிரகாசம். |
| மின்சார அமைச்சர் : | செல்வி பாலசரோஜினி அரியகுட்டி |

வகுப்புத் தலைமை மாணவிகள்

| | |
|---|---|
| 2ம் வருடம் A : | செல்வி நவமணி சதாசிவம் |
| 2ம் வருடம் B : | திருமதி லூர்த்துமேரி ஆறுமுகம் |
| 2ம் வருடம் C : | திருமதி லீலாவதி சிவரத்தினம் |
| 1ம் வருடம் A : | செல்வி மணி பெரியதம்பி |
| 1ம் வருடம் B : | திருமதி பத்மா பெனடிற் |
| மனையியல்பிரிவு: | திருமதி நிமலாதேவி பொன்னம்பலம் |

இயற்கை எழில் நிறைந்த இத்தீவின் திசைகள் அனைத்தும் அறிவொளி பரப்பப் பல்கலையிலும் வல்ல ஆசிரிய திலகங்களை உருவாக்குவது எம் கலாசாலை. இக் கலாசாலையில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கடமையுணர்வோடும் கட்டுப்பாட்டுடனும் பணிபுரிவது எமது ஆளுமன்றம்.

இம்மன்றத்தின் ஆள்பதியாகவும் இயக்குநராகவும் எம் அன்னையாம் அதிபர் அவர்கள் விளங்கினார்கள். அவர்தம் ஆற்றலின் மேன்மையாலும் கனிந்த உணர்வினாலும் அரிய அறிவுரைகளையும் சிறந்த ஆசிகளையும் வழங்குவதாலும், மாணவர் உயர்வே தம் உயர்வாகக் கொண்ட பேராசிரியர்களின் உயரிய சேவையாலும், கடமையுணர்வுள்ள ஆசிரிய சகோதரிகளின் உழைப்பாலும் கலாசாலைக் கடமைகள் பாங்குற அமைந்தன.

இம்மன்றத்தின் உயர்வுக்காக உழைத்த அனைவர்க்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

செ. ரேணுகாதேவி
மாணவர் தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் மன்றம்

காப்பாளர் : திருவாளர் சி. குமாரசாமி
தலைவி : செல்வி. கௌசல்யாதேவி குமாரசாமிக்குருக்கள்
உபதலைவி : திருமதி. விஜயலக்சுமி கந்தசாமி.
செயலாளர்: செல்வி. தேவமனோகரி குமாரவேலு
பொருளாளர்: செல்வி. கௌரிமனோகரி நடராசா

தேனினும் இனிய நம் தமிழ் தொன்மையும் புதுமையும் வாய்ந்தது. நம்முன்னோர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். நானிலம் யாவும் நாவாரப் போற்றிடும் தமிழன்னையை நாமும் முத்தமிழ் மன்றம் அமைத்துப் போற்றும் செய்தி புதியதொன்றல்ல கோவையில் வளரும் கோதையரால் இம்மன்றம் இருபத்தொன்பது ஆண்டுகளாக மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழ் விழா – நம் தமிழ்த்தாய்க்கு ஆண்டாண்டு நாம் செய்யும் அரிய விழாவாகும். இயல் இசை நாடகமென்னும் பல்வகைக் கோலம் பூண்டு எம் தமிழன்னை பவனிவரும் திருநாளாகும். உரையரங்கு, கருத்தரங்கு, கவியரங்கு கலையரங்கு என நான்கு அரங்குகள் இவ்வாண்டு முத்தமிழ் விழாவிலும் இடம் பெற்றன, மேலும் நாடகம் பேச்சு, கதை சொல்லல் போட்டி ஆதிய போட்டிகளையும் சிறப்புற இவ்வாண்டு நடாத்தினோம். அறிஞர்களின் பேருரைகளைக் கேட்டு அறிவைப் பெருக்கவும் அரிய சந்தர்ப்பத்தை எம்மன்றம் அளித்துள்ளது.

எங்கள் தமிழ் மன்றம் செழிப்புடன் வளர ஆதரவு நல்கி, வழிகாட்டி உறுதுணையாக விளங்கும் கலாசாலை அதிபர் அவர்கட்கும், அயராது உழைக்கும் மன்றக் காப்பாளர்க்கும், உதவிகள் பல புரிந்த பேராசிரியர்களுக்கும், பங்கு கொண்டுழைத்த மாணவசகோதரிகளுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.


எங்கள் தமிழ் மன்றம் என்றும் இளமையுடன் வாழ வாழ்த்துகிறோம்.

தேவமனோகரி குமாரவேலு
செயலாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலையரங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகவியல் மன்றம்

**மன்றப் போஷகர் :** திருமதி. சு. செல்லத்துரை

,, **தலைவி :** செல்வி. மாலினி செல்வநாயகம்

,, **காரியதரிசி :** திருமதி. வடிவாம்பிகை கணேஸ்

,, **தனாதிகாரி :** செல்வி. புவனேஸ்வரி காசிப்பிள்ளை

மனிதன் தான் வாழும் சமூகத்தில் பிணக்குகள் அற்ற இணக்க மான வாழ்வில் ஈடுபட வழி காட்டும் சமூகக் கல்வியின் முக்கியத்து வத்தை மேம்படுத்துவதாக இயங்கி வருகிறது எம்மன்றம்.

மாணவிகளின் அறிவு வளர்ச்சிக்கு துணைபுரியும் விவாதங்களையும், கருத்தரங்குகளையும் நடாத்தி வருகிறது. அண்மையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இயக்கங்களை விளக்குமுகமாக ஒரு பொருட்காட்சியை முதலாம் வருட மாணவிகள் செய்து காட்டினர்.

சர்வதேச மகளிர் ஆண்டாகிய இவ்வாண்டில் ஓர் விழா எடுத்து சர்வதேச அரங்கில் பெண்கள் பங்கு என்ற விடயத்தில் பல பெண்கள் தோன்றி தம்மை அறிமுகம் செய்ததுடன் பல்வேறு நாட்டு உடையுடன் வந்து தம் நாட்டு இசையை எமக்கு அளித்தனர் பல பெண்கள். ஈற் றில் ஒரு வினாடி வினாப் போட்டியும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவ ருக்கு பரிசும் அளிக்கப்பட்டது.

பல்வேறு வழிகளிலும் மாணவரின் நலனுக்காக இம் மன்றம் இயங்கி வருகிறது என்று பெருமையுடன் கூறுகிறேன்.

இம்மன்றம் நல்ல முறையில் இயங்க வழிகாட்டியாக இருந்த மன்றப் போஷகருக்கும், எப்போதும் எமக்கு உதவி நல்க காத்திருக்கும் எம்மன் றத்தில் உள்ள பேராசிரியர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய ஏனைய அங் கத்தவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பாடுடையேன்.

வ. கணேஸ்
காரியதரிசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *English Literary Association*

*Patron:* Mrs. S. Selvadurai
*President:* Sr. Jenet Perera
*Secretary:* Miss. V. Priyadharshani
*Treasurer:* Miss. K. Thevamany

It is my proud privilege to present the annual report of our Literary Association for the year 1974 – 1975.

This Association was inagurated in 1973 with Miss. G. R. Chellappah as its patron. From the time of its inception she had seen it, through its growing stage and had been the main spring of its activities.

It is but fitting that here we put on record our sincere appreciation and gratitude to our former patron Miss G. R. Chellappah for the devoted service she had rendered it.

The 31st of October 1975 was a unique day in the annals of our association: On this day our association had the privilege of conducting An English day programme. In the morning an Elocution contest was held among the teacher trainees and the Prize winners were

| | | |
|---|---|---|
| Group A | I | Miss Montrisa Gnanapragasam |
| | II | Devamanohary Cumaravel and |
| | III | Mrs. Antanett Manikavasagar |
| Group B | I | Mrs. Puvaneswary Karunaharan |
| | II | Miss Gowri Ponniah and |
| | III | Miss Skanthakumari Sivasubramaniam |
| Group C | I | Mrs. S. S. Puvaneswary |
| | II | Mrs. Sakunthala Jeyadeva and |
| | III | Miss Pakiyavathy Kandasamy |

An Essay competition was also held and the prize winner was Miss Devamanohary Cumaravelu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Performance of the participants was of a high standard. The association takes delight in congratulating all the prize winners.

On this day An Exhibition of the teaching aids was organised by the association and it was declared open by Mrs. R. Ananda Kumarasamy our Principal. At the exhibition the puppet theatre was the cynosure.

In the afternoon the teacher trainees provided a literary feast of songs, recitations and speeches. A tablean of the famous 'International Women' and a Play, The Bishop's Candle Stick, were staged by the teacher trainees.

With great pleasure I express my sincere thanks to the Principal and staff for all the encouragement and guidence they have bestowed on the association. A special word of thanks goes to Mrs. S. Selvadurai our present patron for the help she has rendered to make the activities of the association a grand success.

Let me also extend my thanks and gratitude to Sr. Janet Perera the President of the association and to all members of this association for the timely help rendered to the association.

I wish this Literary Association every success in the future.

***Miss. V. Priyadharshani***
*Secretray of the English*
*Literary Association*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்

காப்பாளர் : பேராசிரியர் திரு. சி குமாரசாமி அவர்கள்
தலைவர் : திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம்
காரியதரிசி : செல்வி. ஜெயகௌரி பொன்னையா
தனாதிகாரி : செல்வி. மகேஸ்வரி சுந்தரராஜா

'' நெஞ்சமே நீ நினையாய்.
வாயே வாழ்த்து கண்டாய்.
கைகாள் கூப்பித் தொழீர்.''

திருநாவுக்கரசரின் வாக்கிற்கிணங்க எம் மன்றம் கலாசாலையில் நெஞ்சுருக ஒலிக்கும் கீதங்களுடன் சமய வழிபாடாற்றி வருகின்றது. மால், அயன் அடிமுடி காண முடியாத சோதிப் பிழம்பாக சிவபெருமான் தோன்றிய மகா சிவராத்திரி தினத்தில் நான்கு யாமங்களிலும் பூசை புரிந்து வழிபாடாற்றினோம். அவ்வமயம் சொற்பொழிவுகள் பக்திப் பாடல்கள் ஆகியன இடம் பெற்றன. திருமதி. திருச்சிற்றம்பலம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தினம், திருஞானசப்பந்த சுவாமிகள் குருபூசைதினம் ஆகியவற்றைச் சிறப்பாகக் கொண்டாடினோம் நவராத்திரி ஒன்பது தினங்களிலும் கும்பபூசைகள், பஜனைகள், சமயப்பிரசங்கங்கள், பக்திப்பாடல்கள், இசைக்கச்சேரிகள், நடன நிகழ்ச்சிகள், கூட்டுப் பிராத்தனைகள் நிகழ எம்மன்றம் ஒழுங்கு செய்தது. திருமதி S. செல்லதுரை அவர்கள் திரு சி. குமாரசாமி அவர்கள் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

யோக மண்டபத்தின் சுவர் அலுமாரிகள் இரண்டிற்கும் இவ்வாண்டு கதவுகள் அமைக்கப்பட்டது மூலஸ்தானத்திற்கு மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டது வாசிகசாலை அமைக்கப்பட்டது.

எம்மை சமயத்தொண்டில் ஈடுபடவும் சமய விழாக்களை ஆர்வமுடன் நடாத்தவும் எம்மை ஊக்கி, வழிநடத்தும் பேராசிரியர் திரு சி குமாரசாமி அவர்களை எம்மன்றம் நன்றியுடன் நினைவு கூர்கிறது. சமய விழாக்களை யாம் கொண்டாட முற்படும் போதெல்லாம் அனுமதி தந்து ஆசிகூறி எம்மை ஊக்கி அருந்துணை புரிந்த அதிபர் அவர்கட்கும் வேண்டும் போது வேண்டிய ஆலோசனைகள் கூறி வழிகாட்டிய பேராசிரியர்கட்கும், பல்வேறு பணிகளிலும் ஒத்துழைப்பு அளித்த ஆசிரிய மாணவிகளுக்கும் எம் இந்துமன்றம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வி. ஜெ. பொன்னையா
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மன்ற அறிக்கை

காப்பாளர் : திருமதி. ஜீ. ஹூல்

சங். சகோதரி டானியலா

தலைவர் : திருமதி. கத்தரீன் மரியாம்பிள்ளை

செயலாளர் : செல்வி தேவ. அன்னராணி சந்திரசேகரம்

பொருலாளர் : செல்வி. G. H. குளோட்டில்பா டயஸ்

அறிவுப் பிரவாகமும், ஜனப்பிரவாகமும், பெருக்கெடுத்தோடும் நூற்றாண்டு இது. விஞ்ஞான உலகில் பல துறைகளிலும் முன்னேறி உலகத்தை மட்டுமன்றி வானமண்டலத்தையும் துளாவி, வெற்றிகரமாக ஆதாயப்படுத்திக் கொண்ட மனிதனுக்கு ஒரு சவாலாக சிந்தனையைத் தொடுவதாக "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? என்ற வேதவாக்கியத்திற் கிணங்க மதவழிபாட்டினையும், மதபோதனைகளையும் நடாத்திவரும் எம் மன்றத்தின் இவ்வாண்டிற்குரிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகிறேன்.

எம்மன்றம் இவ்வாண்டில் 40 அங்கத்தவர்களைக் கொண்டு பொலிவுடன் திகழ்கின்றது. மறைக்கல்வி கற்பதற்கும் கிறிஸ்தவதினம், ஜனனவிழா போன்ற விழாக்களை ஏனைய சகோதரிகளுடன் சேர்ந்து சிறப்புடன் நடாத்தவும் வசதிகள்[ அளிக்கப்பட்டுள்ளன. இங்கு இவ்வாண்டு கிறிஸ்தவ தினம் திவ்விய பலிபூசையுடனும், விவிலிய வழிபாட்டுடனும் கிறிஸ்து பிறந்ததினம் குதூகலத்துடனும் நிறைவெய்தியது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வரிய சலுகைகளை எமக்கு உதவி ஆலோசனைகளையும் நல்கி எம்மை ஊக்குவிக்கும் எம் அதிபரின் உள்ளப்பாங்கினை நாம் மெச்சுவதுடன் உளங்கனிந்த நன்றியையுஞ் சமர்ப்பிக்கின்றோம். இம்மன்றம் மேன்மேலும் வளர்ந்துவர உதவி அளிக்கும் எமது சமயவிரிவுரையாளர்கள் G. R. செல்லப்பா அவர்கட்கும், சங். சகோதரி டானியலா அவர்கட்கும், ஏனைய பேராசிரியர்கட்கும், பயிற்சி பெறும் எம் சகோதரிகளுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தே. சந்திரசேகரம்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை மன்றம்

| | | |
|---|---|---|
| மன்றக்காப்பாளர் : | திருமதி. | பொ. பத்மநாதன் |
| தலைவர் : | ,, | சந்திரமலர் மரியநாயகம் |
| உப தலைவர் : | ,, | மகாலட்சுமி தளையசிங்கம் |
| செயலாளர் : | ,, | அருந்ததி யோகநாதன் |
| பொருளாளர் : | செல்வி. | சரஸ்வதி செல்வநாயகம் |

பல்வேறு கிளைகளையும் தன்னகத்தே கொண்ட நம் தமிழர் பண்பாட்டிலே பண்டைக்காலந் தொட்டுக் கலைகள் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. அப்பண்பை அடியொற்றித் தற்போதைய கல்வியுலகும் நுண்கலைகளை வளர்ப்பதில் வீறுநடை போடுகிறது. இத்திட்டத்தைப் பின்பற்றி எம் கலாசாலையும் நுண்கலைகளை மற்றும் அறிவியற் கலைகளோடு சரிசமமாக வளர்க்கின்றது. என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றோம்.

எமது மன்றம் ஆசிரிய மாணவிகட்கு இசை நடனம் கைத்திறன் ஆகிய கலைகளில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும் விருத்தியாக்கவும் போதிய தருணத்தைக் கொடுப்பதுடன் மற்றையோரும் பயனுறும் வண்ணம் தொண்டாற்றி வருகின்றது.

இவ்வாண்டு நடனம் இசை கைத்திறன் ஆகியவற்றில் இல்லங்கட்கிடையே போட்டிகள் எம்மன்றத்தினால் நடத்தப்பட்டது.

மேலும் இந்நுண்கலைமன்றம் சீரும் சிறப்பும் பெற்றுச் செவ்வனே இயங்க உதவிய அதிபர் அவர்கட்கும் பல உதவிகளைச் செய்து எம்மை ஊக்குவித்த மன்றக்காப்பாளரான சங்கீத விரிவுரையாளர் அவர்கட்கும் இம் மன்றநிகழ்ச்சிகள் நடைபெற உதவிய நடன விரிவுரையாளர் அவர்கட்கும் சித்திர கைத்திறன் விரிவுரையாளர் அவர்கட்கும் எமக்கு வேண்டிய வேளையில் ஆலோசனைகள் கூறிய பேராசிரியர் அனைவருக்கும் கட்புல செவிப்புல சாதன உதவியாளர் அவர்கட்கும் உடலாலும் உள்ளத்தாலும் ஒத்துழைப்பு நல்கிய ஆசிரிய மாணவிகள் அனைவருக்கும் இம்மன்றச் சார்பில் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருந்ததி யோகநாதன்
*மன்றச் செயலாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி மன்றம்

காப்பாளர்: திருமதி டே. தருமராஜா
விளையாட்டுத் தலைவி: ,, ஜூ. த. கணேசதாசன்
விளையாட்டு உபதலைவி: ,, க. திசநாயகம்
செயலாளர்: செல்வி சுந்தராம்பிகை சபாரத்தினம்
பொருளாளர்: ,, எச். பி. அந்தோனிப்பிள்ளை

''கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' — குறள்

கற்கவேண்டியவைகளைச் சந்தேகமறக் கற்றபின் அதன்படி ஒழுகுவது தான் சாலச் சிறந்தது. கற்பது ஒன்று கைக்கொள்ளுவது மற்றொன்று என்றால் அது கல்வியுமல்ல, வாழ்க்கையுமல்ல. பாடசாலைகளில் நாம் பாங்குடன் பயின்றதைப் பயிற்றுதல் கடமை. இந்த வகையில் எமது கலாசாலை ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது

எமது அதிபரின் அயரா ஊக்கமும் அளவு கடந்த சேவையும் ஆல விருட்சத்துக்குச் சமனாகும். ஆயிரமாயிரம் ஆசிரிய மாணவர்களை வருடா வருடம் கண்ணியம் என்ற கண்ணீரால் கழுவிக் கடமை என்ற உணவூட்டி திக்கெல்லாம் மணம் பரப்பி, வைப்பதென்றால் அவரின் அருஞ் செயல் மிகையாகாது. ஆசிரிய மாணவர்களையும் தனது சக ஆசிரியர்களையும் ஒரு நோக்குடன் ஒப்பிட்டுச் செயலாற்றி வரும் பெருந் தலைவி. கோப்பாய் ஆசிரியர்கள் என்றால் பெரும் பேறுடையவர்கள் என்பது சமுதாயத்தின் எண்ணம். அதற்குக் காரணர் அதிபர். அவர்களால் உருவாக்கப்பட்ட கலைமலரும் அப்படியே.

ஆண்டாண்டாகக் கோப்பாய்க் கலாசாலை என்ற பூங்காவில் அதிபர் என்ற செடியில் மலர்ந்து கலைமணம் பரப்பி வரும் கலைமலர், ஆண்டுகள் பல கடந்தாலும் இளமை குன்றாத கன்னியாக மிளிர்கின்றாள். ஆசிரியர்களின் இதயத்தில் உருவாகும் எண்ணங்களைக் கவர்ந்து தன்னகத்தே வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கும் வாரி வாரி வழங்குகின்றாள். அவரின் சேவை அளப்பரியது. இதை வைத்துக் காப்பாற்றுகின்ற அதிபர் அவர்களுக்கும் அவளை வைத்து அழகு பார்க்கின்ற கலாசாலைப் பேராசிரியர்களும் மாணவர்களும் என்றென்றும் புகழுடையவர்களே. அவள் இன்றுபோல் என்றென்றும் புதுமணம் பரப்பி மங்காப் புகழுடன் புத்தொளி வீச வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

ஜூலியற் தவமணி கணேசதாசன்
விளையாட்டு மன்றத் தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையியல் மன்றம்

காப்பாளர் : பேராசிரியர் திருமதி ஒ. செ. தர்மானந்தன்
தலைவர் : செல்வி க. சந்தையா
செயலாளர் : செல்வி இ. சோமசுந்தரம்
பொருளாளர் : செல்வி வை. சாமுவேல்

மனிதன் ஓய்வுபெறும் இடமே மனை. அந்த மனை ஒழுங்காய் அமைதியாய் அழகாய்க் காட்சி அளிக்கச் செய்ய மனையாள் சிறந்த மனையியல் அறிவு படைத்தவளாய் இருக்க வேண்டும். பெண்களுக்கு நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ப நடப்பதற்கு மனையியல் அறிவு பெருந்துணைபுரிகின்றது. இத்தகை மேன்மை தங்கிய மனையியல் அறிவு ஒவ்வொரு பெண்ணுக்கும் இன்றியமையாதது.

எமது கலாசாலை இல்லங்களிடையே கோலப் போட்டிகளை நடாத்தி ஆசிரிய சமுதாயத்தின் அழகுணர்ச்சியைத் தூண்டுகின்றது. எம் மன்றம் சென்ற். ஜோண்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிப் பரீட்சைக்கும் வீட்டு வைத்திய பரீட்சைக்கும் பயிற்சி அளித்துத் தராதரப்பத்திரம் வழங்கி முன்னேற்றப்பாதையை அமைத்துக் கொடுக்கிறது.

அறுசுவையை அறியத்தருவது போல் அழகுணர்ச்சி விருந்தோம்பல் ஒழுக்கம் சுத்தம் பொருளாதாரம் சிக்கனம் என்பனவற்றில் சிறந்து மனையாட்சி மிக்க மங்கையராய்த் திகழ மனையியல் மன்றம் பேருதவி புரிந்து வருகின்றது.

எமது கலாசாலையில் நடைபெற்ற விழாக்களுக்கு மனையியல் மன்றம் உணவு பானம் போன்றவற்றை வேளை அறிந்து அவ்வப்போது கொடுத்துக் கல்லூரி விருந்தினர்களையும் அபிமானிகளையும் கௌரவித்து வந்துள்ளது என்பதை மறைக்கவோ மறக்கவோ முடியாது இவ்வரிய சேவையை மனையியல் மன்றம் செய்து வாழ்க வளர்க.

இம்மன்றம் சிறப்புடன் செயலாற்றி மதிப்புடன் திகழ ஆங்காங்கே ஊக்கம் நல்கிய எமது மதிப்புக்குரிய அதிபருக்கும் பேராசிரியர்களுக்கும் விசேடமாக மன்றக் காப்பாளருக்கும் முதற்கண் எம்மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மன்ற நிகழ்ச்சிகள் சிறப்புறத் திகழ உதவிய ஆசிரிய சகோதரிகளுக்கு நன்றியை நவில்கின்றோம்.

வணக்கம்

செயலாளர்

செல்வி. ரஞ்சிதசற்குணதேவிஅம்மா சோமசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மன்றம்

காப்பாளர் : திருமதி. பரமேஸ்வரி வைத்திலிங்கம்.

தலைவர் : திருமதி. அன்னக்கன்று ஞானப்பிரகாசம்.

செயலாளர் : திருமதி. ஞானம் இராசையா.

பொருளாளர் : செல்வி. கிறேஸ் செபமாலை.

நாட்டின் நலன் கருதி நல்வழி வகுத்து வருகிறது நம் அரசாங்கம். மேலும் இவ்வரசாங்கம் பாடசாலைகளிலும் பயிற்சிக் கல்லூரிகளிலும் விவசாயத்தை ஒரு முக்கிய பாடமாக ஆக்கியமை வருங்காலச் சந்ததியினரின் வளமான வாழ்க்கைக்கு அடிகோலியுள்ளது. இத்திட்டத்தின் விளைவால் இன்னும் சில ஆண்டுகளில் நம் நாடு விவசாயத்தில் தன்னிறைவு பெற்று வருமென்பது மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாத உண்மையாகும்.

எங்கலாசாலையும் இத்திட்டத்தில் முன்னேற்றப்பாதையிற் சென்று கொண்டிருக்கிறது. எமது தோட்டத்தில் மரவள்ளி, வற்றாளை, வெண்டி, கத்தரி, வெண்காயம், நிலக்கடலை, உழுந்து, வாழை, என்பன பயிரிட்டோம் இவற்றிற் பல பலனைத் தந்துவிட்டன. சிலவற்றின் பலனை மேலும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் எமது ஊக்கத்திற்கும் விவசாய ஆக்கத்திற்கும் உறுதுணையாக நின்று உதவிபுரிந்த மதிப்பிற்குரிய அதிபர் அவர்கட்கும், அவ்வப்போது அறிவுரை பகர்ந்த மன்றக் காப்பாளர் அவர்கட்கும் நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். கூட்டுமுயற்சியில் தளரா நம்பிக்கை பூண்டு ஊக்கமுடன் உழைத்த எமது அனபுச் சகோதரிகட்கும், ஏனைய பேராசிரியர்களுக்கும் விவசாய மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்.

வள்ளுவர் வாக்கு

வணக்கம்

செயலாளர்
திருமதி. ஞானம் இராசையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராதா இல்லம்

| | | |
|---|---|---|
| இல்லத் தாய்மாாகள் | திருமதி | R. H. R. ஹால் |
| | ,, | ம. திருச்சிற்றம்பலம் |
| | ,, | பா. சண்முகராஜா |
| இல்லத் தலைவி | செல்வி | இ. தம்பையா |
| உப தலைவி | திருமதி | வி. கந்தசாமி |

கண்ணனின் கருத்திற்கு இனியவளின் திருநாமத்தைத் தனது நாமாகச் சூடி, உலகிற்கு ஒளியையும் சக்தியையும் வழங்கி வருகின்ற ஆதவனைச் சின்னமாகக் கொண்டு திகழ்கின்றது எம் இராதா இல்லம்.

ஐம்பத்தைந்து மடக்கொடிகளை கொண்டது எம் இல்லம். நாம் வேற்றுமையின் கண் ஒற்றுமை கண்டு ஒருமித்து வாழ்கின்றோம். கலாசாலையில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் மகிழ்வுடன் கலந்து கொண்டு செயலாற்றி வருகின்றோம்.

இசைப் போட்டியிலும் விளையாட்டுப் போட்டியிலும் இல்ல அலங்காரப் போட்டியிலும் அணிநடைப் போட்டியிலும் கைவேலைப் போட்டியிலும் முதல் இடத்தைப் பெற்று வெற்றி வாகை சூடியது. பிற நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று பெருமை கொண்டது

ஏனைய நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற வாய்ப்பின்றிப் போயினும் பெருமை மிகு அதிபர் பேராசிரியர்கள் மற்றும் பலரின் பாராட்டுதலையும் பெற்றுத் திருப்தி கொண்டது.

எம் இல்லம் ஈட்டிய வெற்றிகள் அனைத்திற்கும் முன்னேற்றத் திற்கும் பாராட்டுதல்களுக்கும் ஊக்கமும் அயராது உழைப்பும் தந்து வெற்றிப் பாதையில் வழிநடத்திய எமது இல்ல தாய்மார்களுக்கு எமது இதயம் கலந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்கு நிகழ்ந்தேற எமக்குப் பேருதவி புரிந்த மாண்பு மிக்க அதிபர் அவர்கட்கும், பேராசிரியர்களுக்கும் எம் இல்ல அரிவையர் குழாத்திற்கும் எம் மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராதா இல்லம் இன்றுபோல் என்றும் புகழுடன் திகழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எம் இராதா இல்லம் வாழ்க வளர்க.

செல்வி. இ. தம்பையா
இல்லத்தலைவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளையாட்டுப்போட்டியில் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்ட இராதா இல்ல அரிவையர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● மெய்வல்லுநர் போட்டியில் முதலிடம் பெற்ற வீராங்கனைக்குப் பிரதம விருந்தினரின் பாரியாரான திருவாட்டி சபாலிங்கம் வெள்ளிக்கிண்ணம் பரிசிலாக வழங்குகின்றார்.



● தமிழின் பெருமையைத் தமது அபிநயமூலம் புலப்படுத்துகின்றனர் ஆசிரிய மாணவியர்.



● தமிழ் விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வடபிரதேசக் கல்வியதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். அதிபர் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்ணு இல்லம்

| | |
|---|---|
| இல்லப் பேராசிரியர்கள் : | திருவாளர் இ. துரைராஜா<br>செல்வி. த. முத்தையா |
| இல்லத் தலைவி : | செல்வி. விமலா முருகேசு |
| இல்ல உப தலைவி : | திருமதி. சூசையம்மா அன்ரனி |

சுடரொளி வீசும் சுவர்ணத்தின் பெயரையே தனது பெயராகவும் மங்களமான மஞ்சள் நிறத்தைத் தனது நிறமாகவும் கற்பகதருவான பனை மரத்தைத் தனது சின்னமாகவும் கொண்டது எமது இல்லம்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்னும் ஆன்றோர் கூற்றுக்கிணங்க இல்ல முன்னேற்றத்திற்காக அயராது உழைக்கும் மங்கையர் குழாத்தின் ஒத்துழைப்பே எமது இல்லத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

இவ் வருடம் எமது கலாசாலை நடாத்திய பல்வேறு போட்டிகளில் எமது இல்லம் காட்டிய வெற்றிகளை இங்குக் குறிப்பிடாமல் விட முடியாது. வலைப்பந்தாட்டப் போட்டியில் எமது இல்லம் மூன்றும் முறையாகவும் கலாசாலை வெற்றிக் கேடயத்தைப் பெற்றது, குறிப்பிடற்குரியதாகும். இன்னும் நாடகப் போட்டியிலும் பூக்கோலப் போட்டியிலும் முதலாம் இடத்தையும் விளையாட்டுப் போட்டி நாட்டிய நாடகக் போட்டி ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றுப் பெருமை பூண்டது.

இப் பெரும் வெற்றிகள் அனைத்திற்கும் காரணமாய் விளங்கிய எமது மன்றக் காப்பாளர்களும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நாம் பங்கு பற்றவும், திறம்பட நடாத்தவும் எமக்குப் பேருதவி நல்கிய பெருமை மிக்க எமது அதிபர் அவர்கட்கும் வேண்டிய உதவிகள் ஆற்றிய பேராசிரியர்கட்கும் எமது இல்லம் தனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்க சுவர்ணு
வளர்க சுவர்ணு.

விமலா. முருகேசு,
இல்லத்தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணு இல்லம்

இல்லத் தாய் : திருமதி. சு. செல்லத்துரை
இல்லத் தந்தை : திருவாளர். சோ. சந்திரசேகரம்.
இல்லத் தலைவி : செல்வி. ஸ்கந்தகுமாரி சிவசுப்பிரமணியம்.
இல்ல உப தலைவி : செல்வி. நிர்மலாதேவி செல்வத்துரை.

அகிலமெங்கும் இருள்போக்கி ஒளிபரப்பும் அருணனின் நாமம் பூண்டு அணி சிறந்து விளங்கும் எமது இல்லம் அருணு இல்லம். அருணன் தனது பொற்கதிர்களால் அள்ளி வீசும் சிவப்பு நிறத்தைத் தனது நிறமாகக் கொண்டதுவும், அனைத்திற்கும் உதவும் தென்னை மரத்தைச் சின்னமாக வும் கொண்டது.

எமது இல்லமாகிய அருணு இல்லம் ஐம்பத்துநாலு ஆரணங்குகளைக் கொண்டது. அனைத்துப் போட்டிகளிலும் அயராது பங்குபற்றி அரிய பல பரிசுகளை அள்ளிக் கொண்டது. எமது இல்லம். உடல் நலப் பயிற்சி, பேச்சுப்போட்டி, நாட்டிய நாடகம். கதை சொல்லல் போட்டி யோடு கைவேலைப் போட்டியிலும் தனது திறமையால் முதலாமிடத் தைத் தட்டிக் கொண்டது. ஏனைய போட்டிகளிலும் அருணு என்றும் சலித்ததல்ல. நாடகம், வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றி வீராங்கனைப் பட்டத்தை பெற்றுக்கொண்டதுவும் எமதில்லமே.

இப்பெரு வெற்றிக்கெல்லாம் முழுமனதுடன் நின்று அளப் பெரும் தொண்டாற்றியவர்கள் அருணுவின் அன்னை திருமதி செல்வத்துரையும் ஆலோசனைகளை அள்ளி வீசும் சலியாத மனம் கொண்ட திருவாளர் சோ. சந்திரசேகரம் அவர்களுமாவர்.

எல்லா நிகழ்ச்சிகளும் இனிதே நடந்தேற உதவி புரிந்த அன்னையாம் அதிபர் அவர்கட்கும், பேராசிரியர்கட்கும், அயராது அல்லும் பகலும் உழைத்த ஆசிரிய சகோதரிகட்கும் என்றும் எமது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

அருணு இல்லம் ஆண்டாண்டு தோறும் வளர்ந்தோங்க ஆண்டவன் அருள் புரிய வேண்டுகின்றோம்.

வாழ்க அருணு! வளர்க அதன் சேவை!

இல்லத்தலைவி
செல்வி. ஸ்கந்தகுமாரி சிவசுப்பிரமணியம்.

# கலாசாலை

# இருபத்தொன்பதாம் நல்லாண்டில்.....

| | |
|---|---|
| 6-1-75 | கலாசாலை ஆரம்பம். |
| 8-1-75 | புதிதாக வந்த முதலாம் வருட மாணவிகளை அன்புடன் வரவேற்றோம். |
| 10-3-75 | இல்லங்களுக்கிடையே உடற்பயிற்சிப் போட்டி மிகவும் உற்சாகத்தோடு நடைபெற்றது. |
| 21-3-75 | கைவேலைப் போட்டி இல்லங்களுக்கிடையே நடைபெற்றது. |
| 1-4-75 | மூவில்லத்து வனிதையரும் ''பாஞ்சாலி சபதம்'' ''வாள் மேல் ஆணை'' ''சாணக்கியன் சபதம்'' நாடகங்களை மேடையேற்றினர். |
| 4-4-75 | முதலாம் தவணை முடிவுற்றது |
| 28-4-75 | இரண்டாம் பருவம் ஆரம்பமாகியது. புதிய பேராசிரியை திருமதி பா. சண்முகராஜா அவர்கள் கடமையேற்றார்கள். |
| 13-5-75 | இசைப் போட்டி இல்லங்களுக்கிடையே மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. |
| 20-5.75 | கிறீஸ்தவ தின விழா நடைபெற்றது. |
| 31-5-75 | இல்ல விளையாட்டுப் போட்டியில் தம் ஆற்றலைக் காட்டி நின்றனர் ஆரணங்குகள். |
| 4-6-75 | டிப்ளோமா உயர் கல்விபெறச் சென்ற பேராசிரியை திருமதி ம. திருச்சிற்றம்பலம் அவர்களுக்குப் பிரிவுபசாரம் அளிக்கப் பட்டது. |
| 13-6-75 | கோலப் போட்டி இல்லங்களுக்கிடையே நடைபெற்றது. |
| 14-6.75 | முத்தமிழ் விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. |
| 25-7.75 | சம சம்பளம் கோரி அடையாள வேலை நிறுத்தம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. |
| 6-8-75 | நாட்டிய நாடகப் போட்டி மூவில்லத்து வனிதையரும் ''மதுரையாண்ட மங்கை'', ''பரதன் பாதுகை'', ''கற்பா காலனு'' என்னும் நாட்டிய நாடகங்களை மேடையேற்றி மகிழ்வித்தனர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-8-75 கழுத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் எம் கலாசாலைக்கு வருகை தந்தனர்.

11-8-75 சுந்தர மூர்த்தி சுவாமிகள் குருபூஜை நடைபெற்றது.

22-8-75 இரண்டாம் பருவம் முடிவுற்றது.

8-9-75 மூன்ருவது பருவம் ஆரம்பமானது.

15-9-75 – 19-9-75 வரை முதலாம் வருட மாணவர் செயல் அமர்வில் ஈடுபட்டுள்ளனர்.

19-9.75 முதலாம் வருடத்தினர் நூல் வெளியீட்டு விழா நடாத்திச் சிறப்புப் பெற்றனர்.

26-9-75 சுற்றுலா: நயினுதீவு நாகபூஷணி அம்பாளைத் தரிசித்தோம்.

5.10.75 நவராத்திரி பூஜை மிகச் சிறப்பான முறையில் ஆரம்பமானது.

7.10.75 பொல்கொல்லை ஆசிரிய பயிற்சி மாணவர் வருகைதந்தனர்.

10-10.75 கட்டுக்குருந்தை பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் வருகை தந்தனர்.

14-10-75 விஜயதசமி வெகுசிறப்பாக நடைபெற்றது.

15-10-75 எமது பேராசிரியை திருமதி ஹூலினது கணவர் திரு ஹூல் அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டமை.

20-10-75 – 23-10-75 வரை இரண்டாம் வருட மாணவர்கள் செயலமர்வில் ஈடுபட்டனர்.

31-10.75 ஆங்கில தினவிழா கொண்டாடினேம்.

10-11-75 ஓய்வுபெற்ற பேராசிரியை செல்வி G. R. செல்லப்பா அவர்களுக்கும் பல்கலைக் கழக விரிவுரையாளராகப் பதவி பெற்ற திரு. சோ. சந்திரசேகரம் அவர்களுக்கும் பிரிவுபசார விழா மிகவும் சிறப்பாக நடத்தினேம்.

17-11-75 சர்வதேச மகளிர் ஆண்டைக் கொண்டாடுமுகமாகச் சமூகவியல் மன்றம் சர்வதேசப் புகழ் பெற்ற பெண்களை அறிமுகஞ் செய்து, வினுடி வினுப் போட்டியும் சிறப்பாக நடைபெற்றது.

19-11-75 பரிசளிப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

26-11.75 இவ்வருடத்திற்கான மதிய போசன விருந்து நடைபெற்றது. கலைமலருக்குரிய புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

2-12.75 புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

3-12.75 கிறிஸ்து ஜனன விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

9-12-75 ஈராண்டுப் பயிற்சி முடித்துப் பரீட்சையை எதிர்நோக்கிச் செல்கின்ருேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு இல்லப் போட்டிகளும் முடிபுகளும்

**நாடகம் :-**

முதலிடம் :- சுவர்ணா இல்லம்.
இரண்டாமிடம் :- அருணா இல்லம்.

**பேச்சு :-**

முதலிடம் :- அருணா
இரண்டாமிடம் :- இராதா.

**கதை சொல்லுதல் :-**

முதலிடம் :- அருணா
இரண்டாமிடம் :- சுவர்ணா

**பாஓதுதல் :-**

முதலிடம் :- இராதா.
இரண்டாமிடம் :- சுவர்ணா

**நாட்டிய நாடகம் :-**

முதலிடம் :- அருணா.
இரண்டாமிடம் :- சுவர்ணா.

**உடற் பயிற்சி :-**

முதலிடம் :- அருணா.
இரண்டாமிடம் :- இராதா.

**விளையாட்டுப் போட்டி :-**

முதலிடம் :- இராதா.
இரண்டாமிடம் :- சுவர்ணா.

**பூக்கோலம் :-**

முதலிடம் :- சுவர்ணா.
இரண்டாமிடம் :- அருணா.

**மாக்கோலம் :-**

முதலிடம் :- அருணா.
இரண்டாமிடம் :- இராதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க பல்லாண்டு

# இவ்வாண்டு மணையறம் பூண்டோர்

| | | |
|---|---|---|
| சிவானந்தன் | — | கமலராணி |
| மதுரநாயகம் | — | யோசபின் |
| பாலசிங்கம் | — | மல்லிகா |
| தங்கநாயகம் | — | யோகராணி |
| அரியரத்தினம் | — | இந்திரவதனி |
| இரத்தினம் | — | கமலாதேவி |
| கணேசன் | — | சீதா |
| சிவராஜா | — | தவபவானி |
| மகேஸ்வரன் | — | சுகுணுதேவி |
| பரமானந்தராஜா | — | திலகவதி |
| யோகநாதன் | — | அருந்ததி |
| செல்வரத்தினம் | — | தனேஸ்வரி |
| பீற்றர்தருமநாயகம் | | இஸ்டெலா |
| சிவராஜா | — | ஞானேஸ்வரி |
| சிதம்பரேஸ்வரன் | — | கௌசலாதேவி |

வாழ்த்து

வையகத்திற் பதினாறு பேறும் பெற்று வாழ்கவென அகம் மகிழ்ந்து வாழ்த்து வோமே.

அதிபர், விரிவுரையாளர் ஆசிரிய மாணவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka Book Depot & Printing Works

234 K. K. S. Road,

JAFFNA.

With Best Compliments of

## Indo Ceylon Leather Company Ltd.

80, Prince Street,
COLOMBO-11
Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சோதி ரெக்ஸ்ரைல்ஸ்’

நீங்கள்
விரும்பும்
எவ்விதமான
பிடவை வகைகளுக்கும்
இன்றே
விஜயம்
செய்யுங்கள்

**14, மக்கள் நவீன சந்தை,**
**மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## “மணியம்ஸ்”

வனிதையர் விரும்பும் வகையான பிடவைத் தினுசுகள், கூறைச்சேலை வகைகள் ஆடவர் விரும்பும் அழகிய சேட்டிங் சூட்டிங் வகைகள் குழந்தைகளுக்கான றெடிமேட் உடைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் யாவும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**MANIAM'S**
**16, Modern Market,**
**JAFFNA.**

உங்களுக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்
எம்மிடம் விஜயம் செய்யுங்கள்
மறவாதீர்கள்

''சேவையே எமது நோக்கம்''

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

**420, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**17, பிரதான வீதி யாழ்ப்பாணம்.**

அன்பளிப்பு

## கொம்மேஷல் ஸ்தாபனம்

- அச்சகம்
- பாதுகாப்புச் சேவை
- பிரயாணச் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் அரசினர் மகளிர் கலாசாலை உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள கொமர்ஷல் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

# David Grave Stores

*General Grave Merchant'*

212/1, Gas Work Street,
Colombo 11.

*Phone*: **34601**

***Branches*:**

Arthur Traders
*66, Saunder's Place,*
*COLOMBO-12.*

David Grave Stores
*18, Dematagoda Road,*
*MARADANA.*

*463, 2nd Division,*
*MARADANA.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org